# தமிழ் மொழி - இன - இலக்கிய மேம்பாடு

## மறைமலையடிகளாரின் பங்களிப்பு

முனைவர் நா. செயப்பிரகாசு

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113

# தமிழ்மொழி-இன-இலக்கிய மேம்பாடு

## மறைமலையடிகளாரின் பங்களிப்பு

முனைவர் நா. செயப்பிரகாசு
தலைமைத் தமிழ்ப் பேராசிரியர்
பச்சையப்பன் கல்லூரி, சென்னை-30.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
**International Institute of Tamil Studies**
*C.P.T. Campus, Taramani, Chennai - 600 113*

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the Book | : | Tamilmoli - ina - ilakkiya mēmpāṭu Maraimalaiyaṭikaḷārin paṅkaḷippu. |
| Author | : | Dr. N. Jayaprakash |
| General Editor | : | Dr. Annie Thomas |
| Publisher & © | : | International Institute of Tamil Studies<br>C.P.T. Campus, Chennai - 600 113.<br>Phone : 254 2992 |
| Publication No. | : | 431 |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Year of Publication | : | 2002 |
| Paper Used | : | 18.6 kg TNPL Maplitho |
| Size of the Book | : | 1/8 Demy |
| Printing type Used | : | 10 points |
| No. of Pages | : | vi + 74 |
| No. of Copies | : | 1200 |
| Price | : | Rs. 20 (Rupees Twenty only) |
| Printing | : | United Bind Graphics<br>101-D, Royapettah High Road<br>Chennai - 600 004 |
| Subject | : | Literary Criticism |


அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகட்கு நிறுவனம் பொறுப்பன்று

முனைவர் சா. கிருட்டினமூர்த்தி
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113

## அணிந்துரை

தமிழ்மொழி, தமிழ் இன வளர்ச்சிக்குப் பெரும் தொண்டாற்றிய சான்றோர் பலருள் குறிப்பிடத்தக்கவர் மறைமலையடிகளார். இவர், தமிழின் பன்முக வளர்ச்சிக்கும் தமிழரின் உயர்வுக்கும் தொண்டு செய்வதைத் தம் வாழ்வுப் பணியாகக் கொண்டிருந்தார். தமிழன் வாழ்ந்தால் தமிழ் வாழும்; தமிழ் வாழ்ந்தால் தமிழன் வாழ்வான் என்னும் சிந்தனை உணர்வோடு விளங்கினார்.

தனித்தமிழ் இயக்கத்தின் தந்தை எனப் பாராட்டப்படும் மறைமலையடிகளார் பிறமொழிக் கலப்பில்லாத தனித்தமிழில் எழுதுவதே சிறந்தது என்ற எண்ணம் உடையவர். அதனால்தான் ‘பிறமொழிக் கலப்பு மொழித் தேக்க நிலைக்கும், வளர்ச்சி யின்மைக்கும் வழி வகுக்கும்’ என்று கூறினார்.

தமிழ் உணர்வைத் தமிழர்களே இன்று மறந்து வரும் நிலையில் அவர் கூறும் ஒரு கருத்து நோக்குதற்குரியதாகும். “தமிழை மறப்பவர் உயிரை அழிப்பதாய் முடியும்” என்ற அவருடைய சிந்தனை இன்றைய தமிழர்களுக்கு ஓர் எச்சரிக்கையாக அமையலாம். தனித்தமிழ்க் கல்வி தமிழ்ச் சமுதாய வளர்ச்சிக்குப் பெரிதும் தேவை என்பதைப் பலகாலும் வலியுறுத்தியுள்ளார். “கோயில் வருவாய்களைத் தனித்தமிழ்க் கல்விக்கும், தமிழ்ச் சமுதாய வளர்ச்சிக்கும் பயன்படுத்தவேண்டும்” என்ற மறைமலை யடிகளாரின் கூற்று இன்று அனைவரையும் வியப்பில் ஆழ்த்திச் சிந்திக்க வைக்கும் திறன் கொண்டதாக அமைகிறது. “ஒரு மொழிப் புலமையை முற்றுவித்துக் கொண்ட பின்னர் மற்ற மொழிப் புலமையை முற்றுவிக்க முயலவேண்டும்” என்ற மொழி பற்றிய அவர்தம் ஆழ்ந்த சிந்தனை இன்றைய கல்வியாளர்க்குச் சிறந்த கருத்தாக அமையலாம்.

இவ்வாறு பன்முகநோக்கில் மொழி பற்றியும், சமுதாயம் பற்றியும் சிந்தித்த மறைமலை அடிகளார் பெயரில் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினர் அமைத்த அறக்கட்டளையின் ஆறாம் சொற்பொழிவு 19-09-2002 அன்று நடைபெறுகிறது. இச்சொற்பொழிவை, பச்சையப்பன் கல்லூரித் தமிழ்த்துறைப்

# தமிழ்மொழி - இன - இலக்கிய மேம்பாடு
## மறைமலையடிகளாரின் பங்களிப்பு

தமிழ், மொழி நிலையிலும், இன அளவிலும் இலக்கியத் திறனிலும் புத்துணர்வும் புதுப்பொலிவும் கொண்டு விளங்குதலுக்குத் தொண்டாற்றிய பெருமக்கள் மிகப் பலர். சிலர் எழுத்தாலும், சிலர் பேச்சாலும், சிலர் சிந்தனை வளத்தாலும், சிலர் சிறப்பான செயல்பாடுகளாலும் பலநிலைகளில் பாடுபட்டனர். சிலர் தம் எண்ணங்களைப் பதிவு செய்தும், புதுத்துறைகளில் புத்தாக்கம் காட்டிப் புதுமுயற்சிகளுக்கு முன்னோடியாய் விளங்கினர். சிலர், போலிகளைப் புறமுதுகிடச் செய்தும், தீயவை களைந்து நல்லன விளையச் செய்தும் தொண்டாற்றினர். இவ்வனைத்து முறைமைகளிலும் முழு முனைப்புடன் ஈடுபட்டுத் தம் இடையறாப் பணிகளாலும், படைப்புகளாலும் தமிழ்மொழி- இன - இலக்கிய மேம்பாட்டுக்குத்தம் வளமான பங்களிப்பைச் செய்து சிறந்தவர் மறைமலை அடிகளார்.

சொற்பொழிவாளர், கட்டுரையாளர், பல்துறைப் படைப்பாளர், திறனாய்வாளர், ஆய்வாளர், இதழாசிரியர், மொழியாசிரியர், சமயவாசிரியர், பதிப்பாளர் எனப் பல நிலைகளில் மறைமலை அடிகளார் தம் தமிழ்ப் பணிக்குக் களம் அமைத்துக் கொண்டார். இவ்வனைத்துப் பணிகளுக்கும் அடிகளாரின் தமிழ் அன்பும் ஈடுபாடுமே அடிப்படைகளாயிருந்தன. எத்துறையாயினும் தமிழ் மொழிநலக் காப்பும் வளர்ப்பும், தமிழ்ச் சமுதாய மேன்மையும் நன்மையும், தமிழ் இலக்கிய வளமும் வளர்ச்சியும், தமிழ்ச் சமய உண்மையும் முதன்மையும் என இவற்றையொட்டியே அடிகளாரின் அனைத்து முயற்சிகளும் அமைந்தன. தமிழ்மொழி-

இன - இலக்கியத் தனித்தன்மை காத்து, அவற்றின் செழிப்புக்கும் சிறப்புக்கும், பிறமொழி சமுதாய இலக்கிய நலன்களை ஏற்றுத் தனித்தன்மை கெடாமல், பொதுத்தன்மை போற்றியவர் அடிகளார். அவரது அனைத்து வகைப் படைப்புகளிலும், மொழி நலம், சமுதாய உணர்வு, தமிழின நலம், ஆய்வுணர்வு ஆகியன இரண்டறக் கலந்து இழையோடியிருப்பதைக் காணலாம். அடிகளாரின் இளமைக் காலப் பயிற்சியும், அவரது ஈடுபாட்டுணர்வும், சமுதாயச் சூழலும், மொழி இலக்கிய நிலைகளும், சமய நம்பிக்கைகளும் அவரது பணிகளில் பல போக்குகளை உருவாக்கின.

## வாழ்க்கைச் சுருக்கம்

நாகையை அடுத்த காடம்பாடியில், சொக்க நாதருக்கும் சின்னம்மைக்கும் 15-7-1876 மாலை 6.35 மணிக்கு வேதாசலம் பிறந்தார். இளமையிலேயே பழந்தமிழ் நூல்களில் அடிகளாரிடம் ஏற்பட்ட ஈடுபாடும் பயிற்சியும் அவரது பிற்கால முயற்சிகளுக்குத் துணையும் தூண்டுகோலுமாயின. "எமது பதினைந்தாம் ஆண்டில் முறைப்படி துவங்கிய தமிழ்ப் பயிற்சியானது எமது இருபத்தோராம் ஆண்டிற்குள் தொல்காப்பியம், திருக்குறள், திருச்சிற்றம்பலக் கோவையார் என்னும் மூன்று நூல்களையும் முழுதும் நெட்டுருச் செய்து முடித்தோம். கலித்தொகை, பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம், நாலடியார் முதலிய நூற்களிற் பெரும்பகுதிகள் அங்ஙனமே நெட்டுருச் செய்து முடிக்கப்பெற்றன. சிவஞான போதம், சிவஞான சித்தியார் என்னும் நூல்களிரண்டும் முழுமையும் நெட்டுருச் செய்து முடிக்கப் பெற்றன. இவையேயன்றி, நன்னூல் விருத்தி, தொல்காப்பியச் சூத்திர விருத்தி, யாப்பருங்கலக் காரிகை, இறையனார் அகப்பொருளுரை, தண்டியலங்காரம் முதலான நூல்களும் முன்னமே முழுமையும் நெட்டுருச் செய்து முடிக்கப்பட்டவையாகும். கல்லாடம், சீவகசிந்தாமணி, பெரியபுராணம் என்னும் நூல்களின் சொற்சுவை, பொருட் சுவைகளிற் பெரிதும் மூழ்கியிருந்தும் அவற்றிலிருந்தெடுத்துப் பாடஞ் செய்த செய்யுட்கள் மிகுதியாயில்லை என்றாலும் அவற்றின் சொற்பொருள் நயங்கள் எமதுள்ளத்தில் வேரூன்றி நின்றன. இங்ஙனமாக விழுமிய தமிழ்ப் பழ நூல்களில் எமது கருத்து ஈர்ப்புண்டு நின்று, பயின்ற பயிற்சியினாலேயே செய்யுளும் உரையும்

தனிச்செந்தமிழ் நடையில் எழுதுந்திறம் எமதிளமைப் பருவத்திலேயே எமக்கு வாய்ப்பதாயிற்று" என்னும் அடிகளாரின் கூற்றிலிருந்தே அவரது இளமைப் பருவம் முழுக்க முழுக்கத் தமிழின்பக் கல்வியிலும் கருத்திலும் கலந்து நின்றதையும், நிறைந்ததையும் உணரலாம்.

இளமையில் நாகையில் புத்தகக்கடையில் கிடைத்த வாய்ப்பும், 1888இல் நாகை வெஸ்லியன் மிஷன் காலேஜ் பயிற்சியும், 1896இல் திருவனந்தை ஆங்கிலப் பள்ளியில் தமிழாசிரியரான வாய்ப்பும், பின்னர் அவரது இருபத்தோராம் அகவையில் சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியரான சூழலும், பேராசிரியர் சுந்தரம்பிள்ளை, பேராசிரியர் வி.கோ. சூரிய நாராயண சாஸ்திரி ஆகியோரது அன்பும் நட்பும் மறைமலை அடிகளாரின் தமிழுணர்வுக்குத் தக்க துணைகளாயின.

"எமக்கு ஆண்டு 21. மிக இளைஞனாயிருந்த காலம். அப்போதுதான் யாம் சென்னைக் கிறித்துவக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக அமர்ந்து மாணாக்கருக்குத் தமிழ் இலக்கண இலக்கியங் கற்பித்து வரலானதும், அந்நாளில் யாம் பழைய தமிழ் இலக்கண இலக்கிய நூற்பயிற்சியில் மட்டுப்படா விழைவு கொண்டு கருத்தூன்றியிருந்தேம்", எனத் திருவொற்றி முருகர் மும்மணிக்கோவை நூலின் முகவுரையில் அடிகளார் தொடங்கித் தொடர்ந்து உரைத்திருப்பது அவரது இளமைக்காலத் தமிழ்க் கல்விக்கும் கருத்து வளங்களுக்கும் அடிப்படையான சூழ்நிலைகளை விளக்குகிறது. வெ. நாராயணசாமிப் பிள்ளை, சோமசுந்தர நாயகர் ஆகியோரின் ஆழ்ந்த புலமையும் ஆசிரிய அன்பும் அடிகளார் உணர்வுகளுக்கு உரமேற்றின.

1893இல் சவுந்தரவல்லியை மண முடித்துக் கொண்ட அடிகளாருக்குத் திருஞானசம்பந்தம், மாணிக்க வாசகம், திருநாவுக்கரசு, சுந்தரமூர்த்தி, சிந்தாமணி, நீலாம்பிகை, திரிபுரசுந்தரி என்னும் மக்கள் அமைந்தனர். இதனால், இப்பெயர்களில் அடிகளாருக்கு இருந்த சைவ சமய அன்பும் ஆழ்ந்த ஈடுபாடும் தெரியவரும்.

அடுத்து அமைந்த காலங்களில், ஆறுமுக நாவலர், சித்தாந்தப் பேராசிரியர் சிவகுருநாதர், ரா. ராகவையங்கார், திருப்பாதிரிப்

புலியூர் ஞானியார் சுவாமிகள், வ.உ.சி., தண்டலம் பால சுந்தரனார், சிவராச யோகர் இராசானந்த சுவாமி, திரு. வி.க. ஆகியோரது தொடர்பும் அடிகளாருக்கு அமைந்தது.

1908 முதல் துறவில் ஆர்வங்காட்டத் தொடங்கிய அடிகளார், 27-8-1911 இல் துறவியானார். ஆனாலும், தனித் தமிழின்பாலும், தமிழ் இனம், தமிழ்ச் சமயம், தமிழ் இலக்கியம் இவற்றின் பாலுமிருந்த பற்றினை விடாமல் அடிகளார் தம் எழுத்தாலும் பேச்சாலும் தொடர்ந்து தொண்டாற்றினார். சைவம் சார்ந்த துறவு நிலைகளையும் நெறிகளையும் மேற்கொண்டார். சைவம் சார்ந்த துறவியாயினும் காலப்போக்கில் 1916இல் அடிகளாரிடம் முகிழ்த்த தனித்தமிழ் உணர்வு அவரது சமயப் பணியிலும் இலக்கியப் பணியிலும் ஒரு புதுப்பொலிவை மலரச் செய்தது. 1948இல் நடந்த இந்தி எதிர்ப்புப் போராட்டக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கிப் பெரியார், திரு.வி.க., அண்ணா, பாரதிதாசன், தெ.பொ.மீ. ஆகியோருடன் இணைந்து செயல்படும் மொழிக்காவலராகவும் அடிகளார் விளங்கினார்.

15-9-1950 வெள்ளியன்று பிற்பகல் 3.30 மணிக்கு அடிகளார் மறைந்தார். 16-9-1950 அன்று ஊர்வலமாகக் கொண்டு செல்லப்பட்டு அடிகளார் உடல் எரியூட்டப்பட்டது.

அடிகளாரின் தமிழ் நெஞ்சமும், தமிழினப்பற்றும் இலக்கிய ஈடுபாடும், சமய நெறியும் நேர்மையும் அவர்களது பொழிவுப் பொருள்களில் நன்கு புலப்படும். அடிகளாரின் தொடக்க காலப் பணிகள் அனைத்தும் பொழிவுகளாகவே பூத்தன. பின்னரே அவை படிப்படியாகக் கட்டுரைகளாகக் காய்த்தன. காலப்போக்கில் அவை இனிய நூல்களாகக் கனிந்தன. ஒவ்வொரு நிலையிலும் அவற்றில் தமிழ் மணமும், பயனும், சுவையும் நிறைந்து செறிந்திருந்தன என்பது உண்மை.

## பொழிவுப் பொருட்கள்

'அருட்பா' பேருரை அடிகளாரின் பொழிவுகளில் சொற்போரை அடுத்தமைந்த பேருரையாகும். பண்டைக்காலத் தமிழர் - ஆரியர், ஞானசம்பந்தர், சைவ சித்தாந்தம், மெய்கண்ட

சித்தாந்தத்தின் மேன்மை, பாண்டியர் தமிழ்ச் சங்கம், முத்தி சாதனம், திருச்சிற்றம்பல விளக்கம், சாங்கியமும் சித்தாந்தமும், கீதை, சித்தாந்தமும் இலக்கியமும், திருவள்ளுவர், சித்தாந்த போதம், பண்டைத் தமிழர் வீரவாழ்க்கை, அன்பு, உளவியல், கடவுளியல், கல்வியியல், சமரச சன்மார்க்கம், வேதாந்தமும் சித்தாந்தமும், சைவ சித்தாந்தத்திற்கு முடிவு, உலக மதமும் சமரச சன்மார்க்கமும், வான் விலங்கு, சன்மார்க்க லட்சியம், சீவகாருணியம், சித்தாந்தம், பிராணாயாமம், பிரணவம், சம்பந்தர் வரலாற்றுண்மை, சிவலிங்கம், பக்தி, ஆத்மவிசாகம், குகப்படலம், தமிழ், உமாமகேசுவரன், ரிக் வேதமும் பழைய உபநிடதங்களும், ஆத்ம லட்சணம், தமிழர் நாகரிகம், திராவிட நாகரிகம், சாங்கியமும் சைவ சித்தாந்தமும், உலக மதம், கோயில் வணக்கம், சுந்தரர், மாணிக்கவாசகர், வேதாந்த சித்தாந்த சமரசம், கொல்லாமை, உயிர்களிடத்தன்பு, சைவ சமயத்தின் குறிக்கோள், இந்து மதம், சைவ சமய மாண்பு, நடராஜமூர்த்தம், அப்பூதியடிகள், பண்டைத் தமிழும் இற்றைத் தமிழும், அன்பே சிவம், பசுபதிபாச இலக்கணம், கடவுளின் ஆண் பெண் வடிவத் தன்மை, கோயில் வணக்கம், பிறவிப் பயன், தாயின் கடமை, உயிர்ப் பண்பு, தமிழ் மொழி ஓர் உயர்தனிச் செம்மொழி, இந்தியாவில் எமது பணிகள், குறள், மக்களின் உயிரிலக்கணம், கடவுளின் ஆண் பெண் உருவ நிலை, தமிழரின் கடவுட் கொள்கை, சைவ சித்தாந்தமும் கடவுள் இலக்கணமும், தனித்தமிழ் நலம், ஒன்றென்றிரு, சிவம், யோகம், திருக்காளத்திக் காட்சியும் கண்ணப்பர் வரலாறும், கடவுள் உருத்திர வடிவினர் என்பதற்கான காரணம், சிறு தேவதைகட்கு உயிர்ப்பலியிடலாமா? சைவ சித்தாந்தத்தின் உயர்வு, கடவுள் நிலைக்கு மாறான கொள்கைகள் சைவம் ஆகா, தமிழர்க்கு மாறான கொள்கைகள் தமிழர்க்காகா, ஒன்றே குலமும் ஒருவனே தேவனும், தமிழின் தொன்மையும் உயர்வும், இயற்கையும் கடவுட்காட்சியும், இந்தி பொதுமொழியா என அமைந்த அடிகளாரின் பொழிவுப் பொருள்களைப் பகுத்தால், அ) தமிழ்மொழி நலமும் வளமும், ஆ) தமிழின மேம்பாடு, இ) தமிழ் இலக்கியச் செறிவும் சிறப்பும், ஈ) தமிழ்ச் சமயத் தூய்மையும் மேன்மையும் என்ற தலைப்புகளுக்குள் அடக்கலாம். இவற்றினூடே அன்பும், சமத்துவமும், கொல்லாமையும்,

துறவுநெறியும், மொழிப் பற்றும் கலந்து நிறைந்திருப்பதையும் கண்டு மகிழலாம்.

இனிய தமிழில் இன்றியமையாச் செய்திகளை உள்ளங் கொள்ளுமாறு உரையாற்றுவதில் வல்லவர் அடிகளார். பொருளழகும், பொலிவுமிகு தொடர்களும் கொண்டு இனிமையும் ஈர்க்கும் திறனும் கொண்ட செறிவுமிகு செந்தமிழ்ப் பொழிவுகளாக அடிகளாரின் சொற்பொழிவுகள் அமைந்தன.

"அன்பர்களே! தமிழ் என்பதும் ஓம் என்றே கொள்ளப்படும். அச்சொல்லில் உள்ள தமி என்னும் பகுதியில் அ, இ என்னும் உயிரெழுத்துக்கள் உள்ளன. ஓ என்பதில் அ, உ என்னும் இரண்டெழுத்துக்கள் காணப்படும். இ - என்னும் இடை உயிர் மறைவாயிருக்கின்றது. இ - இல்லாமல் உ - உண்டாக வழியில்லை. இ - எழுந்தபின் உ - உண்டாகாமற் போவதும் இயல்பாகாது. சிலர் தமிழு என்று ஒலிப்பதற்கும் இது காரணம். சிற்றம்பலத்தின் சொற்பிரிப்பான சிறு அம்பலம் என்பதினும் அ, இ, உ மூன்றும் இருப்பதைக் காணலாம். ஆதலால் ஓகாரமும் அ, இ, உ மூன்றும் உடையதென்றே கொள்ளப்படும். இதனால் தமிழ் என்பதும் ஓம் என்பதும் ஒன்றே ஆயின" -என்பது போன்று அடிகளாரின் பொழிவு, நுட்பமும் கருத்துச் செறிவும் கொண்டதாகவும், இனிய தமிழன்பும் இறையன்பும் இணைந்ததாகவும் இலங்குதல் காணலாம்.

தாம் ஆற்றவிருக்கும் சொற்பொருளை முறையாகப் பகுத்து, முழுமையாக எண்ணி அவற்றை வகுத்தும் தொகுத்தும் வரிசைப்படுத்தியும் எழுதிக் கொள்வது வழக்கம். முழுமையாக நூலொன்றை முழுமையாகத் துய்த்த நிறைவை அடிகளாரின் பொழிவு தரும். பழைய பாடல்களுக்குப் பொருத்தமான புதுப் பொருள்களைப் பொலிவுறப் புலப்படுத்துவதில் வல்லவர் அடிகளார். புராண மேடைகளாக மட்டும் அன்றிருந்த தமிழ் மேடையைப் புலவர், மாணவர், பொதுமக்கள் என எல்லோரையும் ஈர்க்கும் பொது மேடையாகப் புதுக்கியவர் அடிகளார். பொழிவுகளுக்கிடையே பொருத்தமான இசைக் கருவிகளுடன் பாடல்களைப் பாடி அவையினரை ஈர்க்கும் இசைப் பொழிவுகளுக்கும் இடம் அளித்தவர் மறைமலை அடிகளார். தம்

மக்களையும், அவையினர் முன் அழகுறப் பேசப் பழக்கியும், அவர்வழித் தம் சொற்பொழிவு தொடர்பான கருத்துக்களைக் கேட்டறிந்தும் பயிற்சியளித்தவர் அடிகளார். அடிகளாரின் சொல்லாற்றலை நாரண துரைக்கண்ணன், அழகரடிகள், ஔவை சு. துரைசாமிப் பிள்ளை, ராபி. சேதுப்பிள்ளை, கா. அப்பாதுரை, சுத்தானந்த பாரதியார், அ.ச.ஞா., பாவாணர் ஆகியோரது குறிப்புகளிலிருந்து நன்குணரலாம். "திருவாளர் மறைமலையாரின் சொற்பொழிவின்பத்தில் மூழ்கிவிட்டேன். அவர் இனிய பேச்சொலிகள் என் இரண்டு செவிகளிலும் இன்ப முழக்கஞ் செய்கின்றன" என்னும் உவே. சாமிநாதையரின் கூற்று இங்குக் குறிப்பிடப்பட வேண்டியதாகும்.

## கட்டுரைகள்

உணர்ச்சி மேலீட்டில் உருப்பெறுவன கவிதை. அறிவுச் சமன்பாட்டில் ஆற்றல் வாய்ந்தனவாக அமைவன உரைநடை. உரைநடையில் கவிதையின் நலன்களையும் கலந்து கருத்துக்களின் விரிவு விளக்கம், தெளிவு ஆற்றலோடு அமைகிற போது உரைநடை உருவாகிறது. கருத்துக்களின் கட்டுக்கோப்பும் வைப்புமுறையும் உரைநடையிலிருந்து கட்டுரைகளை வேறுபடுத்திச் சிறப்புச் செய்கின்றன; சேர்க்கின்றன. புலப்படுத்தும் முறையிலும், புரிய வைக்கும் நிலையிலும் கட்டுரைகள் கருத்தின் வெற்றிக்குப் பெரிதும் துணை செய்கின்றன.

பொழிவுகளுக்காகத் தாம் எடுத்த - எழுதிய குறிப்புகளை முறைப்படுத்தியும், முழுமைப்படுத்தியும், அவற்றைக் கட்டுரைகளாக ஆக்கினார் மறைமலை அடிகளார். அடிகளாரின் கட்டுரைகள் கருத்துச் செறிவோடும், நடை நலனோடும், மொழிச் செம்மையோடும் முறைமைப்படுத்தப்பட்ட முயற்சிகளாக அமைந்தன. அடிகளாரின் கட்டுரைகள் பல அவரது வாழ்நாளிலேயே அன்று வந்த சிற்றேடுகளிலும், செந்தமிழ்ச் செல்வி, ஞானசாகரம், காரைக்கால் 'திராவிட மந்திரி', நாகை நீலலோசனி, பாஸ்கர ஞானோதயம், இந்து மனிதாபிமானி, விவேகாமிர்தம் ஆகிய இதழ்களிலும் வெளிவந்தன. நாகை நீலலோசனியில் தம் கட்டுரைகளை அடிகளார் 'முருகவேள்' என்ற புனைபெயரில் எழுதினார்.

பல்துறைத் திறம் வாய்ந்தவரான அடிகளாரின் கட்டுரைகள், தமிழ்மொழி நலன்களைக் கருத்திற் கொண்டதாகவும், தமிழ்ச் சமுதாய மேம்பாட்டை எண்ணியும், தமிழ்ச் சமய மேன்மைகளை எடுத்துக்காட்டி வலியுறுத்தியும் அமைந்தன. அக்கட்டுரைகளில் இலக்கிய நலன்களும் கூறுகளும் எங்கும் நிறைந்து எழிற்கட்டுரைகளாக அவற்றை விளங்கச் செய்தன.

முருகவேள் கண்ட காட்சி, முருகவேள் அறிந்த படைப்பின் வியத்தகு தோற்றங்கள், முருகவேள் கனவிற் கண்ட துன்பமாலை, மராடன் கண்ட காட்சி, முருகவேள் கனவிற்கண்ட ஓவியச்சாலை, பேய்களும் ஆவிகளும் என்ற தலைப்புகளிலான கட்டுரைகளைக் கொண்ட தொகுப்பு நூல் சிந்தனைக் கட்டுரைகள். பலகாலச் சூழ்நிலைகளில் எழுதியிருப்பினும், அவற்றில் மொழித்தூய்மை, தமிழ்மக்களின் வாழ்க்கை நலம், தமிழர் சமயக் கோட்பாடுகள், உலகியல் ஆகிய உண்மைகளை அடியொற்றியே அடிகளார்தம் கட்டுரைகள் அமைந்தன. அவற்றைத் தொகுத்தும் ஒருங்கிணைத்தும் நூல்களாக வெளிக்கொணரும் நூல் முயற்சியையும் அடிகளாரே செய்தார். பொழிவாளராகப் பொலிவுற்ற அடிகளார் கட்டுரையாளராக மாறி நூலாசிரியராகவும் விளங்கத் தொடங்கினார்.

கடவுள் நிலை, சைவசமயப் பாதுகாப்பு, திருக்கோயில் வழிபாடு, சிறு தேவதைகட்கு உயிர்ப் பலியிடலாமா? சீவகாருணியம், கடவுளுக்கு அருளுருவம் உண்டு, கல்வியே அழியாச் செல்வம், கல்வியுங் கைத்தொழிலும், பகுத்துணர்வும் மாதரும், தமிழ்த்தாய், தமிழிற் பிறமொழிக்கலப்பு, தமிழ் மாட்சி, அறிவு நூற்கல்வி, தமிழ் நாட்டவரும் மேல்நாட்டவரும், உடன்பிறந்தார் ஒற்றுமை, கூட்டு வாணிகம், பெண் மக்கள் கடமை, பெற்றோர் கடமை, என்பன அடிகளாரின் கட்டுரைத் தலைப்புகளாகும். சமயக் கடமைகள், சமுதாயக் கடமைகள், மொழிக் கடமைகள், வாழ்வியல் கடமைகள், இலக்கியக் கடமைகள் என அமையும் பல்வகைக் கடமைகளையும் அடிகளார் தம் கட்டுரைப் பொருளாக்கித் தம் 'அறிவுரைக் கொத்து' எனும் நூலில் அமைத்து ஆற்றுப்படுத்தியுள்ளார்.

மலை, கடல், காடு, விளைநிலம், பாலை வெளி என்னும் தமிழர்தம் பகுப்பு நிலங்கள் ஐந்தையும் அவற்றின் கூறுகளையும் விளக்கியிருக்கும் அடிகளார், சிறுவர்க்கான கடமைகள், செயல்பாடுகள், கல்விமுறைகள், உழைப்பும் உயர்வும் ஆகியன பற்றித் தம் கட்டுரைகளில் செந்தமிழில் சிறக்க வெளிப் படுத்தியுள்ளார். மேலும் சிற்றூர்களின் செயல்முறைகளையும் இயல்பு நிலைகளையும் உண்மைகளையும் 'சிறுவர்க்கான செந்தமிழ்' எனும் கட்டுரை நூலில் எழுதியுள்ளார்.

மக்களின் முக்கால உணர்வு, தமிழ் மக்களின் பண்டை நாகரிகம், பணிகர் ஆரியர் அல்லர் தமிழரே, புலவர்களே நாகரிகத்திற்குத் தாயகம், பண்டைப் புலவர் தமிழ் ஓம்பினமை, பண்டைப் புலவர் முப்பால் ஒழுக்கம் ஓம்பினமை, இன்பவொழுக்கம், பொருளறவொழுக்கம், அரசர்க்குரிய கடமை, குடிமக்கட்குரிய கடமை, புலவர்தம் பரந்த தூய துறவுள்ளம், பின்னைத் தமிழ்ப் புலவர், தமிழாசிரியர் ஆரியத்தில் ஆக்கியவை, பிற்காலத் தமிழ் புலவர் என்னும் தலைப்பிலான கட்டுரைகளைக் கொண்டது 'முற்கால - பிற்காலத் தமிழ்ப் புலவோர்' என்னும் நூலாகும். பழந்தமிழர் பண்பும் பணியும், பழந்தமிழ்ப் புலவோரின் படைப்பும் தொண்டும், பண்டைய மாந்தர் ஒழுங்கும் உள நிலையும், பிற்காலத் தமிழ்ப்புலவோரின் போக்கும் அவற்றின் விளைவும் தமிழ்மொழி - இன - இலக்கியக் களங்களில் ஏற்படுத்திய விளைவுகளை விரிவாக விளக்கியுள்ளார். அடிகளாரின் கட்டுரைகள் ஆழமான பொருட் செறிவுக்கும் பண்பாட்டுப் பாதுகாப்புக்கும் இடமாயிருப்பதைக் காணலாம். தமிழ்மொழி இலக்கிய நிலைகளில் தமிழ்ப் புலவோரின் பங்கும் பணியும் பற்றி விரிவாக விளக்கியமைகின்றன பெரும்பாலான இந்நூற் கட்டுரைகள்.

பழைய நாகரிக மொழிகள், தமிழும் புதுமொழிகளும், இந்தியர் தாய்மொழி கல்லாதவர், ஆங்கிலம் போல் இந்தியும் அயல்மொழியே, இந்தி பொது மொழியன்று, இந்தி மொழி வரலாறு, இந்தி மொழி நூல்கள், தமிழைப் பொதுமொழி யாக்குதலின் நன்மை, தமிழ் அல்லாத மொழிகள் வறியன - புதியன, தமிழ் பொதுமொழியாகாத காரணம், ஆங்கிலமே பொது

மொழியாதற்குரித்து என்னும் தலைப்புகளிலான கட்டுரைகளைக் கொண்டது, 'இந்தி பொதுமொழியா?' என்னும் கட்டுரை நூலாகும். பழைய மொழிகளின் பண்பட்ட நிலைகளையும், புதிய மொழிகளின் போக்குகளையும், மொழி வரலாறுகளும், மொழிகளுக்கிடையேயான தொடர்புகளும், மொழிகளின் திறங்களும், தமிழர்தம் மொழியறிவுத் திறங்களும், பொது மொழியாகத் தக்கனவற்றின் தகுதிகளும் குறித்து இந்நூற் கட்டுரைகளைச் சிறந்த மொழியியல் - வரலாற்று அறிஞர், ஆய்வாளர் நிலையில் - ஒப்பீட்டு நிலையில் தம் கட்டுரைகளை ஆக்கியுள்ளார் அடிகளார்.

திங்களைத் தொழுதல், சந்தன மரம், கால தியன் கிரிசெலான் கதை, மக்கள் வாழ்க்கையின் நிலையாமை, திருவள்ளுவர், பழம்பிறவி நினைவு, மாமரம், அறிவும் உழைப்பும் விடா முயற்சியும், திருவள்ளுவர் வாழ்க்கை, அறஞ்செய்கை, கானத்தோகை தேவமணி கதை, தென்னைமரம், மக்கள் வாழ்க்கை என்னும் தலைப்பிலான கட்டுரைகளைக் கொண்டது 'இளைஞர்க்கான இன்றமிழ்'. இயற்கையின் கூறுகளையும் அதன் இயல்பு - பயன்பாடுகளையும், பழந்தமிழ்ப் பெரும்புலவர்களின் வாழ்வு - வரலாறுகளையும், இயற்கை வழிபாட்டின் இன்றியமையாமை, வாழ்வின் வளத்திற்கான வழிமுறைகள் தொடர்பான கருத்துக்களையும் இக்கட்டுரைகளில் வழங்கியுள்ளார் அடிகளார்.

சிந்தனைக் கட்டுரைகள் (1905), அறிவுரைக் கொத்து (1921), சிறுவர்க்கான செந்தமிழ் (1934), முற்கால-பிற்காலத் தமிழ்ப் புலவோர் (1936), இந்தி பொதுமொழியா (1938), இளைஞர்க்கான இன்றமிழ் (1957) என்னும் நூற்கட்டுரைகள் முதலில் தனித் தனியாகவும் பின்னர்த் தொகுக்கப்பெற்று நூலாகவும் அவர்தம் வாழ்நாளிலேயே வெளிவந்தவை.

மறைமலை அடிகளாரின் அறிவுரைக் கோவை, மறைமலை அடிகளாரின் உரைமணிக் கோவை என்னும் இருநூல்களும் அடிகளாரின் மறைவுக்குப் பின்னர் (1971, 1972) தொகுக்கப் பெற்றவை. கட்டுரை வடிவில் அவை, அவர்தம் வாழ்நாளிலேயே உருப்பெற்று வெளியானவை.

அம்பலவாணர் திருக்கூத்தின் உண்மையும் ஞான யோகமும், மாணிக்க வாசகர் மாட்சி, தமிழின் ஒலி எழுத்துக்கள், தமிழ் மிகப் பழைய மொழியாமென்பது, திருவள்ளுவர் திருக்குறள், தொல்காப்பிய முழுமுதன்மை, குறிஞ்சிப்பாட்டாராய்ச்சி, இளந்தைக் கால வரலாறு, தமிழ்த் திருவாளர் மணி. திருநாவுக்கரசு, இந்தி பொதுமொழியா?, சீர்திருத்தக் குறிப்புகள் என்னும் தலைப்பிலான கட்டுரைகள் மறைமலை அடிகளாரின் அறிவுரைக் கோவையில் இடம்பெற்றுள்ளவை. இக்கட்டுரைகளிலும் தமிழ்ச்சமயம், தமிழ் மொழி, தமிழ்ப்புலவர், தமிழர் மேம்பாடு என்னும் கருப்பொருள்களே, கட்டுரைப் பொருள்களாக உள்ளமை உணரலாம்.

பொது நிலைக் கழகம், மக்கள் கடமை, தென்புலத்தார் யார், தனித்தமிழும் கலப்புத் தமிழும், இந்தி மொழிப்பயிற்சி ஏற்புடைத்தாகுமா?, நக்கீரனார் தெய்வப்புலமை மாட்சி, திருவள்ளுவர், தமிழ்விடுதூது முகவுரை, சைவ சமயத்தின் நெருக்கடியான நிலை, சைவ சமயத்தின் முதன்மையும் தனிச்சிறப்பும், உள்ளது போகாது இல்லது வாராது, முனிமொழிப் பிரகாசிகை, சைவமும் சைவர் நிலையும் என்னும் தலைப்பிலான கட்டுரைகளைக் கொண்டது மறைமலை அடிகளார் உரைமணிக் கோவையாகும். இக்கட்டுரைகளிலும் அடிகளாரின் மொழியுணர்வு, இனஉணர்வு, சமயச் சார்பு, இலக்கிய ஈடுபாடு தொடர்பான சிந்தனைகளும், செய்திகளும் கட்டுரைப் பொருள்களாயுள்ளமை காணலாம்.

அடிகளாரின் பங்களிப்புகள் தொடர்பான பதிவுகளாக முதலில் அமைவன அவரது கட்டுரைகளே. உரைநடையில், குறிப்பாகக் கட்டுரை இலக்கியத்தின் கட்டமைப்புகளுக்கு முன்னோடி முயற்சியாக அடிகளாரின் கட்டுரைகள் அமைந்துள்ளமை அறியலாம்.

ஞானசாகரம் (1902) (அறிவுக்கடல்), செந்தமிழ் செல்வி (1923) ஆகிய இரு தமிழ் இதழ்களும் அடிகளார் கட்டுரைகள் வெளிவர வாயில்களாக அமைந்தன. The Oriental Mystic Myna (1908), The Ocean of Wisdom (1931) என்னும் இரு இதழ்களும் அடிகளாரின்

கருத்துக்களையும் எழுத்துக்களையும் ஆங்கிலக் கட்டுரை வடிவில் வெளிவர உதவின. அடிகளாரே அவ்விரு ஏடுகளின் ஆசிரியராக இருந்தமை, அவர்தம் இதழாசிரியர் - பதிப்பாசிரியர் - கட்டுரையாசிரியர் என்னும் பல்துறைத் திறனுக்குச் சான்றாயமையும்.

உரியவர்கள், தங்கள் தகுதியையும் பெருமையையும் உணர்வதோடு, பிறரும் அவற்றை அறிந்துணர்ந்து தமிழை - தமிழினத்தை - தமிழ் இலக்கியத்தை மதித்துப் போற்ற வேண்டும் என்னும் விழைவின் வெளிப்பாடே, அடிகளாரின் ஆங்கிலப் படைப்பு முயற்சிகளும், பதிப்பு முயற்சிகளும் ஆகும். இதற்கேற்ற வழியும் வடிவும் கட்டுரைகளும் ஏடுகளும் என்பது அடிகளாரின் எண்ணம். இத்துடன் புத்திலக்கியப் படைப்பும், மொழியாக்க முயற்சியும் தம் முயற்சிகளுக்கு முழுத் துணையாகும் என்றெண்ணியே அடிகள் பிறமொழி - பிறதுறை முயற்சிகளிலும் ஈடுபட்டார்.

'செந்தமிழ் மொழிவளம் அளாவுதலும், சித்தாந்த சைவ உறுதிப் பொருண்மை தேர்தலும் மாணாக்கர் தம் தமிழ்க் கல்வியும் புலமையும் சிறத்தலும் இவ்விதழ் (அறிவுக் கடல்) நோக்க'மெனக் குறிப்பிட்டுள்ள அடிகளார், அதனை அவ்விதழ்க் கட்டுரைகளின் வழி வெளிப்படுத்தியுள்ளார். சோமசுந்தர நாயகரின் வரலாறு தொடர்பான வரலாற்றுக் கட்டுரைகளும், அடிகளாரின் ஆராய்ச்சிக் கட்டுரைகளும், இலக்கியக் கட்டுரைகளுடன் இங்கு இணையாக எண்ணத்தக்கன.

ஆங்கிலத்தில் கட்டுரைகள் எழுதுவதிலும் அடிகளார் வல்லவராயிருந்தார். தம் ஏடுகளில் தக்க அறிஞர்கள் பலரின் மொழி, இலக்கியம், ஆராய்ச்சி, சமயம் தொடர்பான பல கட்டுரைகளை வெளியிட்ட அடிகளார், தம் நூல் முயற்சிக்கான முன்னோடியாகப் பல தொடர்க்கட்டுரைகளையும், தொடர் ஆய்வுகளையும், படைப்புகளையும் வெளியிட்டார். பின்னர், தேவையான கருத்து விளக்கங்களுடன், விரிவுபடுத்தியும் தெளிவுபடுத்தியும், செறிவாக்கியும், மொழித் தூய்மைப் படுத்தியும், அவற்றைப் படிப்படியாக முழு நூல்களாகப் பதிப்பித்து வெளியிட்டார் அடிகளார்.

அடிகளாரின் நூல் முயற்சிகளிலும், நூற்பொருள் - செய்திகளிலும், தமிழ் மொழி நலமும் உணர்வும், தமிழ்ச் சமுதாய உயர்வும், சிறப்பும், தமிழ் இலக்கிய வளமும் வளர்ச்சியும் எங்கும் நிறைந்து சிறந்திருந்தன. அடிகளாரின் சமயம் சார்ந்த நூல்களிலும், வரலாற்று நூல்களிலும், ஆய்வு நூல்களிலும், இலக்கியப் படைப்புகளிலும், மொழியாக்க நூல்களிலும் மொழி, இனம், இலக்கியம் சார்ந்த உணர்வுகளே ஒன்றிக் கலந்திருத்தலைக் காணலாம்.

## அடிகளாரின் நூல்கள்

பொருட் சிறப்பாலும், புலமைத் திறத்தாலும் நிலைத்த புகழுக்கும் நீடித்த பயன்பாட்டுக்கும் உறுதுணையாவன மறைமலை அடிகளாரின் நூல்கள். அவை பல்வகையின; பல்சுவையின. அனைத்து வகை நூல்முயற்சிகளிலும், ஆர்வங் காட்டியும் அயராமல் உழைத்தும் அரும்பணியாற்றியவர் அடிகளார். துறைதோறும் தமிழுக்குத் தொண்டு செய்தவர் அடிகளார். ஈடுபாட்டுடன் உழைத்தால் எல்லாத் துறைகளிலும் சிறக்கலாம்;' எல்லாத் துறைகளையும் சிறக்கச் செய்யலாம் என எழுதிக்காட்டி எடுத்துக்காட்டானவர் அடிகளார்.

செய்யுள் நூல்கள், கட்டுரை நூல்கள், புதுக்கதை நூல்கள், நாடக நூல்கள், இலக்கிய ஆராய்ச்சி - கால வரலாற்று ஆராய்ச்சி- வாழ்வியல் ஆராய்ச்சி - சமய ஆராய்ச்சி - மறை பொருளியல் என அமையும் ஆராய்ச்சி நூல்கள் என்றவாறு அடிகளாரின் முயற்சியால் உருவாயின பல்துறை நூல்கள். இவற்றினூடே மொழியாக்க நூல்களும், தழுவல் நூல்களும் முன்னோடி முயற்சி நூல்களும், புத்திலக்கியப் படைப்பு நூல்களும் உள்ளமை அவரது கூடுதல் திறனையும் சிறப்பையும் வெளிப்படுத்தும்.

திருவொற்றி முருகர் மும்மணிக்கோவை, சோமசுந்தரக் காஞ்சி (யாக்கம்), மறைமலை அடிகளார் பாமணிக் கோவை ஆகியன அடிகளாரின் செய்யுள் நூல்களும் படைப்புகளும் ஆகும். சிந்தனைக் கட்டுரைகள், அறிவுரைக் கொத்து, சிறுவர்க்கான செந்தமிழ், முற்கால பிற்காலத் தமிழ்ப் புலவோர், இந்தி பொது மொழியா?, மறைமலைஅடிகளார் அறிவுரைக் கோவை,

இளைஞர்க்கான இன்றமிழ், மறைமலை அடிகளார் உரைமணிக்கோவை ஆகியன அடிகளாரின் கட்டுரை நூல்கள். 1. The Saiva siddhantha as a Philosophy of Practical knowledge, 2. Ancient and Modern Tamil Poets, 3. Can Hindi be the lingua franca of India என்னும் மூன்று கட்டுரை நூல்களும் ஆங்கிலத்தில் அமைந்தவை.

குமுதவல்லி நாகநாட்டரசி (1911), கோகிலாம்பாள் கடிதங்கள் (1921) என்னும் இரண்டு நூல்களும் புதுக்கதை நூல்கள். சாகுந்தலம் (1934), அம்பிகாபதி அமராவதி (1954) ஆகிய இரண்டும் நாடக நூல்கள்.

பல்துறை ஆய்வாளராக அடிகளார் விளங்கியதும் அவரது பல்துறை ஆய்வு நூல்களைக் கண்டால் தெரியவரும். தெளிவுதரும் வகையில், தேடிக் கண்ட உண்மைகளைத் தம் பல்துறை ஆராய்ச்சி நூல்களில் பதிவு செய்துள்ளார் அடிகளார். முறையான முன்னோடி ஆய்வாளராகவும், ஆராய்ச்சி நெறிமுறைகளை அறிமுகப்படுத்திய ஆற்றலினராகவும் அடிகளார் விளங்குதல் அறியப்பெறும்.

முல்லைப் பாட்டாராய்ச்சியுரை, பட்டினப்பாலை ஆராய்ச்சியுரை, குறிஞ்சிப் பாட்டாராய்ச்சி, திருக்குறளாராய்ச்சி, சிவஞானபோத ஆராய்ச்சி, திருவாசக விரிவுரை, தமிழ்விடுதூது முகவுரை, சாகுந்தல நாடக ஆராய்ச்சி என்பன அடிகளாரின் இலக்கிய ஆராய்ச்சித் திறனுக்குச் சான்றாயமைவன. மாணவர்க்கும் மற்றவர்க்கும் பயன்படும் வகையில் இலக்கிய ஆர்வலராகவும், ஆசிரியராகவும், ஆராய்ச்சியாளராகவும் அடிகளாரால் ஆக்கப் பெற்றவை இவை.

பண்டைக் காலத் தமிழரும் ஆரியரும் (1906), மாணிக்கவாசகர் வரலாறுங் காலமும், முற்கால பிற்காலத் தமிழ்ப் புலவோர் (1936), சோமசுந்தர நாயகர் வரலாறு (1957) என்பன கால வரலாற்று ஆராய்ச்சி நூல்களாகும்.

பொருந்தும் உணவும் பொருந்தா உணவும் (1921), வேளாளர் நாகரிகம் (1923), மக்கள் நூறாண்டு உயிர் வாழ்க்கை (1933) ஆகியன வாழ்வியல் ஆராய்ச்சி நூல்களாகும்.

சைவ சித்தாந்த ஞான போதம், சாதி வேற்றுமையும் போலிச் சைவமும் (1923), கடவுள் நிலைக்கு மாறான கொள்கைகள் சைவமாகா (1929), பழந்தமிழ் கொள்கையே சைவ சமயம் (1930), தமிழர் மதம் (1941) ஆகியன சமயம் சார்ந்த ஆராய்ச்சி நூல்களாகும்.

மரணத்தின்பின் மனிதர் நிலை (1917), யோகநித்திரை அல்லது அறிதுயில் (1922), தொலைவிலுணர்தல் என்னும் மறை பொருளுணர்ச்சி (1935), மனித வசியம் அல்லது மனக்கவர்ச்சி (1937) என்பன மறைபொருளியல் சார்ந்த ஆராய்ச்சி நூல்களாகும்.

இவ்வனைத்து வகை நூல்களிலும், தமிழ்க் காப்புணர்வு - சமுதாய மேம்பாட்டுணர்வு- இலக்கிய ஆராய்ச்சியுணர்வு என்னும் அடிகளாரின் சிறப்புணர்வுகள் செறிந்து நிறைந்திருத்தலைக் காணலாம். தமிழ்மொழி வளம் பெற வேண்டும், அதன் தூய்மை தொடர வேண்டும், கலப்புகள் களைந்தெறியப்பட வேண்டும், தமிழ்ச் சமுதாயம் நல வாழ்வும், அறிவார்ந்த அன்பு வாழ்வும் கொண்டு வலிமை பெற வேண்டும், தமிழில் புத்திலக்கியங்கள் பூக்க வேண்டும், அறிவார்ந்த நடுநிலை நல்லாய்வுகள் வளர வேண்டும், தமிழ்ச் சமுதாயம் அமைத்து எங்கும் எதிலும் தமிழ்ப் பயனும் இன்பமும் பெருகிச் சிறக்க வேண்டும் என்னும் மறைமலை அடிகளாரின் எண்ணங்களே அவரது நூல்களின் உள்ளீடுகளும் உட்பொருள்களுமாகும். அடிகளாரின் படைப்புகளை ஆழ்ந்து கற்றால், அனைத்து வகைத் தமிழ் இலக்கியங்களையும், அனைத்துக் காலத் தமிழ் - தமிழ் மக்கள் - தமிழ்ப் புலவோர் வரலாறுகளையும் ஆழ்ந்து கற்ற நிறைவு கிட்டும். அடிகளாரின் ஆழ்ந்து- அகன்ற- ஆர்வத் தமிழ்க் கல்வியும் திறனும் அவரது நூல்கள் வழி வெளிப்படும்.

சிறந்த படிப்பாளராகவும் - படைப்பாளராகவும் விளங்கிய அடிகளாரின் படிப்பறிவு- படைப்பறிவுப் பதிவுகளாகப் - பயன்பாடுகளாக அவரது நூல்கள் விளங்குதல் வெளிப்படை.

சொற்பொழிவாளராகவும், கட்டுரையாசிரியராகவும், கல்லூரி ஆசிரியராகவும், இதழாசிரியராகவும், பதிப்பு ஆசிரியராகவும், சமயவாசிரியராகவும், உரையாசிரியராகவும், அடிகளார் விளங்கியதால் எப்பொருளையும் அழகுற, கேட்போர் படிப்போர்

மனங்கொள்ளுமாறு சிறப்புறவும், தெளிவுறவும், திருத்தமுறவும், வெளிப்படுத்த அடிகளார் முயன்றதை - அடிகளாரால் முடிந்ததை அவரது நூல்கள் நிறுவுகின்றன. அடிகளாரின் நூற்பொருளும் நுவல் முறையும் தமிழ் வரலாற்றில் - தமிழர் வரலாற்றில் எங்கும் குறிப்பிட்டுக் கூறத் தக்கனவாக விளங்கும் என்பது உண்மை.

அடிகளாரின் நோய்த்துயர் தீர்த்த முருகப்பெருமான் திருவருளைப் போற்றி எழுதப்பட்டது திருவொற்றி முருகர் மும்மணிக்கோவை. இந்நூல் சங்க நூலின் தன்மையை யொத்தது. பழந்தமிழ்ச் சொற்பொருள் நயங்களை நன்கு உணர்ந்து மகிழும் வகையில் சொற்சுவையும் பொருளமைவும் கொண்ட இந்நூலுக்கான உரையை அடிகளாரே செம்மைப்படுத்தினார். தொல்காப்பியம், பத்துப்பாட்டு போன்ற பழந்தமிழ் இலக்கண இலக்கிய நூற்பிழிவாக விளங்குவது இந்நூல்.

தம் ஆசிரியர் சோமசுந்தர நாயகர் நினைவாக அடிகளாரால் ஆக்கப்பட்ட கையறு நிலைப் பாடல்களால் அமைந்த நூல் சோமசுந்தரக் காஞ்சியாக்கம். அடிகளாரின் ஆசிரிய அன்பும், செய்யுள் திறனும் கொண்டு அறிவார்ந்த பண்பாட்டுப் பனுவலாக விளங்குவது இந்நூல்.

அடிகளாரது மாணவர்களின் தேவையை நிறைவு செய்யும் வகையில் ஆக்கப்பட்டது பட்டினப்பாலை ஆராய்ச்சியுரை. பாட்டினியல்பு, பட்டினப்பாலைச் செய்யுள், பொருள் பாகுபாடு, பாலை, வாகை, பாட்டின் வரலாறு, ஆக்கியோன் வரலாறு, பாட்டுடைத்தலைவன், பாட்டின் நலம் வியத்தல், பாட்டின் வழி அறியலாகும் பண்டை நாள் வழக்கவொழுக்க வரலாற்றுக் குறிப்புகள் என்னும் தலைப்புகளில் இந்நூற் செய்திகள் அமைந்துள்ளன. பட்டினப்பாலையாசிரியர் உருத்திரங் கண்ணனாரின் நுட்ப அறிவு, நல்லிசைப் பண்பு, கவின்மிகு காட்சிகளைக் கண்முன் நிறுத்தும் பேராற்றல் ஆகியனவற்றை அடிகளார் அழகுற ஆய்ந்து கண்டு காட்டியுள்ளார்.

இலக்கிய ஆர்வலர்க்கும், ஆராய்ச்சியாளர்க்கும், ஆசிரியர்க்கும் நிறைவுதரும் வகையில் அமைந்தது முல்லைப்பாட்டு ஆராய்ச்சியுரையாகும்.

பொருளின்பம் கெடாதவகையில் மற்றைப் பொருள்களையும் சொல்லிச்செல்லும் அரிய திறன், திறம்படச் செய்யுளை நடத்தும் நுட்பம், இயற்கைப் பொருளைக் கண்டுணர்த்தும் திறம், பொருட்கோவைப் பொலிவு, ஓசையின்ப ஒழுங்குகள் ஆகியனவற்றை நப்பூதனார் கொண்டிருத்தலை அடிகளார் இந்நூலில் சிறப்புற ஆய்ந்து காட்டியுள்ளார். முல்லைப்பாட்டில் பொருள் இடையறல்படும் இடங்கள், முற்றியும் முற்றாமலும் விரிதலடைகிற இடங்கள் என்பன போன்ற சிக்கலான இடங்களைக் கூட அடிகளார் சிறப்புறத் தெளிவுபடுத்தியுள்ளார்.

அடிகளார் இளைஞராயிருந்தபோது, திராவிட மந்திரி, நாகை நீலலோசனி, பாஸ்கர ஞானோதயம், மதாபிமானி ஆகிய தாள்களுக்குக் கட்டுரைகள் எழுதியதும், 'முருகவேள்' என்ற புனைபெயர் கொண்டிருந்ததும் 'சிந்தனைக் கட்டுரைகள்' நூற்குறிப்புகளால் புலப்படுகின்றன.

நடை நலமும் நல்ல கருத்துச் செறிவும் கொண்ட அடிசன் என்பாரின் ஆங்கிலக் கட்டுரைகளைத் தனித்தமிழில் செம்மையாக மொழியாக்கஞ் செய்து அடிகளார் மொழியாக்க முறைமைகளுக்குச் சிறந்த முன்னோடியாகத் திகழ்கிறார். அடிகளார் இளமையில் துய்த்த இயற்கையின்பக் காட்சிகள், இறையுணர்வு இன்ப நிலைகள், உலகியல் வரலாறுகள், பெரும்புலவோர் பெற்றி ஆகியன சிந்தனைக் கட்டுரைகளின் செய்திகளாகச் செறிந்து விளங்குகின்றன.

நாட்டுணர்வு, மொழியுணர்வு, ஒற்றுமை உணர்வுகளுடன் இறையுணர்வின் இன்றியமையாமை சிறக்கச் செய்ய ஆக்கப் பட்டது 'சைவசித்தாந்த ஞான போதம்'. அன்பும் அருளும் நிறைந்த உயிர்களிடத்தில்தான் ஆண்டவன் குடிகொண்டிருப்பான் எனக் கூறும் அடிகளார் இந்நூலில் வழிபாட்டின் நுட்பங்களையும் உண்மை விளக்கங்களையும் தெளிவுபடுத்தியுள்ளார். நல்லோர்தம் அருட்பண்பே உண்மைச் சிவமெனக்கூறும் அடிகளார், திருக்கோயில்களின் அமைப்பு முறைகளையும், இறைவனின் ஒளிவடிவ நிலை, அறிவொளி நிலை ஆகியனவற்றையும் இந்நூலில் விளக்கிக் கூறியுள்ளார்.

'பண்டைக்காலத் தமிழரும் ஆரியரும்' என்ற நூலில், வடமொழியில் தமிழ்ச் சொற்கள் கலந்துள்ள உண்மை, தொல்காப்பியரின் தொன்மை, மெய்ப்பொருள் மேன்மை ஆகியனவற்றை விளக்கியுள்ளார். தமிழிகழ்வு, தமிழ் நாகரிக இகழ்வு ஆகியனவற்றைத் தக்க சான்றுகளுடன் இந்நூலில் அடிகளார் மறுத்துள்ளார். தொல்காப்பிய இலக்கணத்தின் சிறப்பு, வாழ்வியல் வரலாற்றாராய்ச்சிக்கும் மொழி வரலாற்றாராய்ச்சிக்கும் சொல்லாராய்ச்சியின் துணை ஆகியனவற்றை இந்நூலில் அடிகளார் நிறுவியுள்ளார்.

காளிதாசரின் வடமொழியில் அமைந்த சாகுந்தல நாடகத்திற்கு அமைந்த - போற்றுதலுக்குரிய பொருத்தமான மொழியாக்க நாடக நூல், 'சாகுந்தல நாடகம்' ஆகும். முதன்மை நூலின் சுவை குறையாமல் - சில விடங்களில் கூடியுமையும் வகையில் அடிகளாரின் சிறந்த பா நலம் விளங்கும் வகையில் அமைந்த நூல் இது. சொற்பொருள் இன்பமும் அறிவுப் பயனும் சேர்ந்து, சிறந்து தமிழ்மக்கள் பயன்பெறும் வகையில் அமைந்த மொழியாக்க நூல் இது.

'ரெயினால்ட்சு' எழுதிய 'லைலா' என்கிற ஆங்கில நூலின் தழுவல், 'குமுதவல்லி நாகநாட்டரசி'. தனித்தமிழ் இன்பமும், பைந்தமிழ்ப் புலமையும், அறிவும் ஆற்றலும், ஆட்சித் திறனும், நன்மை நாடும் பாங்கும், பழந்தமிழ்ப் பழக்க வழக்கங்களும் வெளிப்படுகிற வகையில் அமைந்த நூல் இது. அடுத்தது அறியத் தூண்டும் ஆர்வ நிலையும், கற்பனை வளமும், கருத்தழகும் கொண்டது 'குமுதவல்லி நாகநாட்டரசி'. இந்நூற் கதையின் இடையிடையே, உலகியலின் உண்மைகளையும், வாழ்வியல் கருத்துகளையும் அடிகளார் அமைத்துக் காட்டியிருப்பது அருமைபயப்பதாகும்.

மரணத்தையும் மறுவாழ்வையும் ஒட்டிய பொய்ச் செய்திகளைக் களைந்து, உயிர்களின் உண்மை நிலையைச் செம்மையாக ஆய்ந்து காட்டும் முயற்சியில் அமைந்த நூல், 'மரணத்தின் பின் மனிதர் நிலை' உடல், உள்ளம், உயிர் நிலைகளையும் இயல்புகளையும் தெளிவுபடுத்தி, மறுமை நிலையின் இயல்பை உணர்த்தும் உயரிய நூல் இது. அன்பு

வழிகளின் ஆற்றலையும், ஆன்மாவின் அழிவற்ற தன்மையினையும், பிறவித் தொடர்ச்சிக்கு நினைவு காரணமாதலையும், அன்பு வழியிலான அறப்பணிகளே மறுமையுலகப் பேரின்பப் பெருவாழ்வுக்கு வழி செய்வதையும், பிறவி வாழ்வின் நிகழ்ச்சிகளுக்கும் கனவு - நனவு நினைவுகளுக்கும் உள்ள தொடர்பு நிலைகளையும் அடிகளார் இந்நூலில் விரிவாக விளக்கியுள்ளார்.

கோகிலாம்பாள் கடிதங்கள், கடித வடிவில் அமைந்த புதுக்கதை நூலாகும். வாழ்வியல் ஒழுங்குகள், தமிழின் தனித் தன்மைகள், மக்களின் கூட்டுவாழ்க்கைத் தேவை, காதல் கற்பொழுக்க நலன்கள், கடவுள் உண்மைகள் - சமயக் கொள்கைகள் தொடர்பான செய்திகள் - அறிவுரை நிலையிலும் சீர்திருத்தங்கள் அளவிலும் இந்நூலில் அமைந்துள்ளன. புத்திலக்கியங்கள் பூத்தலின் நூன்முறைகளுள் இந்நூல் பண்பு நலன் சார்ந்த ஒரு நூலாகவே விளங்குகிறது.

காதலன்பின் ஒருமையுணர்வும், இறையுணர்வின் ஒருமை யுணர்வும் ஒத்ததே - நன்மக்கட் பேறே இவ்வுலக வாழ்வுப் பயன் - என்பன போன்ற நுட்பமான உண்மைகளைக் கொண்டிலங்கும் இந்நூல், அடிகளாரைச் சிறந்த படைப்பிலக்கிய - புத்திலக்கிய ஆசிரியராகக் காட்டுகிறது.

அறிவுக்கடல் கட்டுரைகள், நீலாம்பிகையாரின் சொற் பொழிவுகளுக்காக எழுதப்பட்டவை. துண்டுத் தாள் வெளியீடுகள் ஆகியன அறிவுரைக் கொத்து நூற் கட்டுரைகளாக அமைந்துள்ளன. 'கற்றார் கல்லாதார் என்னும் இரு திறத்தார்க்கும்' பயன்விளைக்கும் வகையில் அமைந்த நூலுமாகும். அன்பு நிலை வழிபாட்டு நிலைகளையும், அச்சநிலை வழிபாட்டு நிலைகளையும், பெண்கல்வி, உலக நூற் கல்வி, அறிவு நூற் கல்வி என்னும் பல நிலைகளையும் அடிகளார் விளக்கியுள்ளார்.

கடவுள் நிலை, சைவ சமயப் பாதுகாப்பு, திருக்கோயில் வழிபாடு, சிறுதேவதைகட்கு உயிர்ப் பலியிடலாமா? சீவகாருணியம், கடவுளுக்கு அருளுருவம் உண்டு, கல்வியே அழியாச் செல்வம், கல்வியும் கைத்தொழிலும், பகுத்துணர்வும் மாதரும், தமிழ்த்தாய், தமிழிற் பிறமொழிக் கலப்பு, தனித்தமிழ் மாட்சி, அறிவு நூற்கல்வி,

தமிழ் நாட்டவரும் மேல் நாட்டவரும், உடன் பிறந்தார் ஒற்றுமை, கூட்டு வாணிகம், பெண் மக்கள் கடமை, பெற்றோர் கடமை ஆகிய தலைப்புகளில் கட்டுரைகளைக் கொண்ட அனைத்து வயதினர்க்கும் ஏற்ற அறிவுரைகள் அமைந்த சிறந்த நூல், 'அறிவுரைக் கொத்து' ஆகும்.

பொருந்தும் உணவு, பொருந்தா உணவு, கொல்லாமை, புலால் உண்ணாமை, சைவ உணவுக்கு மாறான கொள்கைகளின் மறுப்பு என்னும் கட்டுரைகளைக் கொண்டு, மக்களின் நல வாழ்வுக்கும் நாகரிக வாழ்வுக்கும், அக புறத் தூய்மைக்கும், அறிவார்ந்த இன்பத்திற்கும் இந்நூல் இனிய துணையாகிறது. உணவு நிலைகளும் உழைப்பு நிலைகளும் நீடித்த நல்வாழ்வுக்குத் துணையாதலை அடிகளார் விரிவாக விளக்கியுள்ளார். சைவ உணவே சரியானது; புலால் உணவு பொல்லாதது என்பது அடிகளார் கருத்து. 'பொருந்தும் உணவும் பொருந்தா உணவும்' என்னும் இந்நூல் நீடித்த நல - நல்வாழ்வுக்கான அடிப்படை வழி முறைகளை அறிவுறுத்தும் நூலாகும்.

'யோக நித்திரை அல்லது அறிதுயில்' என்னும் நூல், இயல்புகளாலும் இயலாமையாலும் துன்புறுவோர்க்குச் செயல்முறை விளக்கங்களுடன் துன்பந்தொலைக்கத் துணையாகும் நூலாகும். நல்லறிவு ஓங்கவும், நினைவாற்றல் பெருகவும், கல்வி சிறக்கவும், மன அமைதி - மனஉறுதி நிலைக்கவும், அருட்டூக்கம் வழியிலான உண்மைகளைக் கூறுவது இந்நூல். உயிர்களின் உலகியல் இன்ப வாழ்வுக்கும், பல்வகைத் துயில்களின் இயல்புகளுக்கும் விளக்கமாய் அமைந்துள்ளது இந்நூல்.

'திருவாசக விரிவுரை' அடிகளாரின் உரைத் திறனுக்கும், பன்னூல் பயிற்சிக்கும் சான்றாய் அமைந்துள்ளது. திருவாசகத்தைத் தெளிவுற அறிந்துணரவும் ஆழ்ந்து கற்கவும் ஏதுவாக அமைகிற வகையில், முனைப்புடனும், தன்னம்பிக்கையுடனும் அடிகளாரால் ஆக்கப்பட்டது இவ்வுரை நூல். முதல் நான்கு அகவல்களுக்கு அரிய உரை ஆக்கியுள்ள அடிகளார், ஓங்கார உண்மை, ஞானங்களின் விளக்கம், இறைவனின் ஐந்தொழில்கள், ஐந்திறங்கள், வழக்கு வகைகள், திருநீற்று உண்மை ஆகியனவற்றை விரிவாக விளக்கியுள்ளார்.

'சாதி வேற்றுமையும் போலிச் சைவரும்' என்னும் நூல், உலக மக்கள் ஒருங்குக்கும், ஒற்றுமைக்கும், ஒருங்கிணைந்த செயல்பாடுகளுக்கும் ஊக்கி உதவுகிற வகையில் அமைந்ததாகும். தொழில் சார்ந்ததே சாதிப் பிரிவுகள் என்பதையும், சைவ வைணவ நூல்களில் வேற்றுமைகள் இல்லாதிருத்தலையும், சாதி வேற்றுமைகளைக் களைந்து மனித சமுதாயம் ஒன்றுபடவும் அடிகளார் இந்நூலில் அறிவுறுத்தியுள்ளார். சாதி வேற்றுமைகள் பகுத்தறிவுக்கு ஒவ்வாதது என்பதையும், கல்வி அறிவாலும் கடவுள் வழிபாட்டு முறைகளாலும், ஒழுங்கு நிலைகளாலும் அவை களையப்பட வேண்டும் என்பதையும் அடிகளார் இந்நூலில் எடுத்துரைத்துள்ளார்.

வேளாளர் நாகரிகம் என்னும் நூல், பழந்தமிழர் நாகரிகம், பழந்தமிழ் நூற்சிறப்பு, நூலாராய்ச்சி, பழந்தமிழ் நாட்டு வளம், வரலாறு ஆகிய செய்திகளைத் திறம்படக் காட்டும் வரலாற்று நூலாகும். தமிழரைத் தாழ்த்தியும் ஆரியரை உயர்த்தியும் எழுதப்பட்ட செய்திகளுக்கு முறையான மறுப்பு, வேள்வி விளக்கம்-வகை, பழந்தமிழ்ப் பண்பாட்டின் மேன்மை, பிரிவுகள் - இனத் தாழ்வுகளின் இடர்ப்பாடு, நான்மறை நூல்வேதம் என்பன அறம் பொருள் இன்பம் வீடு ஆகியனவே என்பன போன்ற செய்திகளை அடிகளார் விரிவாக விளக்கியுள்ளார். தமிழ்ப் பகைவரிடம் கொள்ள வேண்டிய விழிப்புணர்ச்சி குறித்தும், தமிழ்-தமிழர் நலம் காப்பது குறித்தும், வேளாளர் குறித்த விளக்கமும் ஆய்வாளர் முதல் அனைவரும் அறிந்துணரும் வகையில் அறிவுநூலாகவும் ஆய்வு நூலாகவும் இந்நூலை அடிகளார் ஆக்கியுள்ளார்.

'கடவுள் நிலைக்கு மாறான கொள்கைகள் சைவமாகா' (1929) என்னும் நூல் உண்மைச் சைவ சமய நெறிகள், கடவுளைப் பற்றிய பகுத்தறிவுப் பார்வை - மேலோர் கடன், தமிழ் நூல்கள்-பிறநூல்களின் உண்மைநிலை போன்ற செய்திகளைக் கொண்டதாகும். அறியாமை நீக்கமும் அறிவுப் பேறும், மெய்யறிவு மேன்மையில் அடிகளாரால் வலியுறுத்தப்படுவன. நற்பண்புகளுக்கு இடமாக இருக்கும் இறை நிலை, முருக வழிபாட்டின் தத்துவம், திருமால் வழிபாட்டின் உண்மைப் பொருள், புராணப்

பொய்க்கதைகளின் புரட்டுரைகள் ஆகியனவற்றை அடிகளார் இந்நூலில் எடுத்துக்காட்டித் தெளிவுறுத்தியுள்ளார்.

'பழந்தமிழ்க் கொள்கையே சைவ சமயம்' (1930), என்னும் நூலில் சாதி வேறுபாடுகள் நீங்கவும், நாடு - மொழி - நன்னெறிகள் சிறக்கவும் உண்மைக் கடவுட் கோட்பாடு விளக்கவும் - விளங்கவும் அடிகளார் முயன்றுள்ளார். சாதி வேற்றுமையில்லாத, தூய அன்பு சிறக்கவும் கடவுட் கல்வி சிறக்கவும், கல்வி நலன்களால் வாழ்வு நலன்கள் சிறக்கவும் செய்ய வேண்டுமென்பதே நம் பழந்தமிழ் - தமிழர் சைவ, சமயக் கோட்பாடெனக் கூறுகிறார் அடிகளார். பிறர் துயர் துடைக்கும் அறம் குறித்தும், பழந்தமிழ் இலக்கியங்கள் ஒருங்கு போற்றுவன என்பது குறித்தும் வள்ளுவர் குறள் நெறி குறித்தும் இந்நூலில் கூறியுள்ளார் அடிகளார்.

மாணிக்கவாசகர் வரலாறும் காலமும் (1930) என்னும் இந்நூல் அடிகளாரின் அருந்திறத்தில் அமைந்தது. அடிகளாரின் இலக்கண-இலக்கிய வரலாற்று - ஆராய்ச்சித் திறன்களுக்கான அடையாள நூல் இது. தமிழக அரசியல் வரலாறு, மொழி வரலாறு, மொழிக் கலப்பு வரலாறு, பல வரலாறுகள் இந்நூலில் பொதிந்துள்ளன. வடமொழி எடுத்துக் கொண்ட தமிழ் நூற்பகுதிகளையும் கருத்துக்களையும், உண்மைகளையும் அடிகளார் அடையாளங் காட்டியுள்ளார். தொல்லியல், சமய ஒப்பீட்டறிவு - ஆய்வு எனப் பல நிலைகளில் அடிகளார் புகழ் கூறும் நூல் இது.

மக்கள் நூறாண்டு உயிர் வாழ்க்கை (1933) என்னும் நூல், தமிழ் மக்கள் அவல வாழ்க்கையிலிருந்து விடுபட்டு, உணவு நிலையிலும், உடை, உணர்வு, ஒழுங்கு, கடமை, கடவுள் நிலைகளிலும் கருத்தூன்றிச் செயல்பட்டுக் கவலையொழித்து நீடித்த நல்வாழ்வு வாழ வேண்டுமென்னும் அடிகளாரின் விருப்ப வெளிப்பாடாகும். உலகியல்பு உணர்தலையும் ஒத்துணர்வு சிறத்தலையும் பகுத்தறிவுப் பயன்கொண்டு செய்தால், நோயற்ற நீடித்த இன்ப அன்பு வாழ்வு அமையும் என்பது அடிகளார் கருத்தாகும்.

சிறுவர்க்கான செந்தமிழ் (1934) சிறுவர்க்கான கடமைகளை எளிமையாகவும், இனிய தமிழிலும் உணர்த்தும் நூலாகும். அடிகளாரின் சொல் திறனுக்கும், கதைக் கற்பனைத் திறனுக்கும்

சான்றாகும் வகையில் கதைக் கூறுகளுடன் அமைந்த நூல் இது. ஆய்வுப்பயன் நெறிமுறை கூறும் இந்நூல், 'உலக நிகழ்ச்சிகளை உற்று நோக்கி ஆராயும் ஆய்வே உண்மைப் பயன்மிகு ஆய்வு' என நிறுவுவதாகும். நல்லெண்ண - நன்முயற்சிகளே நல்லருளுக்குத் துணையாவதை அடிகளார் அன்பு நிலையிலும், அறிவு நிலையிலும் இந்நூலில் விளக்கியுள்ளார்.

சாகுந்தல நாடக ஆராய்ச்சி (1934) என்னும் நூல் சிறந்த பன்முகப் பார்வையில் அமைந்த ஆய்வு நூலாக விளங்குதல் காணலாம். படைப்புத் திறனையும் படைப்பாளர் திறனையும் கண்டு காட்டும் நடுநிலை நல்லாய்வு நூலாகும். காளிதாசரின் காலம் திறன் ஆகியவற்றுடன் சாகுந்தல நாடக இயல்பு, வரலாறு, அமைப்பு, கதை, கட்டுக் கோப்பு, மாந்தர், இடம், காலம், பழக்கவழக்கங்கள் எனப் பல நிலைகளில் ஆய்ந்துள்ள அடிகளார், படைப்பில் உள்ள குறைபாடுகளையும் குறிக்கத் தவறவில்லை. ஒப்பீட்டு நிலையில் நாடகக் கலை பிற கலைகளுடன் ஆராயப்பட்டுள்ளது.

பண்டைப் புலவர்களின் படைப்பாற்றல் - மெய்யறிவு மேன்மைகளை அடிகளார் ஆராய்ந்து எடுத்துக் காட்டி யிருப்பதும், அடிகளாரின் நடைவகை, அருமைகள் நன்கு வெளிப்பட்டிருப்பதும் இந் நூற்சிறப்பாகும்.

தொலைவிலுணர்தல் (1935) என்னும் நூல் இத்துறையில் அமைந்த அரிய முயற்சியாகும். காற்று வெளி, நினைவு வெளி, நினைவு இயல்பு, உணர்வு நுட்பம், கடவுளியல்பு, கனவு நிலைகள், தெளிவுக் காட்சி எனப் பல்வேறு கூறுகள் இந்நூலில் விளக்கப்பட்டுள்ளன. கடவுள் நெறி தொடர்பான கருத்துகளும் மக்களுக்கு மெய்யறிவும், மேன்மையும் தரும் கருத்துகளும் இந்நூலில் நன்காய்ந்து தரப்பட்டுள்ளன.

முற்கால பிற்காலத் தமிழ்ப் புலவோர் (1936) என்னும் நூல், தமிழ், தமிழ்நாடு, தமிழ்ப் புலவோர், தமிழ் நாகரிகம், வளர்ச்சி வரலாறு குறித்த செய்திகளைக் கொண்டதாகும். விழுமிய புலவர், நல்லிசைப் புலவர் என நெறி நிற்கும் புலவர்களைப் போற்றியும், மெய்யறிவு நூல்களையும், மெய்யுணர்வு நூல்களையும்

தனித்தமிழில் வெளிக் கொணர வேண்டிய புலவர் கடமைகளையும், காலப்போக்கில் தமிழில் நிகழ்ந்த கலப்பு நிலைகளையும் அடிகளார் இந்நூலில் கூறியுள்ளார். சென்னை மாநிலத் தமிழர் மாநாட்டின் புலவர் பேரவையில் அவைத் தலைவராயிருந்து அடிகளார் ஆற்றிய சொற்பொழிவின் அடிப்படையில் அமைந்த நூலாகும் இது. முற்கால- பிற்காலப் புலவர் நூல்களின் குறை நிறைகளையும் மெய்ம்மை பொய்ம்மைகளையும், தமிழ்க் கல்வியின் நோக்கு பயன்பாடுகளையும், அற்றை நாள் தமிழாசிரியர் அறிவுறுத்திய உண்மைகளையும் அடிகளார் இந்நூலில் விளக்கியுள்ளார்.

மனிதவசியம் அல்லது மனக்கவர்ச்சி (1937) என்னும் நூலில், திருக்குறள் - திருமந்திரம், சித்தர் நூல்களின் மனஈர்ப்பு நிலைகளால் தமிழ் மக்களின் நலனை மிகுவிக்க முடியும் எனக் கூறியுள்ளார். வறுமை, அறியாமை அவலங்களை அகற்ற முடியும் எனக் கூறியுள்ளார். வசியத்தின் உண்மை நிலை, நினைவை ஒரு வழி நிறுத்தல், மந்திர மொழி, கவர்ச்சிக்கு ஏற்றகாலம், முறைகள் எனப் பல செய்திகளை அடிகளார் குறிப்பிட்டுள்ளார். உள்ளத்து நிலைகளையும் உணர்வு நிலைகளையும் விளக்குதலுடன், மனித வசியத்தின் பயன் முறைமைகளையும் அடிகளார் கூறியுள்ளார். பற்றற்ற நிலையையும், பொதுத் தன்மையுணர்தலும் நன்மை பயப்பன என்பது அடிகளாரின் நம்பிக்கை.

இந்தி பொதுமொழியா? (1938), தமிழ் மக்களுக்குப் புத்துணர்ச்சியூட்டும் வகையில், வினா விடை விளக்கங்களுடன் அமைந்த நூலாகும். தாய்மொழிக் கல்வியின் தேவையையும், இந்தி மொழிக் கல்வியால் காலமும் பொருளும் வீணாகும் இடர்ப்பாடுகளையும் அடிகளார் நன்கு எடுத்துக்காட்டி யுள்ளார். மொழிச்சுவை அறிவுறுத்தி, மொழிச்சுமை தவிர்க்கக் கூறும் அடிகளார் தமிழும் ஆங்கிலமுமே தமிழர்க்கு வேண்டியன எனக் கூறியுள்ளார். அடிகளாரின் தமிழ்க் காப்பு முயற்சி, தமிழ் வளர்ப்பு முயற்சி ஆகியன இந்நூல் வழி வெளிப்படுகின்றன. மொழிப்போர் மறவர்களுக்கு அடிகளாரால் அளிக்கப்பட்ட வலிமைமிகு கருவி இந்நூலாகும்.

தமிழர்மதம் (1941), தமிழர் தம் வாழ்வியல் ஒழுகலாற்று உண்மைகளையும், வரலாறுகளையும் விளக்கும் நூலாகும். நாடும்

மொழியும் நன்னெறி நின்று மெய்ப்பயன் பெற்று மேன்மை பெற இந்நூல் துணை நிற்கிறது. சமயம், மத வேறுபாடுகள் பழந்தமிழகத்தில் இல்லாதிருந்த நிலை, கொல்லாமை போற்றிய பண்பறம், இறைவன் அருள் ஒளியாக விளங்கும் நிலை, தமிழர் - ஆரியர் இயல்புகள், காதல் கற்பு வாழ்வின் தன்மைகள் - தமிழர் கடன், தமிழ் வழிபாட்டு முறைகள் - சடங்குகள் எனப் பல செய்திகளை அடிகளார் இந்நூலில் விளக்கியுள்ளார்.

அம்பிகாபதி அமராவதி (1954), உரைநடையும் பாட்டும் கலந்த நாடக இலக்கியமாகும். பா நலன்மிக்க இந்நாடகத்தில், நாடக மாந்தரின் இயல்புக்கேற்ற பேச்சு நடையையும் அடிகளார் ஆக்கியமைத்துள்ளார். காதலன்பின் உறுதியை வெளிப்படுத்தும் இந்நூல், இலக்கியப் பெரு நலன்கள் அனைத்தையும் கொண்ட நூலாகவும் விளங்குகிறது.

சோமசுந்தர நாயகர் வரலாறு (1957) தமிழகச் சித்தாந்தசைவ மாண்புகள் கூறும் நூலாகும். நாயகரின் தொண்டு, புலமை, வரலாறு, நூலியல்பு கூறும் இந்நூல் தமிழ் மக்களுக்கு நன்னெறி காட்டும் நூலாகவும் விளங்குகிறது. நாயகரின் அறிவுரையே, அடிகளார் தனித்தமிழ் ஆர்வத்தைக் காத்ததென்பதும் இந்நூல்வழி வெளிப்படுகிறது. சைவர், வைணவர் பிரிவு நிலைகளையும், கடவுள் நன்றி மறந்து மாறுபடும் மாயாவாதப் போக்குகுறித்தும் அடிகளார் இந்நூலில் கூறியுள்ளார்.

இளைஞர்க்கான இன்றமிழ் (1957), பள்ளி கல்லூரி மாணவர்க்கும் மற்றவர்க்கும் தனித் தமிழ் அன்பையும் அறிவையும் உணர்த்தவும், இயற்கையின் படைப்புகளில் இணைந்திருக்கும் மெய்யறிவைப் புலப்படுத்தவும் அடிகளாரால் ஆக்கப்பட்ட நூலாகும். இயற்கையழகுப் பயன்பாடுகளுடன் இணைந்து நிற்கும் தமிழர்தம் கடவுள் கொள்கையுடன், இளைஞர்தம் உடல்நலம் மன நலம் அறிவு நலம் சிறக்கிற வகையில் இந்நூற்கட்டுரைகள் அமைந்துள்ளன. பிழையான எண்ணங்களைப் பெயர்த்துப் பேரின்பப் பொருள் புலப்படச் செய்தலே பெரும்புலவர் கடன் என்பதையும், செல்வர், மகளிர் ஆகிய அனைவரும் அறஉணர்வு கொள்ளவேண்டிய தேவையையும் அடிகளார் அறிவுறுத்தியுள்ளார்.

திருக்குறளாராய்ச்சி (1958)யில் நூற்பெருமை, நூற்பொருள், நூலாசிரியர் வரலாறு முதலான நூற் சிறப்புகளையும், முழுமுதற்கடவுள் உண்மை, ஒழுங்கு, கல்வி, கொல்லாமை போன்ற குறள் நெறிகளையும் அடிகளார் வியந்து போற்றி விளக்கியுள்ளார்.

சிவஞான போத ஆராய்ச்சி (1958)யில் அது, மொழி பெயர்ப்பன்று, மெய்கண்டதேவரின் முதல் நூலென்பதையும், வீடுபேறு-மெய்ம்மை, இருவினை நிகழ்ச்சிகள், அறிவினுருவாக ஆண்டவன் விளங்குதல் ஆகியவற்றைச் சிறப்புற விளக்குகிற தென்பதையும் அடிகளார் நிறுவியுள்ளார். தன் வயமாதல், தூய உடம்பினனாதல், இயற்கையறிவினனாதல், முற்றுணர்தல், இயல்பாகப் பாசங்களிலிருந்து நீங்குதல், பேரருளுடைமை, வரம்பிலின்பமுடைமை, முடிவிலாற்றலுடைமை என அமையும் பதியின் இயல்புகளை அடிகளார் சிறப்புற ஆராய்ந்துள்ளார்.

மறைமலை அடிகளார் அறிவுரைக் கோவை (1971) அடிகளாரின் மறைவுக்குப் பின் அவர்தம் கட்டுரைகளின் தொகுப்பு நூலாக உருப்பெற்றதாகும். ஒலி எழுத்துக்களின் இயல்பு, திருவள்ளுவர் காலம், பாட்டின் பயன், குறிக்கோள் தொடர்பான பல கருத்துக்களை அடிகளார் அழகுறக் குறித்துள்ளார்.

மறைமலை அடிகளார் உரைமணிக் கோவை (1972) பதின்மூன்று கட்டுரைகளைக் கொண்ட நூலாகும். தமிழ்ப் புலவர் வரலாறு, தமிழக வரலாறு, அடிகளாரின் பொதுநிலைக் கழகத்தின் கொள்கைகள், நக்கீரன் வரலாறும் திறனும், தமிழர்தம் குறை - நிறை, தமிழர்தம் கடமை எனப் பல செய்திகளை இந்நூலில் அடிகளார் வெளிப்படுத்தியுள்ளார்.

மறைமலையடிகளார் பாமணிக் கோவை (1976) அடிகளாரின் பா நயம் - திறம் காட்டும் படைப்பாகும். அடிகளாரின் பாக்களைக் கழகப் புலவர் குழு தொகுத்து வெளியிட்டுள்ளது. வடமொழிப் பாடல்களையும் ஆங்கிலப் பாடல்களையும் தமிழ்ப் பண்புக்கேற்ப அடிகளார், அவரது ஆற்றல் வெளிப்பட மொழியாக்கஞ் செய்துள்ளார்.

அடிகளாரின் பொழிவுகள், கட்டுரைகள், நூல்கள் ஆகிய அனைத்தின் உட்கூறுகளாகத் தமிழ்மொழி நலமும் தூய்மையும்,

தமிழ் இன - சமுதாய உயர்வும் சிறப்பும், தமிழ் இலக்கிய மேம்பாடும் விளங்குதல் வெளிப்படை. அவரது மொழியாக்க முயற்சிகளிலும் ஆய்வு நோக்குகளிலும், சமய ஈடுபாடுகளிலும் இம்முப்பெரும் போக்குகளே முனைப்புடன் நிலைநிறுத்தப் பெறும் உண்மையை நன்கு காணலாம்.

## தமிழ்மொழி மேம்பாடு

தமிழ்மொழி நலன் போற்றுதலிலும், தமிழின் தூய்மை காத்தலிலும், தமிழ் வளம் பெருக்குவதிலும், அடிகளார் தம் பேச்சாலும் எழுத்தாலும் பதிப்புப் பணிகளாலும் படைப்புப் பணிகளாலும் பெரிதும் முயன்றார். அவரே அவர்தம் எதிர்பார்ப்புக்கேற்ற எடுத்துக்காட்டாக விளங்கினார். ஆழ்ந்து கற்ற புலமையும், தனித்தமிழ் நடையும், புத்திலக்கியப் படிப்பும் படைப்பும், ஆராய்ச்சி முயற்சிகளும் அடிகளாரின் தமிழ்மொழி மேம்பாட்டுக்கான பங்களிப்பை நன்கு வெளிப்படுத்தும்.

பழந்தமிழ்ச் சொற்பொருள் நயங்களைத் தற்காலத் தமிழ் மாணவரும் பிறரும் அறிந்துணர்ந்து மகிழும் வகையில் அடிகளாரின் படைப்புகள் அனைத்தும் அமைந்துள்ளன. தொல்காப்பியம், பத்துப்பாட்டு போன்ற பழந்தமிழ் இலக்கண இலக்கிய நூல்களின் பிழிவாக மும்மணிக் கோவையும், சங்கப் பாடல்களின் செறிவும் சிறப்பும் இளமையும் அழகும் கொண்டனவாகச் சோமசுந்தரக் காஞ்சியாக்கப் பாடல்களும் அமைந்துள்ளன.

கம்பராமாயண காலத்திற்கு முந்திய காலச் செந்தமிழ்ப் பாக்கள் தனித்தமிழ் போற்றும் தகைமையன என்று பழந்தமிழ்ச் செய்யுள் நூற்பயிற்சி தமிழ்மக்களின் துன்பந் தொலைத்த இன்ப வாழ்வுக்குத் துணையாவது என்னும் கருத்தினர் அடிகளார். மொழி வளத்தை முழுமையாக அறிந்துணர்ந்து துய்க்கும் வகையில் துணை செய்யவே பட்டினப்பாலை, குறிஞ்சிப் பாட்டு, முல்லைப்பாட்டு, திருக்குறள், திருவாசகம், சாகுந்தலம் ஆகிய இலக்கிய ஆராய்ச்சியுரைகளில் அடிகளார் ஈடுபட்டார். முறையான மொழி-இலக்கிய ஆராய்ச்சிகளுக்கு அடிகளாரின் பணியும் பங்களிப்பும் குறிப்பிடத்தக்கதாகும். பழந்தமிழ் இலக்கியங்களின் பொருளின்பம்

கெடாத வகையில் அதனுடன் தொடர்புடைய மற்றைப் பொருள்களையும் சொல்லிச் சென்று மொழிவளம் பெருக்கினார் அடிகளார். பொருட்கோவை நன்கு புலப்படும் வகையிலும் பொருளுக்கேற்ப ஓசையின்பம் பழந்தமிழ்ப் பாடல்களில் மாறிமாறிப் பயக்கும் வகையிலும் அமைந்துள்ளமையை அடிகளார் அடையாளங் காட்டியுள்ளார்.

மொழியாக்க நெறிமுறைகளை எடுத்துக்காட்டித் தாமே அவற்றைப் பின்பற்றி மொழி நலம் சிறக்கச் செய்தவர் அடிகளார். மொழியாக்கம் முழுமையான பயனைத்தரும் வகையிலும், மொழிவளம் பெருகச் செய்யும் வகையிலும் தனித்தமிழ் மொழியாக்க முன்னோடியாகவும் அடிகளார் விளங்கினார். வழிபாட்டு முறைமைகளிலும் மொழிநலம் பேணியவர் அடிகளாராவர்.

தமிழ்ச் சொற்கள் வடமொழியில் மிகுதியாகக் கலந்துள்ள உண்மையையும், பாணினியைவிடத் தொல்காப்பியர் முந்தியவர்-தொல்காப்பிய இலக்கணமே சிறப்புமிக்கது என மொழிப் பெருமையையும் பழமையையும் எடுத்துக் காட்டியவர் அடிகளார்.

வாழ்வியல் வரலாற்றாராய்ச்சிக்கும் மொழி வரலாற்றாராய்ச்சிக்கும் சொல்லாய்வு இன்றியமையாதது என்னும் கருத்துரைத்தவர் அடிகளார். மெய்ப் பொருள் உணர உறுதுணையாகும் தொல்காப்பியம், திருக்குறள் முதலான பழந்தமிழ் நூல்களைப் போற்றியும், தமிழிகழ்வு தடுத்தும் தகர்த்தும் பணிகள் பல செய்தவர் அடிகளார். பிறமொழி நலன்களையும் அறிவு இன்பங்களையும் பயன்களையும் தமிழர் பெற வேண்டும் என்னும் எண்ணத்திலும், தமிழ் மொழி வளம் புதுப் பொலிவு பெற வேண்டும் என்ற கருத்திலும் அடிகளார் சாகுந்தல நாடகத்தை மொழியாக்கஞ் செய்தார். பலரும் பாராட்டும் வகையில் அழகிய இனிய பாநலன் மிக்க படைப்பாக அது விளங்குதல் வெளிப்படை

மொழியின்பமும் ஈடுபாடும் மிகுவிக்கிற வகையில், புத்தாக்கப் போக்கில், தனித்தமிழ் மாண்பு கெடாத வகையில் புதுக்கதை முயற்சியையும் அடிகளார் மேற்கொண்டார். தமிழில் மறுமை நிலையை உள்ளவாறு உணர்த்திக்கூறும் நூல்கள் இல்லாத

காலத்திலேயே அக்குறை தீரும் வகையில் அத்துறை நூல்களையும் அடிகளார் ஆக்கியளித்தார்.

புத்திலக்கியமாயினும் அதில் மொழிநலமும், சொற் பொருள் நலமும் தூயனவாகத் துலங்குதல் வேண்டும் என்னும் எண்ணத்தில் கடித வடிவக் கதையை அடிகளார் அறிமுகஞ் செய்தார். 'முக்கனியின் தீஞ்சாறென விளங்கும் மெல்லொலி கொண்ட செந்தமிழ்க் கல்வியை அனைவரும் கற்கும் வகை செய்தல் வேண்டும் என்னும் சமுதாய அளவிலான மொழிக் கொள்கை கொண்டவர் அடிகளார். படைப்பிலக்கியப் பாதையில் அடிகளாரின் கடித வடிவப் புதுக்கதை நூல் முயற்சி போற்றுதலுக்குரியதாக விளங்குகிறது.

தாய்மொழிக் கல்வியில் உலகநூற் கல்வியும், அறிவுநூற் கல்வியும் கலந்தமைதல் வேண்டும் என்னும் விருப்பினர் அடிகளார்.

உணவுக்கும் உணர்வுக்கும் ஏற்பவே மொழி அமைப்பும் ஆளுகையும் அமையும் என்னும் கருத்தினர் அடிகளார். மொழி-கல்வி - நினைவாற்றல் ஆகியன சார்ந்ததே அறிதுயிலெனும் அருட்டூக்கம் என்னும் எண்ணத்தினர் அவர். பெரும்பயன் விளைக்கும் பேரின்பப் பாடல்களைப் பிழையாக ஓதுவாரைக் கண்டு மொழி நலன்காக்கவே அடிகளார், அச்சுறுத்தலுக்கு அஞ்சாது திருவாசக விரிவுரை எழுதினார்.

தொன்மைத் தமிழ் - தமிழ்நாடு - தமிழ் நூல்கள் ஆகிய நிலைகளில் ஆரியர் வருகையில் அமைந்த மாற்றங்களை அடிகளார் ஆராய்ந்து கண்டு காட்டியுள்ளார். மொழிச் சிதைவு, மொழிக் கலப்பு, இனத்தாழ்வு நிலைகளை எடுத்துக்காட்டித் தமிழ்-தமிழ் நூற் பொருள்களின் உண்மைகளை நிறுவியுள்ளார் அடிகளார். நால்வகை உறுதிப் பொருள்களைக் கூறிய தமிழ் நூல்களே 'நால்வேதம்', 'நான்மறை' எனக் கூறும் அடிகளார், தமிழ்ப் பகைவரிடத்தே விழிப்புறுதலே தமிழர்தம் முதற் பெருங்கடமை என்கிறார். என்றும் விளங்கும் எழிற்றமிழ் மறந்து, வாழ்விழந்த வடமொழியைப் பிழைபட விழைவார் பேதைமை கடிகிறார் அடிகளார்.

தமிழின் வளஞ்சேர்க்கவும், வாழ்வு காக்கவும் தமிழ் இளைஞர்களும் ஆசிரியர்களும் இறைவழிபாடு முதலான எல்லா நிலைகளிலும் இன்றமிழ் போற்ற வேண்டும் என்கிறார் அடிகளார்.

வினா விடைகள் முறையிலான விளக்கங்களைத் தம் படைப்புகளில் கையாண்டு, நூன் முறைமைகளிலும் மொழியிலும் தெளிவு சேர்த்தவர் அடிகளார்.

பழந்தமிழ்க் கொள்கைகள் சிறக்கவும், மொழியில் இரண்டறக் கலந்து நிற்கும் நன்னெறிகள் சிறக்கவும் செய்த அடிகளார், பழந்தமிழ் இலக்கியங்கள் உலகிய லொழுக்கத்துக்குச் சார்பானவையாக விளங்குதலையும் வெளிப்படுத்தியுள்ளார். மொழியைச் சார்ந்ததே இலக்கியக் கல்வியும், கடவுட் கல்வியும், அறிவு நூற் கல்வியும் என்னும் அடிகளார், மொழி வழியிலான கல்வி நலன்களை வாழ்க்கை நலத்திற்குப் பயன்படுத்தி மேம்படுத்துவதே அன்புடைமையா மென்பதும், அதுவே பழந்தமிழ்ச் சைவக் கோட்பாடென்பதும் தெரியப்படுத்தியுள்ளார்.

"கி.பி. இரண்டாம் நூற்றாண்டின் துவக்க முதல் தமிழ்நாட்டின்கண் தொகுதி தொகுதியாய் வந்து புகுந்த பௌத்தர் சமணர் வழியே தமிழின்கண் வடமொழிக் கலப்பு நேர்வதாயிற்று" என மொழிக் கலப்பின் காலத்தையும் காரணத்தையும் அடிகளார் கூறியுள்ளார். தொடக்க காலத்தை அடிகளார் 'தனித்தமிழ்க் காலம்' என்றே குறிப்பிட்டுள்ளார். வடமொழியில் வழங்கும் உயர் கருத்துகள், வேதங்கள், ஆகமங்கள், உபநிடதங்கள் ஆகியவற்றின் பிற்பகுதிகளெல்லாம் தமிழிலிருந்தே எடுத்தாளப்பட்ட உண்மைகளைத் தக்க சான்றுகளுடன் அடிகள் எடுத்துக் காட்டியுள்ளார்.

சிறுவர்க்கேற்ற சிறந்த - எளிய மொழிநடையையும் எழுதிக் காட்டியுள்ளார் அடிகளார். சிறுவர்தம் தமிழறிவு தழைக்கும் வகையிலும் மொழியில் சிறுவர்க்குச் சிறுகதை வழியிலான சிந்தனைகளே சிறந்த பயன் விளைக்கும் என்ற நிலையிலும் எழுதியுள்ளார். மொழிநலன் சிறக்க ஆய்வு நிலைகள் - ஆய்வாளர்கள், கடமைகள் குறித்தும் அடிகளார் விளக்கியுள்ளார். தமிழ்மொழி இலக்கிய அருமைகளைப் பிற மொழியினரும்

அறிந்துணரச் செய்யும் வகையில் தமிழ் நூல்களுக்கு ஆங்கில முன்னுரைகளையும் அமைத்துள்ளார் அடிகளார்.

பிறமொழியில் உள்ள அறிவு நலமும் இலக்கிய நயமும் கொண்ட படைப்புகளைத் தமிழ் மொழியில் முறையாகக் கொணர முயன்றவர் அடிகளார். காளிதாசர், ரெயினால்ட்ஸ் போன்ற கவிஞர்களின் கொடையைத் தமிழுக்குத் தந்தவர் அடிகளார். தொலைவிலுணர்தல், மனித வசியம் போன்ற புதுத் துறைகளாலும் தமிழைப் பொலிவுறச் செய்தவர் அடிகளார்.

தமிழ்மொழியின் இயலமைப்பும், தமிழின் மெய்ம்மை போற்றும் மேன்மையும், தமிழ்ப் புலவர் தகுதியும் எடுத்துக்காட்டும் அடிகளார், அயல்மொழி ஆர்வலர்களின் பொய்ம்மைப் புனைவுகளையும், போலிப் போக்குகளையும் அடையாளங் காட்டியுள்ளார். தமிழ் மொழியிலேயே முற்காலப் புலவர் நூல்களின் மெய்ம்மைகளையும், பிற்காலப் புலவர் நூல்களின் பொய்ம்மைகளையும் விளக்கிக் காட்டியுள்ளார் அடிகளார்.

தனித்தமிழில் மெய்யறிவு நூல்கள், மெய்யுணர்வு நூல்கள் இயற்றித் தமிழை வளப்படுத்தி, நந்தமிழ் மக்களைச் சிறந்த துறைகள் எல்லாவற்றிலும் முன்னேற்றி நலம் பெருக்க நம் செந்தமிழ்ப் புலவர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார் அடிகளார். திருக்குறள், திருமந்திரம் போன்ற தமிழ் நூல்களின் தரத்தையும் திறத்தையும் எடுத்துக்காட்டி இத்தகு நூல்களே மொழிநலம், மக்கள் நலம் சிறக்கச் செய்யும் நூல்கள் எனக் கூறியுள்ளார் அடிகளார்.

மொழிநலம் காக்க ஓர் இயக்கத்தையே அமைத்தவர் அடிகளார். மொழி நலனுக்கு எதிரான முயற்சிகளை முறியடிக்க முனைப்புடன் எழுதியவர் - பேசியவர் அடிகளார். இந்தி மொழிப் பயிற்சி தமிழர்க்குக் கூடுதல் சுமையாகுமெனக் கூறித் தமிழர் நலனுக்குத் தமிழும் ஆங்கிலமுமே போதியவை என்றார். மொழிப்போர் மறவர்க்குத் தக்க சான்றாதாரங்களைத் தந்துதவியவர் அடிகளார். மொழியின் தூய்மை காக்கவும், செம்மை சேர்க்கவும் அயராது உழைத்தவர் அடிகளார்.

மொழியின் பல நிலைகளையும் வழக்குகளையும், கதை மாந்தரின் இயல்பும் இடமுமுணர்ந்து பயன்படுத்தலாம் என்பதையும் எழுதிக் காட்டியவர் அடிகளார். நாடக இலக்கியமாயினும், உரையும் பாட்டும் கலந்தமையலாம் எனக் கூறும் அடிகளார், எல்லோர்க்கும் பொதுவான நிலையில் மொழியின் சொற்பொருள் அமைதிகளை அறிவால் ஆராய்வதே இலக்கணம் எனக் கூறுகிறார். வரலாறுகளையும், சமய மாண்புகளையும் தமிழ் மொழி நலனுக்கு முரணாத வகையில் எழுதிக்காட்டியதுடன், புதுத்துறை - புத்திலக்கியப் போக்குகளும் படைப்புகளும் கூட மொழி நலனுக்கு முரண்படாத வகையில் அமைக்கப்பட வேண்டும் என்பதையும் மெய்ப்பித்துக் காட்டியுள்ளார்.

இனிய தமிழ்மொழியின் இயல்பு நலன்களைக் காக்கவும், காட்டவும் - தனித் தமிழின் துணை கொண்டு, இயற்கையறிவு, உலகியலறிவு, மெய்யறிவு என எல்லாவகை அறிவு நிலைகளையும் அனைத்து வகையினர்க்கும், வயதினர்க்கும் எழுதியவர் அடிகளார்.

அடிகளாரின் ஆராய்ச்சி முறைமைகளும் முயற்சிகளும் மொழிநலன் சார்ந்தே அமைந்தன. மொழி நலனுக்கும் இயல்புக்கும் முரண்பட்ட எதையும் அடிகளார் செய்யவில்லை. கால ஆய்வு, சமய ஆய்வு, இலக்கிய ஆய்வு, வரலாற்று ஆய்வு, மொழி ஆய்வு, மறைபொருள் ஆய்வு என அமையும் பல்துறை ஆய்வுகளினும் அடிகளார் மொழி நலனை எங்கும் எள்ளளவும் விட்டுக் கொடுக்கவில்லை.

மொழியியல் சார்ந்த முயற்சிகளிலும் அடிகளார் ஈடுபட்டுள்ளார். உயிரெழுத்துகள் உணர்த்தும் உண்மைகளை எடுத்துக்காட்டும் அடிகளார், "ஒலியெழுத்துகள் மூவகையின, ஆய்த ஒலி பற்றுக் கோடும் தடையுமின்றித் தானே இயங்குவதாம்; பற்றுக்கோடும் தடையும் உற்றுத் தாமே இயங்குவன உயிரெழுத்துகள்; பற்றுக்கோடும் தடையும் உற்றுத்தாமே இயங்காதன ஒற்றெழுத்துகள்" என விளக்கந்தருகிறார்.

தமிழ்த் தாயை உணர்வு நிலையிலும் அறிவு நிலையிலும் உணர்ந்து கண்டு உயர்த்திப் பேசியவர் அடிகளாவார். தமிழ்த்

தாயையும் தமிழிந்திய மாதையும் கடவுளுருவில், கடவுளுணர்வில் கண்டுகளித்தவர் அடிகளார். கொன்றையஞ் சடையோன், செழுந்தமிழென்னும் கொடுந்தமிழ்க் குழவியைக் குமரனுக்கருள, அவன் இயல்வகையெனும்இன்பால் ஊட்டிச் சின்னாள் வளர்த்துப் பின்னர், கூடன் மாநகர்ப் புலவர்க்கு உரிமைப்படுத்த அவர்கள், அகம் புறம் முதலான அணிகலன்கள் பூட்டி, நூலாடை தந்து சொற்சுவை பொருட்சுவை என்னும் நல்லுணவு நாளும் ஊட்டிச் சங்கமெனும் பூந்தடத்திலும், ஆலவாயெனும் அழகுச் சோலையிலும் அன்பு பாராட்டினர். அனைவரது அன்பிலும் தோய்ந்து அழகாய் வளர்ந்த தமிழ் மங்கை, வடமொழியைத் தோழியாகக் கொண்டு தென்னாடதனில் சிறந்து தங்கினாள் என்னும் பகுதியில் அடிகளாரின் மொழி நலத்தையும், நடை நலத்தையும், மொழியன்பையும் உணரலாம்.

தமிழ்மொழி யன்பைப் போன்றே தமிழிந்திய மாது மேல் அடிகளார் கொண்டிருந்த அன்பையும் மதிப்பையும் அவற்றோடு அவர்தம் மொழிநலனையும் உணரலாம். 'வளம் பழுத்த விளை நிலங்களும், குளம் பெருக்கும் அருவிகளும், இளம்பருவச் சோலைகளும், அலையுலவும் ஆழ்கடலும் அவற்றின் ஓடிக்கிடக்கும் அழகு முத்தும், அருவிதரு அருமணியும் மிகுந்த நாடு, இந்நாடு. தெரிந்து பல கலைகளெல்லாம் தெளிவாக மிக விளங்கும் உளம்படுத்த மூதறிஞர் நிரம்பிய நாடு இந்நாடு. இந்நாட்டின் தென்னகத் துறைமுகத்தில் யவனர்கள் வாணிகத்தின் பொருட்டு வந்து குழுமினர். நறுஞ்சாந்து, மணி, யானை மருப்பு, தொழில் நுட்பஞ் சிறந்த துகளறு பட்டாடைகள், பாலாவி யெனவும் பாம்புரியெனவும் விளங்கிய ஆடைகள் ஆகிய அரும்பொருள்கள் இங்கிருந்து எல்லா இடங்களுக்கும் ஏற்றுமதியாயின. இவ்வளவு சிறப்புகளையும் கொண்டு உலகுக்கு விளக்கெனவும், என்னுயிர்க்கு உயிரெனவும் விளங்கும் என்னருமைத் திருநாடே, உன் வளம், புகழ் ஆகியன சொல்லுதற்கரியன. உன் தொல்வளமும் பல்வளமும், பிறர் கவர, நீ நாணி நிற்கும் நிலையொழிய, நின்மக்கள் அறிவு நலமும் ஆர்வமும் கொண்டு, அயராது உழைப்பர். நின் மனக்கவலை மறக்க - மாற வாழ்த்துகிறேன் - என்னும் பகுதியில் அடிகளாரின் மொழியுணர்வும் நாட்டுணர்வும் நன்கு வெளிப்படுதலுடன்,

மொழியில் கருத்தையும் உணர்ச்சியையும், கற்பனையையும் எப்படி எழுதி வெளிக்கொணர வேண்டும் என்பதற்கான மொழித்திறனும் புலப்படுகிறது.

இயல்பான தனது தமிழ் நடையில் மொழி நலம் போற்றும் அடிகளார், தம் மொழியாக்க முயற்சியினும் மொழிநலனை முழுமுதற்பொருளாகக் கருதியே செயல்பட்டுள்ளார். தமிழ்மொழி வழக்கிற்கேற்பவும், இலக்கண இலக்கிய இயல்புகளுக்கேற்பவும் மொழியாக்கஞ் செய்யும் முயற்சியாளர் என்பதைக் காணலாம்.

"கதிர்நிற மெனவும் யாழிசை யெனவுங்
கட்புலன் கதுவிடா தெம்முளே கலந்து
முதிர்சுவை யின்பம் அறிவுமெய் யுருவாய்
முழுமுதல் நின்ற மூவிலா வியல்பின்
அதிர்விலா தொன்றாய் இருளினு ளன்றே
அழுந்தினங் கிடந்தேம் அங்கண்மா ஞாலம்
பொதிர்வுற வொளிரும் பரிதியின் முன்பும்
பொங்கொளிக் கோள்க ளூழிதரு முன்பும்"

என்னும் ஞானபோதினியில் வெளியான 'வேனிற்பாட்டு' மொழியாக்கப் பாடலில் இறை ஒளியாகவும் - இசையாகவும் - சுவையாகவும் - அறிவாகவும் - இன்பமாகவும் - உண்மையாகவும்- முழு முதலாகவும் விளங்கும் நிலைகளை விளக்குதலின் வழி அடிகளாரின் மொழிநிலை போற்றும் உணர்வையும் அறியலாம்.

"அக்காலை யிரவதனி லினிய விசை
யழகுதர மிழற்று மோர்புள்
குக்கூவென் றிசைகுயிலின் குறிப்பாட்டி
னெதிர் வேனிற் குலவு பண்கள்
மிக்கூர வருமிடற்றிற் பொதி கொண்டு
வெளியுகுப்ப விரிதண் கோடை
மைக்கூருந் தெளிவிசும்பிற் சிறை திரட்டு
மணந்தெளிந்தின் புறக்கு மன்றே"

என்னும் பாடலில் மொழிநலமும் இலக்கிய நலமும் இயற்கையின்பமும் கலந்து சிறந்து இழையோடியிருப்பதுடன்

அடிகளாரின் மொழியாக்க முறைமையும் வெளிப்பட்டு விளங்குகிறது.

மொழிநலம் சிறக்க ஒப்புமையழகுகளையும் கருத்திற்கலந்து அமைக்கும் ஆற்றலினர் அடிகளார். தமிழ்க் கல்வியாளரும், தமிழ் முயற்சியாளரும் தொய்வின்றித் தொடர்ந்து தொண்டாற்றித் தமிழ்க் கல்வி பரவச் செய்ய வேண்டும் என்னும் விழைவினர் அடிகளார். அறிவு மேன்மைக்கும் இன்ப முழுமைக்கும் முதல் முழுத் துணையாவது தமிழ்க் கல்வியாகும். கல்வி நலனும் மொழி நலனும் ஒன்றையொன்று சார்ந்து நிற்பவை. இறைவடிவொத்த இன்ப இயல்பானது தமிழ் என்பதால், இறைப்பற்றாளரும் தமிழ் முயற்சிகள் தழைக்கச் செய்ய வேண்டும்.

பல்துறைக் கல்வியறிவுச் செய்திகளையும் எண்ணங்களையும் திறம்பட உணர்த்தும் ஆற்றல் வாய்ந்தது தமிழ். பழங்காலப் பண்பட்ட மொழிகளின் இயல்பினதாக இருப்பது தமிழ். ஒழுங்கு சார்ந்த உயரிய சொற்பொருள் உண்மைகள் கொண்டது தமிழ். பழந்தமிழ்ப் பாவலர்கள் இவற்றை உணர்ந்து எழுதியதால்தான் இன்றும் உண்மைகள் மாறாமல் உணர்த்தப்படுகின்றன. 'தமிழ் வல்லவர்கள் எல்லாரும் இனித் தனிச் செந்தமிழில் திருத்தமாக எழுதினாலன்றி அவர்களுடைய நூல்கள் மணம் பெறா என்பதனை உள்ளத்திற் பதித்து அவர்கள் தமிழன்னையை ஓம்பி நலம் பெறுவார்களாக. எனத் தனித் தமிழில் எழுதுதலை அடிகளார் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

மொழியை இறையியல்புடனும் உணர்வுடனும் இணைத்துப் பார்த்தவர் அடிகளார். மொழியின் பொருள் மேன்மையினையும், நுட்பத்தையும் தனித்தனியே எடுத்துக் காட்டும் இயல்பினர். "பன்னீருயிர் எழுத்துகளிலும் முதல் நின்ற அகர ஆகாரங்கள் இரண்டும் எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளை உணர்த்தும் ஒலிகளாய் முதல் நிற்ப. எஞ்சிய பத்தும் இகர இனத்திற் சேர்ந்த இ, ஈ, எ, ஏ, ஐ என்னும் ஐந்தும் கீழ்நின்ற உயிர்களையும், உகர இனத்தைச் சேர்ந்த உ, ஊ, ஒ, ஓ, ஔ என்னும் ஐந்தும் மேல் நின்ற உயிர்களையும் உணர்த்துகின்றன என்னும் கருத்தினர் அடிகளார். மேலும், விந்துவின் இயக்கம் மாயா காரியப் பொருள்கள் அத்துணையும் இயங்குதற்குக் காரணமாய் நின்றாற் போல,

அவ்விந்துவின் ஒலியாகிய ஆய்தமும் உயிர் ஒற்று என்னும் எல்லா ஒலிகளின் இயக்கத்திற்குக் காரணமாய் நிற்கும் என்க' எனவும் அடிகளார் கூறுவன அவரது மொழியியல் கல்வித் திறனுக்குச் சான்றாயமையும்.

இந்தி மொழிக் கல்வியால் வீண் காலக் கழிவும் வீண் உழைப்பும், வீண் செலவும் உண்டாகுமல்லாமல், வேறு பயனில்லை எனக் கூறும் அடிகளார், "நடுநின்று நோக்க வல்ல உண்மைத் தேயத் தொண்டர்கள் உளராயின், இவ்விந்திய நாட்டுக்கு மிகப் பழைய மொழியாய் இருப்பதுடன், இன்று காறும் பல கோடிமக்களாற் பேசப்பட்டுவரும் உயிருடைய மொழியாகவும், இவ்விந்திய மக்களை எல்லாத் துறைகளிலும் மேலேற்றத்தக்க பல சீரிய நூல்களை உடையதாயும் உள்ள தமிழ் மொழியையே இவ்விந்திய தேயம் முழுமைக்கும் பொது மொழியாக்க அவர் முன்வந்து முயலல் வேண்டும்'' என்னும் எண்ணத்தினர் அடிகளார். ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகச் சீர்திருத்தமுற்று, எல்லாக் கூறுகளையும் துறைகளையும் கொண்டதாய், நூல் வழக்கும் உலக வழக்கும் உள்ளதாய் பழமையும் தனித்தியங்கும் தன்மையும் வாய்ந்ததாய் விளங்கும் தமிழே பொது மொழியாகும் தகுதியுடையது என்னும் அடிகளார், அறிவு நூல்களும், தொழில்நுட்பம் வாணிகம் அரசியல் மற்றும் இலக்கண இலக்கியங் கொண்ட ஆங்கிலமும் பொது மொழியாகத்தக்கதே எனவும் கூறியுள்ளார்.

நாகரிகத்தின் அடிப்படையான ஒரு மொழியின் வாழ்வும் வளமும் அம்மொழிப் புலவர்களையே சார்ந்திருக்கும் என்கிறார் அடிகளார். எனவே புலவோர் பொறுப்பு அவர்தம் மொழிநலன் காத்தலும் வளர்த்தலும் ஆகும் என்கிறார்.

'தேனும், பலாச்சுளையும், மாம்பழமும், வாழைக்கனியும் சேர்த்துப் பிழிந்த தீஞ்சாறு ஒழுகினாற்போல அத்தனை இனிப்பான மெல்லிய ஒலிகளே எங்கள் செந்தமிழில் இருக்கின்றன' என மொழி நலம் போற்றும் அடிகளார், எழுதுங் கடிதங்களில் உள்ள சொல்லும் பொருளும் கூடத் தளர்ந்த உயிரை இடையிடையே தளிர்க்கச் செய்யும் இயல்பினவெனக் காட்டும் கருத்தினர்.

தமிழ்மொழியை மேம்படுத்தும் வகையில் சிறந்தமைந்த கதைநூல் வளர்ச்சிக்கும் கதையாசிரியர் திறனுக்கும் காரணமானவர் அடிகளார். நாடக ஆக்கத்திலும், ஆய்விலும் நற்றமிழ் போற்ற முடியும் எனக் காட்டியவர் அடிகளார். முதன்மைப் படைப்பாயினும், மொழியாக்கப் படைப்பாயினும், தமிழ்மொழியின் தகைமை போற்றிக் காப்பாற்றப்பட வேண்டும் என்பதையும், அது முடியும் என்பதையும் முயன்று செய்து காட்டிச் சிறந்தவர் அடிகளார். அவற்றையொட்டிய உரை, உரையாடல், பாடல் முறைமைகளிலும், கால ஆய்வு, கருத்து ஆய்வு, ஒப்பாய்வு, திறனாய்வு ஆகிய பல்நிலை ஆய்வுகளிலும் தமிழ் மாண்பும் மேம்பாடும் சிறக்கச் செய்தவர் அடிகளார்.

தமிழ்மொழியிலுள்ள செய்யுளின் ஓசை அமைதியே பா எனப்பெறுகிறது எனக் கூறும் அடிகளார், தொல்காப்பியம் போன்ற பொருட்சிறப்பும் இலக்கணச் சிறப்பமைவும் மிக்க நூல் வட மொழியிலும் பிற மொழிகளிலும் இல்லையென்கிறார். 'உலக வியற்கை உயிர் இயற்கைகளெல்லாம் இங்ஙனம் வரையறை செய்து இலக்கணமெழுதிய தொல்காப்பியர், அல்லது தொல்காப்பியம் ஒத்த பிறிதொரு நூலை நாலாயிரமாண்டுகளுக்குமுன் எம் மொழியிலும், எந்நாட்டிலும் காட்ட முடியாதெனத் தமிழ் மேம்பாட்டை நிறுவுகிறார் அடிகளார். திருக்குறளைப் பெரிதும் போற்றும் அடிகளார், சிலப்பதிகாரம், மணிமேகலை, பெரியபுராணம் ஆகியன சுடரொளி ஞாயிறென விளங்கும் செம்பொருட் செந்நூல்களென்கிறார்.

நச்சினார்க்கினியருரை வடமொழியாசிரியர் சங்கரர் முறைகண்டு கடைப்பிடித்ததனால் நேர்ந்த குறைபாடென்றும், அது கொள்ளத்தக்கதல்லவென்றும் கூறும் அடிகளார், பத்துப்பாட்டுகளில் ஏனை ஒன்பது பாட்டுகளும் தொடர்புற்று விளங்குதலும், நக்கீரர் உள்ளிட்ட தொல்லாசிரியர் உரையெதுவும் உரைமுறை மாறுபடாதிருத்தலையும் எடுத்துக்காட்டி முல்லைப் பாட்டுக்கான நச்சினார்க்கினியருரை மட்டும் கொள்ளற்பாலதல்ல எனக் கூறுதலிலிருந்து தமிழ்மொழி - இலக்கிய உரைத் திறன்களின் மேம்பாடுகளைக் கண்டுகாட்டும் திறம் தெரியவருகிறது. வடமொழியிலுள்ள ஓரிரு நூல்களைத் தவிரப் பெரும்பாலானவை,

இல்பொருள், இல்பண்புகளை மிகப் பெருக்கியுரைக்கின்றன. தமிழ் மொழியில் இக்குறைபாடுகள் இல்லை என்கிறார் அடிகளார்.

'தொல்காப்பியத்தைச் சாதியிறுமாப்புக்குத் துணையாகக் கொள்வது பெருங்கருங்கல்லைப் புணையாகக் கொண்டு கடலைக் கடக்க முனைந்தவன் செயலை ஒக்குமென' அடிகளார் கூறுவது தமிழ்மொழி நூல் சார்ந்த உண்மை விளக்கமாகும். சமயம் சார்ந்த படைப்புகளிலும், சமுதாயம் சார்ந்த ஆய்வுகளிலும் கூட அடிகளார் நற்றமிழ் நலம் பேணும் நெஞ்சினராக விளங்குகிறார்.

தனித்தமிழும் பகுத்தறிவும் தமிழ் மொழியில் இயக்கமாகத் தோன்றவும், தமிழர் - தமிழ் மேம்பாட்டுக்குத் துணையாகவும் தொண்டாற்றியவர் மறைமலையடிகளார். மறை பொருளியல் துறையில், மரணத்தின்பின் மனிதர் நிலை, அறிதுயில், மனிதவசியம், தொலைவிலுணர்தல் என்னும் நூல்கள், நூற்பொருள் அளவில் மட்டுமல்லாது தமிழ்மொழியில் புதுத்துறைகள் பூக்கவும், பொலிவுறவும் துணையாயின. தமிழ்மொழியின் கருத்து நிலைகளிலும், கள அளவுகளிலும் விரிந்து பெருகி மேம்பட்டன என்பதில் ஐயமில்லை.

பொருள் புலப்படாப் புதுத் துறைகளையும், புதுச் சொல்லாக்கங்களையும், பொருள் புலப்பாடுகளையும் செய்து தமிழ்மொழி - தமிழர் மேம்பாட்டுக்குத் துணையானவர் அடிகளார். இத்துறைச் செய்திகளையும் இனிய தமிழ்நடையில் தரலாம் என எடுத்துக்காட்டியும் எழுதிக்காட்டியும் நுட்ப அறிவுத்திறம் விளங்கப் படைப்புகளால் பாடுபட்டவர் அடிகளார்.

மும்மொழி வல்லுநரான அடிகளார், பலர் தமிழ் இலக்கியத் தகுதியும் மொழிச் சிறப்பும் தனிநெறியும் அறிந்துணராது அயல்மொழி மயக்குகளிலும் அறியாமையிலும் அமிழ்ந்து கிடத்தலைக் கண்டு அவர்களை அறிவு நெறியிலும், முறையிலும் திருப்ப முயன்றார். புராணப் பொய்களைக் களைந்து, தமிழ் வழிபாட்டுணர்வு தழைக்கவும் தமிழ்ச் சமய வளர்ச்சிபெறவும் பொருள் ஒதுக்கத் தமிழகச் செல்வர்க்கு அறிவுறுத்துகிறார். தாய்மொழிக் கல்வியும், பிறமொழி வளங்களின் மொழியாக்க ஏற்பும் தமிழ்க் கல்வியாளர்க்குப் பல்துறை உதவியும் பெருகச் செய்தார்.

மொழிக் கலப்பின் முதல் எதிர்ப்பாளரான அடிகளார், பிறமொழிச் சொற்கள் ஒரு மொழியில் கலப்பது அம்மொழியின் தேக்க நிலைக்கும், வளர்ச்சியின்மைக்கும் வழிவகுக்கும் என்னும் எண்ணத்தினர். எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்ற உணர்வூட்டிப் பழந்தமிழ்ச் சொற்கள் புத்துயிர் பெறவும், பயனற்ற பிறமொழிச் சொற்கள் வழக்கொழியவும் அடிகளார் ஆவன செய்தார்.

தமிழின் இனிமை, தனிமை, தொன்மை, முதன்மை, நன்மை, செம்மை, முழுமை, இறைமை ஆகிய அனைத்தையும் தனி நிலையிலும் ஒப்புநிலையிலும் சான்றுகளுடன் அடிகளார் நிறுவினார். 'தமிழகத்தில் தனித்தமிழ்க் கிளர்ச்சி, தமிழ் ஆட்சிமொழி, திருக்கோயில் வழிபாடுகளில் தமிழில் போற்றி செய்யும் கிளர்ச்சி, தமிழ் மக்களின் மணச் சடங்கு பிணச் சடங்குகளில் தமிழ்மறை ஓதி வினையாற்றல், திருக்குறளைத் தமிழ் மறையாகக் கோடல், தேவார - திருவாசக - திருவாய் மொழியாம் தமிழ் மறைகளை ஓதல், சங்க இலக்கியப் பயிற்சி, தமிழ்ப் பண்பாடு காத்தல் வளர்த்தல், தமிழிலக்கியங்களை ஆராய்தல், தூய தனித்தமிழ் நடை எழுதுதல், தமிழ் வளர்க்குங் கழகங்களை அமைத்துப் பணியாற்றுதல் என மொழிமேம்பாடு சார்ந்த அனைத்துத் துறைகளிலும் பணிகளிலும் அடிகளார் ஆர்வங்காட்டிச் செயல்பட்டார்.

முதல் நிலை - வளர்நிலை வடிவக்கதை அமைப்பிலும், மொழியாக்கம் தழுவல் நிலையிலும், முற்கால பிற்கால இலக்கியங்களிலும் இலக்கிய அமைவுகளிலும் மக்கள் உணர்வுகளை மொழி நிலையில் ஒருமுகப்படுத்தியவர் அடிகளார். தமிழ்ச் சொல் விளக்கம், பாடநூல்களின் வடிவம், செய்தித் தாள்களின் நடை, சொற்பொழிவுகளின் நிகழ்வு, வாழ்த்துகள் - வரவேற்புகள் - அழைப்பிதழ்கள் ஆகியவற்றின் அமைப்பு என்னும் பல்வேறு நிலைகளிலும் மொழி மேம்பாட்டைக் கருத்திற் கொண்டவர் அடிகளார். சொற்பொழிவுகளிலும், பொருளாழம், பொருள் செறிவு, பொலிவுமிகு தொடர்கள், தமிழ் இலக்கண - இலக்கிய - வரலாற்று - வாழ்வியல் செய்திகள் ஆகிய அனைத்து நிலைகளிலும் மொழிமேம்பாட்டுடன் ஒன்றிக் கலந்தே அடிகளார் செயல்பட்டார்.

'சிற்றம்பலத்தின் சொற்பிரிப்பான சிறு அம்பலம் என்பதிலும் அ, இ, உ மூன்றும் இருப்பதைக் காணலாம். ஆதலால் ஓகாரமும் அ, இ, உ மூன்றும் உடையதென்றே கொள்ளப்படும். இதனால் தமிழ் என்பதும் ஓம் என்பதும் ஒன்றே ஆயின' என மொழி நிலையை இறைநிலையுடன் இணைத்துக் கண்டவர்; காட்டியவர் அடிகளார்.

ஆங்கில நூல்களின் மேற்கோள்களையும் தமிழாக்கங்களையும் தம் கட்டுரைகளில் பொருத்தமுறச் சேர்த்துத் தம் கருத்துரைகளுக்குச் செறிவும் சிறப்பும் சேர்ப்பார் அடிகளார். உரைநடையில் எழுதுதலைக் காட்டிலும் தாம் இயல்பாகவே கவியுணர்வில் பெரிதும் உந்தப்படுதலை அடிகளாரே குறிப்பிட்டுள்ளார். தமிழ் மரபு போற்றுதல் வேண்டி, மொழித் திறன் காத்தலும், மொழித் தூய்மை காத்தலும் நாகரிக மக்களின் நற்கடன் எனக் கூறியுள்ளார் அடிகளார்.

தமிழ்மொழி வளத்திற்கு ஏற்ற வகையில் மொழியறிவும், மொழியுறவும் அமைய வேண்டுமென விரும்பியவர் அடிகளார். பன்மொழிப் பயிற்சியால் பயன்பல விளையும் என்பது அவர் எண்ணம். தமிழ் ஆங்கில மொழியமைப்புகளின் வேறுபாடு உணர்ந்து, செந்தமிழ் இயல்புக்கு இணங்கும் வகையில் மொழியாக்கம் செய்தார் அடிகளார்.

வட்டக்கர்ட்சி (circus), ஒலியெழுதி (gramaphone), உப்புணா (salts), முதலுணா (protein) எனவும், அருள் (காருணியம்), அறிவு (சித்து), அறிவுநெறி (ஞானமார்க்கம்), அன்புநெறி (பக்திமார்க்கம்), படையல்மேடை (பலிபீடம்), தவத்தோர் (யோகிகள்) எனவும் அடிகளார் தமிழாக்க முயற்சிகள் மொழி மேம்பாட்டுக்கான முயற்சிகளேயாம்.

தமிழ்மொழி மேம்பாட்டுக்கான இயக்கம் கண்டவர் அடிகளார். "'வட சொற்களும் பிற சொற்களும் தமிழிற் கலத்தலால் நாடொறும் வழக்கில் உள்ள நிலம், நீர், நெருப்பு, சோறு, ஒளி, கோயில், குளம் முதலான எத்தனையோ பல தமிழ்ச் சொற்களும் வழங்காமல் போதலையுணர்ந்து பிறமொழிக் கலப்பைத் தமிழினின்று அறவே ஒழித்தற்கு முயலத் துவங்கினோம்" எனத்

தம் தனித்தமிழ் இயக்கத்திற்கான காரணம் கூறும் அடிகளார், இவ்வியக்கத்தின் நோக்கம் பிறமொழி வெறுப்போ புறக்கணிப்போ அன்று, பிறமொழிக் கலப்பிலிருந்து தமிழ் மீட்பும் காப்புமே எனக் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். எழுதும்போதும் பேசும்போதும் பிறசொல் கலப்பின்றித் தூய தமிழாகவே மொழியை விளங்கச் செய்வதுடன், 'தூய தமிழில் எழுதுவதற்கும் பேசுவதற்கும் மாணாக்கர்களை ஊக்குவிப்பதே என் தலையாய பணியாகும்' எனக் கூறி முயன்றது அடிகளாரின் மொழி மேம்பாட்டுப் பணியாகும்.

முற்காலத் தமிழ்ப் புலவோரின் துணிவும் அறிவார்ந்த புலமையும் பழந்தமிழ் மொழி நலனுக்கும், பண்பாட்டுப் பாதுகாப்புக்கும் படைப்பருமைகளுக்கும் காரணங்களாயின என்கிறார் அடிகளார். முற்கால - பிற்காலத் தமிழ்ப் புலவோர் அவர்க்கும் அவர்தம் மொழிக்கும் உண்மையற்றவராயிருந்த நிலைகளையும், நிறை குறைகளையும் அடிகளார் துணிவுடன் எடுத்துக் காட்டியுள்ளார்.

தடைகள் இன்றித் தயங்காமல், இயல்பான வெளிப்பாடுகளுக்கும், கருத்தாடல்களுக்கும் கை கொடுப்பதே ஒரு மொழியின் உயரிய நோக்கமும் உண்மைப் பயன்பாடுமாகும் எனக் கூறும் அடிகளார், வாழ்வியல் வளர்ச்சிக்கான வழிமுறைகளைக் கொண்டதுடன் வளர்மொழியாகவும் விளங்குவது தமிழ், அது அழகிய கருத்துக்களையும் அரிய கருத்துக்களையும் ஆற்றலுடன் உணர்த்தி வெளிப்படுத்தும் இயல்பினதாகும் என்கிறார். திராவிட மொழிகளில் இலக்கண, இலக்கியத் துறைகளில் தனித்து இயங்கக் கூடிய மொழி தமிழேயன்றிப் பிறிதில்லை, இந்திய நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே பரவலாகப் பேசப்பட்ட மொழி தமிழாகும் எனத் தமிழ்மொழியின் மேம்பட்ட நிலைகளை எடுத்துரைக்கிறார் அடிகளார்.

அறியாமை அகலவும், சமூக - சமய - பண்பாட்டு - ஒழுக்க- அறிவு முன்னேற்றம் பெறும் வகையில் தமிழ் மக்களைக் கருத்திற்கொண்டு அவர்தம் உயர்வுக்கும் பயன்பாட்டுக்குமென ஆக்கப்பட்ட நூல்களைக் கொண்டது தமிழ்மொழியாகும். எனவே பிறமொழி நூல்களைக் காட்டிலும், தமிழ் மொழி நூல்களே தகுதிமிக்கன. இத்தகு தனித்தமிழ் நூற்பயிற்சியினை எங்கும் பரவச்

செய்து, நம் தமிழ் மக்களைத் தம் தாய்மொழி அறிவில் விளங்கச் செய்வீர்களாக" என வேண்டியவர் அடிகளார்.

'உன் தனித்தமிழ் படிக்கப்படிக்க என் செவிகளுக்கு இன்பமாயிருக்கிறது. தனித்தமிழில் எழுதுவதை விடாதே. நீ தனித்தமிழிலே எழுதுவது எனக்கு விழிப்பையும் கிளர்ச்சியையும் உண்டு பண்ணுகிறது' என அடிகளாரின் மொழிமேம்பாட்டுப் பணியை அவர்தம் ஆசிரியர் நாயகரவர்களே பாராட்டியுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

மொழிப் பயன் துய்த்தல் - உணர்த்தல் - மொழிநலன் காத்தல்- மொழித் தூய்மை போற்றல் - மொழி வளம் பெருக்கல் - மொழிகளின் ஒப்பாய்வு என அடிகளாரின் மொழி மேம்பாட்டுக்கான பணிகளும் பங்களிப்புகளும் பல நிலையின.

இன்ப வடிவான இறை நிலையொத்தது தமிழ் எனக்கூறும் அடிகளார், தமிழில் உள்ள முப்பது முதலெழுத்துகளும், மூன்று சார்பெழுத்துகளும் குறைபாடற்ற உறுப்புகளுடைய மக்களின், குறைபாடற்ற முயற்சிகளால் இயற்கையாகப் பிறப்பனவாகும் என்றும், புதுமொழிகளைக் காட்டிலும் பழஞ்சிறப்பும், எப்பொருளையும் நுட்பமாகக் குறிப்பிடும் சொல்வளமும் கொண்டது தமிழ் எனவும் கூறும் அடிகளார், பிற மொழி நூல்களின் திறங்களையும் கற்றறிதல் நலம் பயக்குமென்கிறார்.

'ஆராய்ந்து பாராது தமிழ் நெடுங்கணக்கைக் குறுக்க வேண்டுமென்றும், பிறமொழிச் சொற்களையும் ஒலிகளையும் தமிழிற் சேர்க்க வேண்டுமென்றும் சொல்வது வருந்தத்தக்கது'- 'ஒரு மொழியின் விரைந்த செலவை அடக்கியாளுதல் யார்க்கும் முடியாத தொன்றாகும்'- தவிர்க்க முடியாத வேளைகளில் சிறப்புப் பெயர்களையும், குறியீடுகளையும் வழங்கும் தேவையான இடங்களில் மட்டும் வட சொற்களை ஏற்றுக் கொள்ளலாம் எனவும் அடிகளார் நடைமுறை உண்மைகளை உணர்ந்து கூறியுள்ளார்.

பிறமொழிச் சொற்களை எடுத்தாள வேண்டிய இக்கட்டான சூழ்நிலைகளிலும் அவற்றுக்கீடான தமிழ்ச் சொற்களையே

பயன்படுத்துதல் நன்முயற்சியாளர்க்கும் நாகரிக நெஞ்சினர்க்கும் மொழிப் பற்றாளர்க்கும் அடையாளமாகும். முயற்சியும் அறிவும் உடையவர்கள் முனைந்தால் புதுப் பொருள்களுக்குத் தமிழிலேயே பெயரமைக்கலாம். அயல்மொழிச் சொற்களை உருவு திரியாமற் சேர்த்தலும், உருவு திரிந்தவற்றையும் அளவுக்கு மிஞ்சிச் சேர்த்தலும் ஒரு சிறிதும் பொருந்தாது' எனக் கூறும் அடிகளார் சொல்லாய்வு வழி மொழித் திறன் நிறுவும் முயற்சியாளர். ஆணவம் என்ற சொல் ஆண்மை என்னும் பண்புச் சொல்லின் அடியாகப் பிறந்ததாகும். 'ஒழுங்கு' என்ற பொருளில் வழங்கும் 'மாலை' வடசொல் திரிபாகாது. தமிழ்ச் சொல்லான இச்சொல்லே வடமொழிக்கண் சென்று 'மாலா' எனத் திரிந்தது என விளக்கும் அடிகளார், தமிழ் நூல்களில் காலந்தோறும் கலந்த பிறமொழிக் கலப்பு விழுக்காடுகளைக் கணக்கிட்டுக் காட்டியுள்ளார்.

'தமிழ்த் தாயின் தனிப்பெரும் மாண்பு கெடுகிற வகையில் பிறமொழிச் சொற்களைப் புலவர்கள் தமிழில் கலப்பதுதான் 'கலிகாலக் கொடுமை' யாகும். பழஞ்சொற்களைத் திரித்துப் பேசுவதும், பிறமொழிக் கலப்பின் வழியான மொழிச் சிதைவும், மொழிக் கலப்பு- மொழிச் சிதைவுகளுக்கான காரணங்களாகும். இவையிரண்டும், ஒன்றுபட்டு வலிவோடு வாழும் மக்கட் கூட்டம், பிளவுபட்டு வலிமை குன்றி, வளமையிழந்து மொழி நலன் கெட்டு வாட வழிவகுக்கும்' என மொழி மேம்பாட்டின் தேவையைத் தெரிவித்துத் தெளிவிக்கிறார் அடிகளார்.

ஒரு மொழியின் மேம்பாட்டுக்கு, அதில் இடம்பெறும் கருத்துகளின் வெளிப்பாட்டுக்கும் வெற்றிக்கும் கையாளப்படும் நடை முதன்மையானதாகும். இதையுணர்ந்த அடிகளார், தம் நடையில், செறிவு, உவமையழகு - மறுப்பழகு, நீண்ட தொடரமைப்பு எனப் பல நலன்களைக் கையாண்டு மொழி மேம்பாட்டுக்கு உறுதுணை செய்தார். இடையறாத கருத்துக் கோவை இன்னொரு கூடுதல் சிறப்பாகும். இயல்பான - வெளிப்படையான - நேரடியான புனைவற்ற செய்திகளைப்பற்றி எழுதும்போதுகூட அடிகளாரின் நடையில் கவிதை யுணர்வுகளின் கலையழகுக் கவினும், ஆற்றொழுக்கும் எளிய அறிவு நல மாந்தரும் அறிந்துணர்ந்து மகிழும் வண்ணம் நடையமைத்து மொழி

மேம்பாட்டுக்கு மேலும் மேன்மை சேர்த்தார் அடிகளார். சங்கப் பாக்களையொத்த சீரிய சொல்லும் கூரிய போக்கும் கொண்டது அடிகளார் நடை. கருத்துகளுக்கும் கற்பார்க்கும் ஏற்ற வகையில், அழகு, சுவை, மரபு ஆகியவற்றுக்கு முரண்படாத வகையில், பல்வகை நடைகளையும் கையாண்டு மொழி - இலக்கிய நடைவரிசையில் குறிப்பிடத்தக்க நிலையில் அடிகளார் விளங்கினார். படைப்பாசிரியர், உரையாசிரியர், திறனாய்வாளர் எனப் பல நிலைகளில் அடிகளாரின் நடைத்திறம் நன்கு சிறந்திருந்தது.

'தனித்தமிழ் ஞாயிறு - வடமொழிக் கலவையாகிய மூடுபனியால் தனது தூய பேரொளி சிறிது சிறிதே மங்கித் தோன்றிய தாயினும், அப்பணியினைத் தனது பேரொளி வெப்பத்தால் உறிஞ்சித் தனதியற்கை யொளி குன்றாமலே விளங்கி இலங்கிய', நிலையை அடிகளார் கூறும் நடையில் அவரது நடைத்திறமும் உவமைத் திறமும் நன்கு தெரியவரும்.

ஆரிய மொழியிலிருந்து தமிழ் பிறந்தது எனக்கூறுவது பெரும்பிழை என அடிகளார் ஆங்காங்கே குறிப்பிட்டுள்ளார். தமிழும் வடமொழியும் தம்முள் ஒரு சிறிதும் இயையாமை கண்டு காட்டிய அடிகளார், தமிழ்ச் சொல்லாக்கத்தையும் பொருளாக்கத்தையும் நுணுகியாய்ந்து, அவை "பிராணிகளொலிக் குறிப்பியற்கைக் காரணங் கொண்டு விளங்குவதாய்க் குறிப்பிட்டுள்ளார். வடமொழி முதலான பிற எல்லா மொழிகளிலும் செஞ்சொல் தோற்றமுற்றெழுந்த தொன்மொழி தமிழேயாகும் எனவும், தமிழ் நான்மறைகள் வடமொழி நான்மறைகளோடு ஒப்புமை கூறமுடியாத அளவுக்கு அளப்பரிய மாட்சிமிக்கவை எனவும், 'நமது இனிய செந்தமிழை மறப்பதும் அதனைப் பயிற்சி செய்யாமல் கைவிட்டிருப்பதும் நமதுயிரையே நாம் அழிப்பதாய் முடியும்" எனவும் அடிகள் தமிழ்மொழியின் மாண்பையும் மேம்பாட்டையும் எடுத்துரைக்கிறார்.

மொழி மேம்பாட்டிற்கென ஏடு நடத்தியவர் அடிகளார். அதில் பொருத்தமான புத்துரை ஆக்கல், போலியுரை கடிதல், புதுச் சொல் ஆக்கல், புதுத்துறை ஆய்தல் எனப் பல பணிகளால் மொழி மேம்பாட்டுக்கு அடிகளார் இடையறாப் பணிகளாற்றினார்.

அடிகளாரின் கடிதங்களும் நாட் குறிப்புகளும் கூட மொழி மேம்பாட்டுக்கான பணிகளையே முனைந்து செய்தன. மொழி வளம் பெருக்குதல், மொழியருமை கூறுதல், மொழிப் பகை கடிதல் எனப் பல நிலைகளிலும், துறைகளிலும் அடிகளாரின் தொண்டு அமைந்தது. எத்துறைப் படைப்பாயினும் ஆய்வாயினும் அவற்றில் இலக்கிய நலமும் நயமும் இழையோடும் வகையில் மொழியின் இனிமைக்கும் இயல்புக்கும் அழகு சேர்த்தவர் அடிகளாவார்.

தமிழ் மொழி மேம்பாட்டுக்கான பணிகளைப் போன்றே அடிகளாரின் இலக்கு, தமிழ் இன - தமிழ்ச் சமுதாய மேம்பாடு பற்றியே எப்போதும் எண்ணியும் எழுதியும் வந்தது.

## தமிழ் இன மேம்பாடு

அடிகளாரின் மொழிவழியிலான முயற்சிகள் அனைத்தும் தமிழ் இன மேம்பாட்டைக் கருத்திற் கொண்டதாகவே அமைந்திருந்தது. வெற்று இலக்கியப் படைப்புகளாக இல்லாமல், தமிழின வெற்றிக்கான இலக்குப் படைப்புகளாக அவை விளங்கின. தமிழின முன்னேற்றத்திற்கும் உயர்வுக்கும் முட்டுக்கட்டை களாகவும் தடைக் கற்களாகவும் விளங்கும் சாதி, அறியாமை, சடங்குச் சங்கடங்கள், வறுமை, வெற்றுக் காலக் கழிப்பும் பொருட் செலவும், மூட நம்பிக்கைகள், அயல்மொழி மயக்கம் என்ற அவலங்களை அடையாளங் காட்டி அவற்றை அழித்தொழிக்க அடிகளார் முயன்றார். இவற்றில் பல மொழி - இலக்கியம் சார்ந்தனவாகவும், சமயம் சார்ந்தனவாகவும் இருத்தலைக் கண்டுணர்ந்த அடிகளார் அத்துறைகளில் தம் செயல்பாடுகளைச் சிறப்புறச் செய்யத் தொடங்கினார்.

இன மேம்பாட்டுக்கான பணிகளில் இன்றியமையாதது இளைய சமுதாயத்தினரிடையே ஏற்படும் விழிப்புணர்ச்சியும் பொறுப்புணர்ச்சியும் என்பதை உணர்ந்த அடிகளார் அதற்கேற்றவாறு ஆசிரியப் பணியை விரும்பித் தெரிவு செய்தார். இளைஞர்களை ஈர்க்கும் வகையில் பாடத்துடன் தமிழ் இன - மொழி - இலக்கிய வரலாறுகளை இணைத்துக் கூறித் தெளிவு படுத்தினார். அடிகளாரின் பட்டினப்பாலை ஆராய்ச்சியுரைப் பதிப்புக்கான பொருட்செலவை மாணவர்களே ஏற்றுக்

கொண்டது அடிகளார் - மாணவர், இருவர்க்குமிடையேயிருந்த இணக்கத்தைக் காட்டுகிறது. தமிழ் மக்களின் துன்பந்தொலைத்த இன்ப வாழ்வுக்கு வழி காண்பதும் காட்டுவதும் அடிகளாரின் முதன்மை நோக்கமாயிருந்தது.

பண்டை நாள் பழக்க வழக்க ஒழுக்கங்களைப் பழந்தமிழ்ப் புலவர் நூல்கள் வழி இன்றைய இளைஞர்க்கு எடுத்துச் சொல்வதே ஏற்ற வழி என்பதுணர்ந்து அடிகளார் பழந்தமிழ் இலக்கிய ஆராய்ச்சியுரைகளில் பெரிதும் ஆர்வங்காட்டினார். அவற்றின் வழியிலே கற்பார் நெஞ்சினை ஒழுங்குபடுத்தியும், ஒருமுகப் படுத்தியும், பழந்தமிழ் மக்கள் உலகவியற்கைகளிலிருந்து வழாது வாழ்ந்து முடிந்த உண்மைகளை உள்ளங் கொள்ளுமாறு செய்தார் அடிகளார்.

இளைஞர்க்கான, பழந்தமிழ் ஆராய்ச்சியுரைகளுடன், சிந்தனைக் கட்டுரைகளையும் அறிவுரைக் கொத்துகளையும், பொருந்தும் - பொருந்தா உணவுகளையும், நூறாண்டு உயிர் வாழும் நுட்பத்தையும் சாதி வேற்றுமைச் சங்கடங்களையும் அடிகளார் எழுதியும் எடுத்துக்காட்டியுமுள்ளார். சமயம் சார்ந்த நம்பிக்கைகளிலும், வழிபாட்டுமுறைகளிலும், ஒழுங்கு முறைமைகளிலும் தமிழ் இன மேம்பாட்டுக்கான உயரிய சிந்தனைகளைக் கூறியுள்ளார்.

ஒருவர், அடுத்தவரின் உள்ளார்ந்த உணர்வெண்ணங்களிலும் உரிமை நிலைகளிலும் குறுக்கிடவோ ஆளுமை செய்யவோ முற்படின், அம்முயற்சி அவ்விருவரின் உரிமை மீறலுக்கும், அமைதி இழப்புக்கும், அழிவுக்கும் வழிவகுக்கும் என்பன போன்ற வாழ்வியல் உண்மைகளைச் சொல்லிச் சிந்திக்க வைக்கிறார் அடிகளார். அடுத்த உயிர்களிடத்துக் காட்டும் தூய அன்பினாலான அருட்டன்மையே உண்மைச் சிவமாகும் என்பது சிறந்த வாழ்வியல் மேம்பாட்டுக்கான உரத்த சமயக் கோட்பாடாகும்.

உலக வாழ்வின் தேவைக்கும் தெளிவுக்குமான பொருள்களை ஆராய்தலும், பெரும்பொழுதைச் செலவிடுதலுமே இன மேம்பாட்டுக்கான வழிமுறையாகும் எனக் கூறும் அடிகளார் தூய அறிவாற்றலாலும் அருட்டுணையாலும் தீதுகளையும் சமய

அடிப்படையே போற்றத்தக்கதென்கிறார். இந்து சமயங்களின் ஒருமைப்பாட்டு உண்மைகளை உணர்தலே மகிழ்வு தருவதாகும் என்பதுடன், தமிழர்தம் திருவுருவ வழிபாடுகளைப் பிறர் இகழுதல் பொருந்தாது எனவும் கூறுகிறார். மெய்ப்பொருள் காணவும் காக்கவும் பெருந்துணையாகும் தொல்காப்பியம், திருக்குறள் வழியிலான தத்துவ உரிமை காத்து மெய்ப்பொருள் கடைப்பிடிக்க வற்புறுத்தினார் அடிகளார்.

உயரிய வழிகளில் தாமுந் துய்த்துப் பிறரும் துய்க்கும் வகையில் அன்புவழி அறப்பணிகளாற்றி மறுமையுலகப் பேரின்ப வாழ்வுக்கு வழி செய்தலே பொருளீட்டலின் உண்மை நோக்கும் அறிவுடைமையுமாகும். அறிவுச் சிறப்பும், மனம் மொழி மெய்களின் தூய்மையுமே வாழ்வியல் மேம்பாட்டுக்கு வகை செய்வன. பெண்டிர்க்குக் கல்வி பெருஞ்செல்வமாகும். மக்களுக்கு உலக நூற் கல்வி அறிவுநூற்கல்வி ஆகிய இரண்டும் தேவை.

இயற்கை வழங்கும் உணவுப் பொருள்கள் கேடுறாத வகையில் அவற்றைப் பயன்படுத்த வேண்டும். பல்வகைப் பண்டங்களாலான மாறுபட்ட உணவுகளைப் பெருக்கியும் பெற்றும், இடம் காலம் உடலியல்பு உணர்ந்து சுவைத்துண்டு, உழைப்பதே நல்வாழ்வுக்கான வழியாகும். ஊன் உணவு உடல் தொல்லைகளை மிகுவிக்கும். இயற்கை உணவுகளே இனியனவும் ஏற்றனவுமாகும். இயற்கை உணவே இறையுணர்வுக்கு இசைந்ததாகும். புலால் உணவு வலிமையையும், வாழ்வியல் நலன்களையும் தராது; பயன்பாட்டறிவும் கிட்டாது என்கிறார் அடிகளார்.

கல்வி, நினைவாற்றல் பெருகவும் நல்லறிவு நன்னெறிகள் தழைக்கவும், துன்பம் தொலைக்கவும், மனஅமைதி பெறவும், உயிர் ஆற்றல் மிகுதிப்படவும், அறிதுயிலென்னும் அருட்டூக்கம் துணை செய்யவும், உயர்குணங்கள் சிறந்து விளங்கினால், எண்ணியர் எண்ணியாங்கு எய்துவர் என்பது உறுதியும் உண்மையுமாகும் என்கிறார் அடிகளார்.

தமிழ் இன மேம்பாட்டுக்குத் தம் உரை விளக்கங்களாலும் வழி காட்டுகிறார் அடிகளார். 'நன்மையை யழிக்கும் இணைவிழைச்சு, சினம், செருக்கு, அழுக்காறு, அவா,

பொருட்பற்று என்னும் அறுவகைக் குற்றங்களையும் களைந்து, நல்ல அறச் செயல்களை நிறையப் புரிந்து இழிக்கத்தக்க ஐம்புலன்களை அறுத்து, இன்ப துன்பங்களைக் கைவிட்டு, நற்காட்சி, நல்லுள்ளம், நல்வாய்மை, நற்செய்கை, நல்வாழ்க்கை, நன்முயற்சி, நற்கடைப்பிடி, நல்லுளத்தோர் தலைப்பாடு என்னும் பழிப்பில்லாத வாழ்க்கை எட்டையும் வளரச்செய்து இவற்றின் மாறான, தீய வாழ்க்கை எட்டையும் ஒழித்து அறவொழுக்கங் கற்றலை ஏற்க முடிந்த நிலையே வீடு பேற்றுறுதியாம்" என அடிகளார் கூறும் வழிமுறைகள் இனத்தின் இம்மை - மறுமைப் பயன்பாட்டுக்கும் மேம்பாட்டுக்கும் துணை செய்வதாம்.

தொடக்கக் காலங்களில் சாதிப் பிரிவுகள் இல்லாது இருந்ததையும் காலப் போக்கில் ஒழுக்கம் பற்றியும், தொழில்கள் சார்ந்தும் சாதிப் பிரிவுகள் தோன்றியதையும் எடுத்துக் காட்டும் அடிகளார், சாதி வேற்றுமைகளைப் பழமை கருதிப் பின்பற்றுதல் பிழையானதெனவும், அவை பகுத்தறிவுக்குப் பொருந்தாதது எனவும், கல்வி-ஒழுங்கு-தூய்மை-கடவுள் வழிபாடு முறைகளாலும் வழிகளாலும் அவை களையப்பட வேண்டுமென்பதையும் வலியுறுத்தி ஒன்றுபட்ட இன மேம்பாட்டுக்கான இனியவழி காட்டுகிறார்.

இடையிடையே புகுந்த இனத் தாழ்வுக் கூறுகளை விலக்கி, உரிமை வாழ்வில் ஒன்றுபட்டு உழைத்துத் தமிழினம் மேம்பட வேண்டுமென்கிறார் அடிகளார். அன்பும் அறிவும் அருளும் செறிந்த ஒழுக்கமே உயர்வு தரும். பழந்தமிழ்ப் பண்பாட்டுப் பழக்க வழக்கங்களைப் பற்றியொழுகி, ஒற்றுமை வாழ்க்கையில் உயர வேண்டும். இதற்குப் பன்னூல் பயிற்சியும் நடுநிலை நெஞ்சும் வேண்டும்.

தமிழ்ப் பகைவரிடத்திலே விழிப்புறுதல் தமிழின மேம்பாட்டுக்கு முதன்மைத் தேவை. பிறமொழி மயக்கம் பிழைகள் பலவற்றுக்கு வழிவகுக்கும். அறிவுக் கருவூலமாக அருந்தமிழை ஆக்க வேண்டும். இன மேம்பாட்டிற்கான இன்றியமையாத இன்னொரு தேவை அறியாமை நீக்கம். புராணப் புரட்டுரைகளையும் பொய்க்கதைகளையும் போக்கும்வகையில் புறக்கணிக்க வேண்டும். பிறர் துன்பந்துடைத்து இன்பம் பெருக்கும் அறம் எங்கும் தழைக்க வேண்டும்.

உணவு ஒழுங்குமுறைகளாலும் செயல்முறைகளாலும் நினைவை ஒருமைப்படுத்தி, எளிய வாழ்க்கையால் ஏற்றங் கொள்ளச் சொல்கிறார். அதுவே நீடித்த நல்வாழ்வுக்கும் நிம்மதியான நல்வாழ்வுக்கும் துணையாவதென்கிறார் அடிகளார். மெய்யறிவு மேன்மையும் மேம்பாட்டுக்குத் தேவையென்கிறார் அடிகளார்.

முன்னோர் முறைமை உணர்தலும், அதனை நிகழ்கால வாழ்வுடன் பொருத்திப் பார்த்தலும், போற்றிக் காத்தலும், வருங்காலத்திற்கான வழியமைத்தலும் இன மேம்பாட்டுக்கு இன்றியமையாததென்கிறார் அடிகளார்.

அற்றைநாள் ஆசிரியர் அறிவுறுத்தியவாறு, அறியாமை நீங்கி, அறிவு தெளிந்து, இயற்கையின்பம் திளைக்கும் பேரின்பப் பேறே பிறவி நோக்கமும் மேம்பாடுமாகும் என்கிறார் அடிகளார்.

நினைவை ஒருவழி நிறுத்தலின் முறையால் எண்ணங்களை வலிமையுற்றுச் சிறக்கச் செய்து - தூய்மைப்படுத்தித் தமிழினத்தின் அறியாமையையும் வறுமையையும் போக்க முடியுமென்கிறார் அடிகளார். நோய்த்துயர் நீங்கவும் மனக் கவர்ச்சிக் கலை கைகொடுக்கும் என்கிறார் அடிகளார்.

மொழிவழியிலான உரிமையும் தெளிவும் பெற்று, சுமை விலக்கித் தமிழினம் மேம்படத் தமிழும் ஆங்கிலமுமே போதுமென்கிறார் அடிகளார்.

அறிவுநிலையும் அன்பு வடிவமுமே ஆண்டவன் நெறிகள்; மத வேறுபாடுகள் மனத்திற்கொள்ளாமல், உயிர்க் கொலை, பலியீடுகள் தவிர்த்துக் கொல்லாமை போற்றி அறவழி நிற்றலே தமிழர் மதங்களின் அடிப்படை. போலிச் சடங்குகளையும், பொய்ம்மைப் போக்குகளையும் போற்றாதொழித்தலே இன மேம்பாட்டுக்கு இன்றியமையாதது. தலைமை - தாழ்மை நிலைகள் இல்லாத ஒத்த அன்பும் உரிமை வாழ்வுமே உயரிய நிலையை எட்டச் செய்யும்.

இளைஞர்களின் உடல்நலம், மனநலம், அறிவுநலம் சார்ந்ததே ஓர் இனத்தின் மேம்பாடு; அவர்தம் அனைத்து வகை அறிவு நிலைகளும் சிறக்க வேண்டும்; தீய உணர்வுகளை அணுகவிடாமல் மிகுந்த விழிப்புடன் இருக்க வேண்டும். அதற்கு நன்னூற் பயிற்சியும்,

நற்சமயச் சிந்தனைகளும், நல்லுணவுப் பழக்கவழக்கங்களும் நாளும் தேவை. பொய்ம்மைப் போக்குகளையும் போற்றுதல்களையும் விலக்கிப் பொல்லாப் பொழுதுபோக்குகளைத் தவிர்த்து, நன்முயற்சிகளிலும் நற்சிந்தனைகளிலும் நாள்தோறும் ஈடுபட வேண்டும். தமிழ் மேம்பாட்டுக்கு மட்டுமல்லாது, தமிழின மேம்பாட்டுக்குமான அடிகளாரின் நூற் செய்திகள் அவரது படைப்புகளிடையே பரவலாகக் காணக்கிடைப்பதும், கலந்து கிடப்பதும் நன்கு உணரலாம்.

மக்கள் உருவாம் பண்பிலும், நாட்டுணர்விலும் மொழியுணர்விலும் கடவுள் தன்மை கண்டு வணங்கிப் போற்றுதல் மேம்பாடுதரும் என்னும் கருத்தினர் அடிகளார். மொழியின் - நாட்டின் - வளங்காத்தலும், வளம் பெருக்குதலும் இன மேம்பாட்டுக்கான இன்றியமையாக் கூறுகள் எனக் கூறும் அடிகளார் அறிவு பெருக்கும் வகையில் ஆசிரிய அன்பும் நன்றியும் போற்றுதல் தேவை என்கிறார்.

பெண் தரும் இன்பம் பொய்யானது, தானும் துய்த்துப் பிறரும் துய்க்கும்வகையில் வழங்குதலே வாழ்க்கை நோக்கமாகும்; ஊழ் வலிமையானது; உண்மையாளரே இம்மையிலும் மறுமையிலும் இன்பம் பெறுவர். அறிஞர்க்கு அழிவில்லை; இம்மை ஒழுங்கே செம்மையானது - இனிய வாழ்வுக்கு எப்போதும் துணை செய்வது எனப் பல கருத்துக்களைக் கடைப்பிடித்துத் தமிழினம் மேம்பட அடிகளார் அறிவுறுத்துகிறார். உளவியல், உலகியல், கல்வியியல் எனப் பல்துறை உண்மைகளையும் அடிகளார் இன மேம்பாட்டுக்கென எடுத்துரைத்துள்ளார். காதலன்பும் வள்ளல் தன்மையும் வாழ்க்கை மேம்பாட்டுக்கான வழிமுறைகள் எனக் கூறும் அடிகளார் இளைஞர்கள் ஆற்றலில், அறிவில் மிகுந்த அக்கறை காட்டியுள்ளார்.

"இக்காலத்தில் அன்புமிக்க இளைஞர்களால் நடந்தேறும் அரும்பெருங் காரியங்கள், செல்வமும் அறிவும் முதுமையும் வாய்ந்த பெரியவர்களாலும் நடந்தேறுவதில்லை; இது என் அனுபவத்திற்கண்டது" என இளைஞர்தம் ஆற்றல் போற்றுகிறார் அடிகளார். கல்வி அறிவையும் பயனையும் கருத்திற் கொண்டே செல்வம் செலவழிக்கப்பட வேண்டும்; கல்வி கடைப்பொருளாகக்

கூடாது. கல்வியும் செல்வமும், அறிவும் ஒழுங்கும் தமிழின மேம்பாட்டுக்குப் பெரிதும் போற்றப்பட வேண்டியன என்பது அடிக்ளார் கருத்தாகும்.

பகுத்துணர்ச்சியும், நல்லுணவு -நல்லுழைப்பு - நல்லறிவு தரும் நற்கல்வி ஆகியனவற்றுக்குத் துணையாகும் தமிழ்க்கல்வி போற்றப்படுதல் வேண்டும்; அதிலும் பெண்கல்வி பெரிதும் போற்றப்பட வேண்டியதாகும். கல்வி நூல்களில் செறிவும் செம்மையும் சேர்க்க வேண்டியது கற்றோர் கடமையாகும். அறியாமை வளர்க்கும் கட்டுக் கதைகள் போக்கி, அறம் - ஆண்மை - பண்பாடு - தொழில்முறை சிறக்கச் செய்யும் உண்மைக் கல்வியே உயர்வுதரும். பகுத்தறிவில்லாப் போலி நூல்களைப் புறக்கணிக்க வேண்டும். மெய்ந்நெறி - மெய்யுணர்வு நூல்கள் மேலும் பெருகச் செய்ய வேண்டும். உயரவும், உறவாடவும் உதவாத பிறமொழிக் கல்வியாலும் பயிற்சியாலும் பயனேதுமில்லை. தொழில்நுட்பம், வாணிபம், அரசியல் என்னும் பல்துறைச் செய்திகளைக்கூறும் அறிவார்ந்த மொழிகளே அறியப்பட வேண்டியன. பேரறிவுப் பொருள் வணக்கமே அனைத்துச் சமய வழிபாடுகளின் அடிப்படைகளாகும். தூய்மையும் அன்பும் அதற்குத் துணை நிற்பன. மனம் மொழி மெய்களால் முரண்படாமல், உயிர்க்கு உறுதியும் நன்மையும் பயப்பனவற்றை ஒரு முகமாய் நாடி நிற்பதும் தேடி முயல்வதுமே தேவையானதாகும்.

குற்றங்கண்டு குறை கூறிப் பகைமையை, மனத்துயரைப் பெருகச் செய்யும் பழக்கத்தை விட்டுத் தமிழ் மக்கள் ஒருவருக் கொருவர் அன்பு பாராட்டி, இயன்ற உதவி செய்து மேன்மேல் உயரவும், பிறரை உயர்த்தவும் முனைந்தால் அது தமிழின மேம்பாட்டுக்கு உண்மையான முன்னேற்றத்தைத் தரும் என்கிறார் அடிகளார்.

கோயில் வருவாய்களைத் தனித்தமிழ்க் கல்விக்கும் தமிழ்ச் சமய வளர்ச்சிக்கும் பயன்படுத்த வேண்டும். சமயச் சான்றோர், தமிழ்ப் பெரியோர்க்கு உரிய உதவிகள் அமையும் வகையில் அவைகளும் கழகங்களும் அமைக்க வேண்டும். பல்துறை ஆசிரியர்க்கும் அவர்தம் பணிக்கேற்ற ஊதியங்களையும் சிறப்புக்களையும் தரவேண்டும். 'தமிழ்கற்றவர்கட்கு எல்லா வகையிலும் பொருளுதவி

செய்து அவர்களைச் சிறக்க வைத்தால்தான் இந்நாடு முன்னேற்றம் அடையும்' என்பது அடிகளார் கருத்தாகும். பண்பாடு சிறக்கச் செய்யும் வழியிலான இனமேம்பாட்டுக்கான இன்றியமையா முயற்சிகளாகவே இவற்றை அடிகளார் கூறியுள்ளார்.

நல்ல உள்ளமும், நடுநிலை நெஞ்சமும், வருவாய் வளனுக்கேற்ற வாழ்க்கை முறையும் தேவை. பல தெய்வ வணக்கமும் பலியீட்டு முறைகளும் விலக்கப்பட வேண்டியவை. எதிலும் முழுமுதற் பொருளையும், உண்மைப் பொருள் - உண்மைத் தன்மை காணுதலையும் மேற்கொள்ள வேண்டும். சோம்பலின்றி, அறிவின் ஆழமும் அகலமும் ஆர்வமும் கொண்டு விரிந்த நோக்கத்தினராய் விளங்குதல் வேண்டும். அறிவு நூல் ஆக்கமும், ஆராய்ச்சியும் சிறக்கச் செய்ய வேண்டும். உண்மை வரலாறுகளும் உயரிய இலக்கியக் கூறுகளும் அறிந்துணரப்பட வேண்டும்.

தங்களுக்கும், தங்கள் மொழிக்கும் உண்மையற்ற நிலை, துணிவற்ற ஒருசார்பு நிலை, மக்களை வழிநடத்தும் உரிமையின்மை என்னும் குறைபாடுகளைத் தமிழினம் விட்டொழிக்க வேண்டும். வேறுபாட்டுணர்வுகளாலும் புறக்கணிப்பு எண்ணங்களாலும் ஆழ்ந்த நீண்ட உறக்கத்தில் கிடக்கும் ஒவ்வொரு தமிழ்மகனும் மொழிநிலையிலும் வாழ்வு நிலையிலும் ஆற்றவேண்டிய கடமைகளை அறிவுறுத்தியுள்ளார் அடிகளார். பெண்டிர் மாண்புணராது, தன்னிலை, தன்னுரிமை நிலைகளால் பெண்டிர்க்கு விதிக்கப்பட்டுள்ள செயற்கைக் கட்டுப்பாடுகள் அவர்க்கும், அவர் சார்ந்தவர்க்கும் பெருந்துன்பம் விளைவிக்கும். பணத்தால் வரும் நன்மைகளையும் தீமைகளையும் பட்டியலிட்டு, நிலைத்த செல்வத்திற்கும், புகழுக்கும் வழிவகை கூறுகிறார். தன் கடமைகளையும் வேலைகளையும் பணியாளரிடம் ஒப்புவித்து, உடலுழைப்பு இல்லாமல் சோம்பியிருப்பின் நோய்த் துயர் பெருகும் என்பது அடிகளார் கருத்து. தீயோர் தொடர்பால் தீங்குகளே பெருகும்; இல்லற இன்பத்தையும் கடமைகளையும் முழுமையாகச் செய்தலே முறைமை என்பன போன்ற உண்மைகளைத் தம் கதை நூல் முயற்சிகளிலும் கலந்து தந்து, தமிழின மேம்பாட்டுக்கு உதவியுள்ளார் அடிகளார்.

செல்வ வளங்களுக்குச் செருக்கு அடையாதிருத்தலும், கணவன் மனைவி பொறையுடையவர்களாக விளங்க வேண்டுதலும்,

ஏவலாளர்பால் நலமாக நடந்துகொள்ள வேண்டுமென்பதும், கணவன் மனைவியரிடையே இயற்கையாக அன்பு மலர வேண்டுமென்றும், காதலன்பு ஆற்றல்மிக்கது; எதுவும் அதனைத் தடை செய்ய வல்லதன்று எனவும் தமிழின வாழ்வுமேம்பாடு குறித்துக் கூறியுள்ளார் அடிகளார். இங்கிருக்கும் இனிய கலைகளின் இழப்புக்கோ, இறப்புக்கோ எவரும் துணை போகலாகாது. கட்குடி, பொய்யா ஒழுக்கம், பொருந்தா ஒழுக்கம், மாற்றார் மொழி மயக்கம், அறியாமை அமிழ்தல், சுயநலவுணர்வு, செயற்கை உணவு ஆகியன விட்டொழித்துத் திருந்தி வாழ்ந்தால் தமிழினம் மேம்படும் என்கிறார் அடிகளார். மழைத் தண்ணீரில் மூழ்குதலும், மலையருவி ஆடுதலும் நலம் பயக்கும். உடலாலும் உள்ளத்தாலும் நலம் பெற்ற சமுதாயமே மேம்பட்ட சமுதாயமாகும். உழைப்பால் கிட்டிய உயர்பொருள் கொண்டு உயிர்வாழ்தலே உண்மை வாழ்க்கையும் உயரிய வாழ்க்கையுமாகுமென்கிறார் அடிகளார். சாதிப் பிரிவுகளும் பிணக்குகளும் மேம்பாடு தகர்க்கும் தடைகள்; அவை அறியாமையின் அடையாளம். அஃதொழித்து அனைவரும் ஒன்றுபட்டுக் கடமையாற்றுலே மேன்மைதரும்.

கல்வியறிவில் ஆர்வங்காட்டாததும், அரசியலில் நடுவு நிலை கொள்ளாததும், பிறரை நம்பித் தம்மை உயர்த்திக் கொள்ளாதிருப்பதும், பிறரைப் பகைத்தலும், உயர்ந்தோர் நிறை காணாது குறைமட்டும் கூறித் திரிதலும் வாழ்க்கையின் வளங்குலைக்கும் குறைபாடுகள்.

மண்ணீட்டு வாழ்வும், மட்பாண்டப் பயன்பாடும், மண் வளப் பாதுகாப்பும் மனித இன மேம்பாட்டுக்கு உறுதுணையாவன. இல்லத் தூய்மையும் இதயத் தூய்மையும் இன்றியமையாதன. கைத்தொழிலுக்கும் உழவுத்தொழிலுக்கும் உரிய - உயரிய இடம் தருதல் வேண்டும். இயற்கையின் உண்மைகளை உணர்ந்தும், அதனையொட்டியும் செயல்படுதல் சிறப்பினைத் தரும். புகையிலை பொல்லாங்கு தருவது என அனைத்து நிலைகளிலும் அடிகளார் தமிழின மேம்பாட்டுக்கு வழிவகை கூறுகிறார்.

உடல் உணர்வின் நுட்பம் மன ஒருமைப்பாட்டிற்கும் அறிவு மிகுதிப்பாட்டிற்கும் வழி செய்யும். முக்காலம் உணரும் மனத்தெளிவு பயன்பல தரும். இயற்கை உணவே நுண்ணிய

உணர்வுக்கு உரியது. அதன்வழியே நினைவு நிலைகள் மேம்படும். அதன்வழி அறிதுயில் அமையும். அதனால் பயன்பல பெறலாம். பிள்ளைகளை நல்வழிப்படுத்தவும், கல்வியறிவு பெருக்கவும், நினைவாற்றல் பெருகி நிலைக்கவும், பெண்டிர் மன அமைதி - மனமகிழ்ச்சி பெறவும் - தீய பழக்கத்தோரைத் திருத்தவும் - செந்நீர் தூய்மைப்படவும் - உயிராற்றல் மிகுதல் படவும் - உள்ளூறுப்புகள் உறுதிப்படவும் - மனத்துயர் நீங்கவும் - மூச்சு ஓட்டத்தை முறைப்படுத்தவும் - அறிவியல் வழி ஆவன செய்யலாமெனக் கூறி, அடிகளார் அதன்வழி தமிழின மேம்பாட்டைப் பெறலாமென்கிறார்.

இலக்கியப் படைப்புகள், மொழியாக்கங்கள், ஆய்வுகள், மறைபொருளியல், சமயம், வரலாறு, அரசியல், மொழி என அனைத்துத் துறைகளிலும், அடிகளார் குறைகளைந்து நிறைவுகளைப் பெற்றுத் தமிழினம் மேம்பாடு பெறத் தேவையான கருத்துகளைத் தெளிவுபடுத்தியும் தெரிந்தெடுத்துக் கூறியும் தம் பங்களிப்பைப் பாராட்டுக்குரிய வகையில் செய்துள்ளார்.

## தமிழ் இலக்கிய மேம்பாடு

இலக்கிய மேம்பாட்டுக்குப் பழந்தமிழ்ப் படைப்புகளின் படிப்பு, பயன்பாடு, ஆய்வு என்ற நிலைகளிலும் புத்திலக்கியப் படைப்பு, பயன்பாடு என்ற முறைகளிலும், தழுவல் மொழியாக்கம்-அறிதுயில் என்ற புதுத் துறைகளினாலும், இயக்கம் நிறுவுதல், இலக்கியக் கொள்கைகளைக் கண்டறிந்து காட்டுதல் என்ற செயல்பாடுகளினாலும் அடிகளார் தமிழ் இலக்கிய மேம்பாட்டுக்குச் செய்துள்ள பங்களிப்பு மகத்தானது. தமிழ்நூல் யாத்தலும், தமிழ்ச் சொல் காத்தலும் அடிகளாரின் இருபெரும் களங்களாயின. தாம் ஈடுபாடு கொண்ட அனைத்துத் துறைகளிலும்-அன்றாட வாழ்வு முதல் ஆன்மீக வாழ்வு வரை- அடிகளாரின் தமிழ் இலக்கிய ஈடுபாடும் இழையோடியே யிருந்தது. அடிகளாரின் படைப்புகள், பலகாலப் பழந்தமிழ் இலக்கியப் படிப்பாலும் பயிற்சியாலும் விளைந்தவை. அவை பல கால இலக்கியப் பணிகளாகவும் படைப்புகளாகவும் விளங்கக் கூடியவை. செய்யுள், உரைநடை, கட்டுரை, கதைகள், புதுக்கதைகள், நாடகங்கள், மறை பொருளியல், நாட்குறிப்பு, கடிதங்கள் எனப் பல்துறை

சார்ந்தனவாயினும் அவை யனைத்துமே இலக்கியத் தரமும் திறமுங் கொண்டவை. உண்மை இலக்கியங்களை உயர்த்திப் பேசவும், போலி நூல்களைப் புறக்கணிக்கவும் அடிகளார் தயங்கவில்லை. அடிகளாரின் வரலாறு - வாழ்வியல் - சமயம்- மறைபொருளியல் சார்ந்த அனைத்து வகை ஆய்வுகளுங் கூட இலக்கிய நலமும் நயமும் வாய்ந்தனவாகவே விளங்குதல் வெளிப்படை.

இலக்கியப் படைப்பு முயற்சிகளில் அடிகளார் சங்கப் புலவர் சால்புமிக்கவராக விளங்குதல் அவரது செய்யுள் நூல்களால் சிறப்புற வெளிப்படுகிறது. சங்கப் பாடல்களின், இலக்கண இலக்கியங்களின் பிழிவாக மும்மணிக் கோவையும், சோமசுந்தரக் காஞ்சியாக்கமும் விளங்குதல் வெளிப்படை. படைப்பிலும், உரையிலும் செம்மையும் முறைமையும் இருக்க வேண்டுமென்னும் அடிகளாரின் விழைவின் விளைவே அவராலேயே மும்மணிக் கோவையுரை ஒழுங்குபடுத்தப்பட்டு வெளியானது. நூல் முன்னுரைகளில் நூல் தோன்றுதற்கான காரணம், நூல் தோன்றிய காலச்சூழல் போன்ற செய்திகளையும் அடிகளார் வரலாற்று நோக்கிலும் திறனாய்வு நோக்கிலும் வெளிப்படுத்தியுள்ளார்.

நூல் ஆராய்ச்சியுரை முன்னுரைகளில், நூலாசிரியர் வரலாறு, பாட்டின் வரலாறு, பாட்டுடைத் தலைவன் வரலாறு, பாட்டு, பாட்டின் பொருட்பாகுபாடு, ஓசையின்ப ஒழுங்குகள் எனப் பல செய்திகளை ஆராய்ச்சி நோக்கில் அடிகளார் வெளிப்படுத்தி உள்ளார். உருத்திரங்கண்ணனார், நப்பூதனார் போன்ற புலவர் திறங்கள் தனிநிலையிலும், ஒப்பீட்டு நிலையிலும் திறமுற எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

உயரிய நடைநலமும், கருத்து வளமும், தனித்தமிழ் இன்பமுங் கொண்ட கட்டுரைகளைத் தமிழில் எழுதியதுடன் மொழியாக்கக் கட்டுரைகளையும் இவ்வாறே படைத்துக் காட்ட முடியம் என்று முதலில் எடுத்துக்காட்டாகும் வகையில் எழுதிக் காட்டியவர் அடிகளார். இன்றமிழால் இளைஞர்களையும் பெரியவர்களையும் ஈர்க்கும் வகையில் சிந்தனைக் கட்டுரைகளையும் சமய நூல்களையும் படைத்துக் காட்டியவர் அடிகளார். வடமொழியில் உள்ள 'சாகுந்தல நாடகத்தின் சொற்பொருள் இன்பங்களையும் அறிவுப் பயன்களையும் அறிந்துணரும் வகையில் அதன் சுவை

சிறிதும் குன்றாமல், சிலவிடங்களில் மிகுதிப்படும் வகையில் தமிழாக்கஞ்செய்து தமிழ் இலக்கிய உலகுக்குப் பெரும்பங்களிப்புச் செய்தார் அடிகளார். குமுதவல்லி நாகநாட்டரசி என்னும் தழுவல் புதுக் கதையும், கோகிலாம்பாள் கடிதங்கள் என்னும் கடிதவடிவப் புதுக்கதை நூலும் அடிகளாரின் ஆற்றல்மிகு பங்களிப்புகளாகும். புத்திலக்கியப் போக்குகளுக்குத் துணையாதலைப் போன்றே அறிதுயில், தொலைவிலுணர்தல், மனக்கவர்ச்சி என்ற புதுத் துறைப் படைப்புகளுக்கும் அடிகளார்தம் பங்களிப்பு அருமையானது. தமிழர் - ஆரியர் ஒப்பீடு, மாணிக்க வாசகர் வரலாறும் காலமும்- கடவுட் கொள்கை - வேளாளர் நாகரிகம் - சைவ சமயம் - உணவு நிலைகள் - உயிர் வாழ்க்கை - தமிழ்ப் புலவோர், தமிழர் மதம் என்பன போன்ற வரலாறு - வாழ்வியல் சமயம் சார்ந்த பல்துறைப் படைப்புகளையும் தமிழில் கொணர்ந்து சேர்த்துத் தமிழ் மொழி வளம் பெருக்கியவர் அடிகளார். இப்பல்துறை நூல்களும் இலக்கியத் தகைமை கொண்டவையாக விளங்குதல் இன்னொரு சிறப்பாகும்.

திருக்குறள், பெரியபுராணம், திருவாசகம் என்னும் இலக்கியங்களின் வளமை - வலிமை நிலைகளை, ஆய்வு - ஒப்பாய்வு நிலைகளில் நிலைநிறுத்திக் காட்டியவர் அடிகளார். குறள் நெறிகளின் சிறப்புணர்த்தும் அடிகளார், 'திருவள்ளுவர் காலம் இரண்டாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட தென்பது எளிதில் பெறப்படும்; கிறித்துப் பிறப்பதற்கு 30 ஆண்டுகட்கு முன் திருவள்ளுவர் பிறந்தார்' என இலக்கியப் புலவோர் காலம் காணும் முயற்சிகளிலும் ஈடுபட்டுப் பழந்தமிழ்ப் புலவோர் பெருமைகளை நிலைநிறுத்தினார்.

அடிகளாரின் பாடுபொருளும் பாடல் திறனும் சிறப்பு மிக்கன. இறையுணர்வுப் பாடல்கள் காதலின்பப் பாடல்கள், பாநலன் மிகு பாடல்கள், கையறுநிலைப் பாடல்கள், மொழியாக்கப் பாடல்கள், பல்துறைப் பாடல்கள் எனப் பல நிலைகளில் அடிகளாரின் பாக்களைப் பகுக்கலாம். இவை அனைத்துமே கருத்து நலம், கற்பனை வளம், உணர்வு மேலீடு, வடிவழகு, வனப்பு என அனைத்துச் சிறப்புகளையும் ஒருங்கே கொண்டவை.

'செழும் புனலும் கொழும் பழமும்
எழும் பொதியக் குளிர் வளியும்
தழும் பசியப் பயிர் வளமும்
செழும் பொழிலே வாழி அன்னாய்'

எனவும்,

'கலைப்பொருள் நீயே! கருநிறம் நீயே
நிலைப்படு நெஞ்சமும் நீயே, சொலப்படும்
உயிர்க்களன் நீயே, உடம்பகத் தியங்கும்
உயிர்ப்பும் நீயே, உலம்பொரு தோளின்
வன்பும் நீயே, வணங்குமெம் முள்ளத்து
அன்பும் நீயே, வாழி அன்னாய்'

எனவும் அமையும் நிலமகள் வணக்கப்பாடலில் அடிகளாரின் இலக்கியப் படைப்புத் திறன் நன்கு வெளிப்படுகிறது. மொழியையும் நாட்டையும் கடவுளுருவில் கண்டு களித்துப் பாடிய அடிகளாரின் உணர்வு உயரியது.

. தமிழ் மொழி இலக்கிய மேன்மை குறித்துக் கூறும் அடிகளார், கொன்றையஞ் சடையோன் செழுந்தமிழென்னும் கொழுந்தமிழ்க் குழவியைக் குமரனுக்கருளி, அவன் இயல் வகையென்னும் இன்பால் ஊட்டிச் சின்னாள் வளர்த்துப் பின்னர், கூடன் மாநகர்ப் புலவர்க்கு உரிமைப்படுத்த அவர்கள், அகம் புறம் முதலான அணிகலன்கள் பூட்டி, நூலாடை தந்து சொற்சுவை, பொருட்சுவை என்னும் நல்லுணவு நாளும் ஊட்டிச் சங்கமெனும் பூந்தடத்திலும், ஆலவாயெனும் அழகுச் சோலையிலும் அன்பு பாராட்டினர். அனைவரது அன்பிலும் தோய்ந்து அழகாய் வளர்ந்த தமிழ் மங்கை, வடமொழியைத் தோழியாகக் கொண்டு தென்னாடதனில் சிறந்து தங்கினள் எனக் கூறுதலில், தமிழின் இலக்கிய வாழ்வையும் வளர்ச்சியையும் உணர்ந்து மகிழலாம். 'தமிழிந்தியமாது' எனத் தலைப்பிட்டிருக்கும் முறையிலிருந்தே அடிகளாரின் படைப்பு நுட்பம் தெரிய வருகிறது.

'குருவே, கண்ணே, திருவே, மணியே
யறிவின் கொழுந்தே பொறையினிறைவே
யெம்முள மமர்ந்த வம்மணி விளக்கே
புகழின் வடிவே பொலிவுறு மமுதே'

என்னும் தொடர்களில் அடிகளாரின் இலக்கியத் தரமான படைப்பாற்றல் வெளிப்படுதல் காணலாம். அடிகளாரின் இலக்கிய இயல்புப் பாடல்களில் இயற்கையன்பும் மேலோங்கியிருத்தல் காணலாம்.

'கதையின் உதவி வேண்டாது, பாட்டுத்தானே உளம் உருக்கும் பெற்றித்தாதல் தெளியப்பட்டதாகலானும், பாட்டினுதவி கொண்டே கதை சுவை பெற நடக்குமல்லது, கதை தானே சுவை விளையாததாகலானும் கதையே பாட்டினைச் சுவைக்கச் செய்யுமென்பாருரை போலியாம்' என மறுக்கும் மனத்தினர் அடிகளார். மொழி வழக்கிற்கேற்பவும், இலக்கண இயல்புகளுக் கேற்பவும் அழகுற மொழியாக்கம் செய்யும் ஆற்றலினர் அடிகளார்.

'அக்காலை யிரவதனி லினிய விசை
யழகுதர மிழற்று மோர்புள்
குக்கூவென் றிசை குயிலின் குறிப்பாட்டி
னெதிர் வேனிற் குலவு பண்கள்
மிக்கூர வருமிடற்றிற் பொதிகொண்டு
வெளியுகுப்ப விரிதண் கோடை
மைக்கூரும் தெளிவிசும்பிற்சிறை திரட்டு
மணந்தெளிந்தின் புறுக்கு மன்றே'

என்னும் மொழியாக்கப் பாடல், முழுமுதற் பாடல் போன்ற இலக்கிய இயல்பு கொண்டு விளங்குதல் காணலாம்.

ஒப்புமையழகுகளாலும் இலக்கிய மேம்பாட்டுக்குச் செறிவு சேர்க்கிறவர் அடிகளார். முருகனைத் தாம் அடைந்த நிலையைக் கூறுகையில், 'பொன்மலையடைந்த கருநிறக் காக்கை' யெனக் கூறுதலும், 'முருகனது முகஅழகு' பொற்கிண்ணப் பொலிவு போன்றிருப்பதாகக் கூறுதலும் குறிப்பிடத்தக்கன. ஆழ்ந்த உணர்வுகளும் அழகிய கற்பனைகளும், அரிய செய்திகளும், ஆற்றலுடன் கூடிய உணர்த்தும் திறனும் கொண்டு கற்பார்க்குக் களிப்பூட்டும் கவித்திறம் கொண்டவர் அடிகளார். அடிகளாரின் பாடல்கள் அறநெஞ்சில் விளைந்த அருந்தமிழ்ப் பனுவல்கள்.

அடிகளாரின் கட்டுரை நூல்களும் பொருட்செறிவும் மொழிச் செம்மையும் கொண்டவை. அடிகளார் சிறந்த சிறுவர் நூல்

படைப்பாளராகவும் விளங்கியுள்ளார். அவை பெரியோராலும் போற்றப்பெறும் பெற்றி வாய்ந்தவை. அறிவு நூற்கல்வியும், தூய ஒழுங்கு போற்றும் பழந்தமிழ் இலக்கண இலக்கியக் கல்வியும் அடிகளாரால் பெரிதும் வற்புறுத்தப்பட்டன. நல்லறிவும் நல்லுணர்வும் போற்றும் நற்றமிழ்க் கல்வியைத் தமிழ்க் கல்வியாளர் தழைக்கச் செய்ய வேண்டுமென்கிறார் அடிகளார்.

சில சொற்களில் பல்பொருள் நலங்கள் எழுதிக் காட்டியவர் பழந்தமிழ்ப் புலவர்கள். அவர்களது படைப்புகள் உலகியற்கை, மக்களியற்கைகளுக்குச் சிறிதும் மாறுபடாதவை. அவ்வாறே 'நம் செந்தமிழ்ப் புலவர்கள் பண்டை நந்தமிழ் ஆசிரியர் காட்டிய செந்நெறியே கடைப்பிடித்துத் தனித் தமிழில் மெய்யறிவு நூல்கள் மெய்யுணர்வு நூல்களியற்றித் தமிழை வளப்படுத்தி, நந்தமிழ் மக்களைச் சிறந்த துறைகளெல்லாவற்றிலும் முன்னேற்றி நலம் பெருக்குவாராக' என நூலாசிரியர் கடமை கூறியுள்ளார் அடிகளார்.

ஒழுங்கும், தூய்மையும் சார்ந்த பழந்தமிழ் இலக்கியங்களையும், இவ்வியல்புகள் மாறிக் கெட்டுப் பிற்கால இலக்கியங்கள் பிழையான போக்குகளைக் கொண்டிருத்தலை ஒப்பிட்டுக் காட்டுகிறார் அடிகளார். தமிழ் - தமிழ் இலக்கியப் பழமையும் அருமையும் பழந்தமிழ்ப் புலவரின் தெளிவும் திறனும் கருத்திற் கொண்டு, தமிழ் வல்லவர்கள் திருத்தமாகத் தம் படைப்புகளை ஆக்கித் தமிழன்னையைப் போற்ற வேண்டுகிறார் அடிகளார்.

மொழித்தூய்மை காக்கப்படாது போனால், காலப் போக்கில் அம்மொழி இலக்கியங்களின் நிலை மாறி, அம்மொழியின் நாகரிகப் பண்பாட்டுக் கூறுகளும் கொள்கைகளும் மறைந்து போகும் என எச்சரிக்கிறார் அடிகளார். பழந்தமிழ்ப் புலவர்களின் பண்பு சார்ந்த உண்மை வாழ்வியல் வரலாற்று நெறிகளும், பல்துறைச் செந்நெறிகளும் அவர்தம் படைப்புகளில் வெளிப்பட்டு விளங்குகின்றன. ஒரு மொழியின் வாழ்வும் வளமும் அம்மொழி சார்ந்த புலவர்களையே சார்ந்திருக்கும். விழுமிய புலவர் இல்லாத மக்கட்குழு, வளமற்ற ஊரெனவும், ஒளியற்ற பொழுதெனவும், காப்பற்ற குடிகளெனவும் சிறப்பிழக்கும். அவர்தம் அற நெஞ்சத்தையும் அன்புணர்வையும், அவர்தம் படைப்புகள் வழியே அறிந்துணர்ந்து பயன் துய்க்கலாம்.

அடிகளாரின் கட்டுரை நூல்கள், கருத்தாழம், கற்பனையழகு கொண்ட இலக்கியத் தன்மையனவாய், திறனாய்வாளர்க்கும் புத்திலக்கியப் படைப்பாளர்க்கும், மொழியாக்க ஆர்வலர்க்கும் வழிகாட்டியாக அமையும் வகையில் சிறந்துள்ளன. பழந்தமிழ்ச் சொற்பயிற்சி மிக்கதாக விளங்குதல் இவற்றின் கூடுதல் சிறப்பாகும். குறைகளைச் சுட்டி, அவற்றை நீக்குவதற்கான வழிமுறைகளையும், கருத்துகளுக்கு அணிசேர்க்கிற வகையில் அறிஞர்களின் மேற்கோள்களையும் அமைத்திருப்பது அடிகளாரின் கட்டுரைத் திறனுக்குச் சான்றாம். வினா விடைமுறைகளும், இயல் எளிமையும், பயன்மிகு பல்துறைச் செய்திகளையும் கொண்டனவாக அடிகளார் படைப்புகள் அமைந்துள்ளன.

தமிழார்வம் உண்டாக்கிப் பெருக்கும் வகையில் நூல் வடிவுகளும் முடிவுகளும் அமைத்துப் புத்திலக்கியம் படைத்தவர் அடிகளார். வழங்கும் வடிவ முறையும் கருத்து வெற்றிக்குக் கை கொடுப்பதாகும் என்பதுணர்ந்து படைத்தவர் அடிகளார். கடித வடிவப் புதுக்கதை என்பது தமிழ் இலக்கிய மேம்பாட்டுக்கான அடிகளாரின் அரும்பெருங் கொடையாகும். புதுக்கதை இலக்கணங்கள் பொருத்தமுற அமைந்த இந்நூல் கதை வரம்புகள் கட்டுக்கோப்பு - கதையொழுங்கு என்னும் பலநிலைகளில் புதுக்கதை அமைப்பாளர்க்குச் சிறந்த எடுத்துக்காட்டானதாகும்.

'தனக்குச் சொந்தமில்லாத ஒரு வேற்றிடத்தில் தனக்கு ஆகாதவர்கூட இருக்கும்படி நேர்வதைப்போல் துன்பமானது பிறிதில்லை' என்பது போன்ற உலகியல், உளவியல் உண்மைகளையும் இலக்கியப் போக்குகளுடன் இணைத்துக் கூறியவர் அடிகளார். உத்திகளாலும் உயர்திறன்களாலும், புனை கதை - புதுக்கதை இலக்கிய மேம்பாட்டுக்கு அடிகளார் அரும்பணியாற்றியுள்ளார். கதை நடக்கும் நிகழ்வுகளின் காலகட்டங்களையும் அடிகளார் கூறிச் செல்வது கூடுதல் சிறப்பாகும். கதைப் போக்கிலும் சிறந்த உரையாடல் கூறுகளை ஆக்கி அருமை சேர்த்துள்ளார் அடிகளார். கதையாசிரியர், கதை மாந்தர் அளவில் விட்டுச் சென்ற மறைபொருளைச் சுவைஞர் நிலையில் உணர்த்தும் சிறந்த இலக்கிய உத்தியையும் அடிகளார் கையாண்டுள்ளார். கதைத்திறத்தில் அடிகளார் காட்டும்

சொற்கோலக் காட்சிகள் சுவை மிக்கன. கதை யோட்டத்தினைக் கட்டுப்படுத்தாத கற்பனை, கதை மாந்தர்தம் இயல்புக்கேற்ற இயற்கையான உரையாடல், கதைப் போக்குடன் கதை மாந்தரை அறிமுகப்படுத்தும் திறன், உலகியல் - வாழ்வியல் உவமைகள், ஒப்புமைகள் ஆகியன கொண்டு, இலக்கிய மேம்பாட்டுக்கான வழிவகை செய்தார் அடிகளார். கதை நூல்களையும், சாதி ஒழிப்பு, காதல் மணம், கலப்பு மணம், வரலாறு, பண்பாடு, மொழிநலம் கூறும் கருத்து நூல்களாக ஆக்கிக் காட்டியவர் அடிகளார்.

உரையும் பாட்டும் கலந்த நாடக இலக்கியத்தை நமக்களித்தவர் அடிகளார். அனைத்து வகை உரையாடல் திறங்களையும் அழகுறக் கையாண்டுள்ளார் அடிகளார். நாடகம் சார்ந்த ஆராய்ச்சியுரையையும் அழகுற ஆக்கி அருமையான இலக்கிய உரையாகத் தந்துள்ளார் அடிகளார். காட்சிகளின் சுவைப் பெருக்கம், காட்சியருமை ஆகியனவற்றிற்கேற்பத் தம் உரைத்திறனால், சிறந்த பின்புலங்களை உருவாக்கியுள்ளமையும் அடிகளாரின் உயர்திறனுக்குச் சான்றாம். மக்களின் மனவியற்கை காட்டும் திறனில் காளிதாசனும் இளங்கோவடிகளும் இணையானவர்கள் என்பதிலிருந்து அடிகளாரின் இலக்கியத் துய்ப்பு நலம் தெரியவருகிறது. அடிகளாரின் ஆழ்புலமையும் ஆய்வுத்திறனும் அவரது நாடக இலக்கியப் பணிகளால் நன்கு தெரிய வருகின்றன.

பழந்தமிழ் இலக்கியங்களின் மேன்மைகளை அடிகளார் தம் ஆராய்ச்சி நூல்களில் நிறுவியுள்ளார். நம் உள்ளத்தையும் உணர்வையும் ஈர்க்கும் உலக இயற்கைப் பேரழகுகள் எல்லாம் பாட்டின் படிவங்களே. செய்யுள் பேரின்பமும் பேரறிவும் பயப்பதாகும். அறிவு விளக்கத்திற்கும் உணர்வு எழுச்சிக்கும் உறுதுணையாவது பாட்டாகும். அறிவையும் உணர்வையும் ஒழுங்குபடுத்தி ஒருமுகப்படுத்தி உயர்பயன் விளைத்தலே நல்லிசைப் புலவர்க்கும் நற்கவிதைக்கும் கடமையாகும். பண்பட்ட உளத்தின் நெகிழ்ச்சியே பாட்டு. உள உணர்வுகளுடன் உறவாடும் நிலையில் செய்யுளே சிறப்புமிக்கது. பழந்தமிழ்ப் பாடல்கள் சிறந்த நெறிமுறைகளையும் மரபுகளையும் அடியொற்றி அமைந்தவை. சொல்லும் பொருளும் இயல்பாகப் பொருந்தும் வகையில் எதுகை

மோனை அமைப்பவர் பழந்தமிழ்ப் புலவர்கள் எனப் பல, இலக்கிய மேம்பாட்டு நெறிமுறைகளை எடுத்துரைத்தும் அவ்வாறே எழுதிக்காட்டியும் சிறந்தவர் அடிகளார்.

இலக்கியப் புலவர்கள் பன்னூற் பயிற்சியாளராய் விளங்குதல் வேண்டும். திருக்குறளுக்குப் பின்னர், தொன்மைச் சிறப்பும், தமிழ்ச்சுவையும் கொண்டதெனச் சிலப்பதிகாரத்தையும், அதனுடன் தோழமை கொண்டதாகத் தொடர்ந்து சிறப்பது மணிமேகலை எனவும் தமிழ் இலக்கிய மேம்பாடு பேசுகிறார் அடிகளார். இலக்கியப் படைப்பாயினும் அதில் சமகால வரலாறும், சமுதாயச் செய்திகளும் சிறந்து விளங்க வேண்டும். அப்போதுதான்; அப்படைப்பு முழுப்பயன் தருவதாக அமையும் என்கிறார் அடிகளார்.

உரையாசிரியர்கள் திறனைத் தனித்தும் ஒப்பாய்வு நிலையிலும் கண்டறிந்து காட்டியுள்ளார் அடிகளார். தமிழ் இலக்கியங்களில், வடமொழி நூல்களைப் போல் இல்பொருள்- இல்பண்பு இடர்பாடுகள் இல்லை. அடிகளாரின் மறுப்புமுறைகளும் இலக்கிய இயல்பின. 'மாம்பழச்சாறு பெய்த குடுவையின் எப்பக்கத்தே பொத்திட்டு நாவை நீட்டினும், அதன் வழியே ஒழுகும் சாறு தித்தித்தல் போலப் பட்டினப்பாலைச் செய்யுளின் எவ்விடத்தே ஈடுபாடு கொண்டாலும் இனிமை பயக்கும்' என்பதைப் போல இனிய தமிழும், உளங்கவர் ஒப்புமையும் அடிகளார் ஆய்வுகளைக் கூட இலக்கியத் தகைமையினவாக ஆக்கியுள்ளமை காணலாம்.

கல்வியறிவையும் பொருளையும், அடுத்தே செல்வப் பொருளைப் போற்றினர் நம் முன்னோர். இலக்கியமும் இறைமையும் இன்ப அறிவு இயல்பின. சமய நூல்களையும் இலக்கிய நலம், நயம் சார்ந்ததாகவே அடிகளார் அணுகினார். கடவுளைத் தமிழாக வழிபடவும், தமிழில் வழிபடவும் அடிகளார் விரும்பி வேண்டினார்.

தமிழில் முதன்முதலில் மறைபொருளியல் நூல்களை எழுதியவர் அடிகளார். தமிழில் புதுப்புதுத் துறைகள் வர வேண்டும்,

வளர வேண்டும் எனக் கருதித் தாமே அதற்கு முன்னின்று முயற்சித்தவர் அடிகளார். அறிவு - நினைவு வடிவுகளையும், இயல்புகளையும், பயன்களையும் இலக்கிய மொத்த வடிவங்களில் வழங்கினார். தமிழிலக்கிய மேம்பாட்டுக்கும் தமிழ் இன மேம்பாட்டுக்கும் இத்துறைப் பணிகளும் இன்றியமையாதன என எடுத்தியம்பினார். பொருள் புலப்படாப் புதுத்துறையாயினும் புத்திலக்கியம் தோன்ற ஆர்வமும் ஈடுபாடும் தழைக்கச் செய்தார்.

நடுநிலை நெஞ்சமும், உண்மை கண்டு காட்டும் துணிவும் கொண்டவர் அடிகளார் என்பதனை அவரது படைப்புகளும் ஆய்வுகளும் எடுத்துக்காட்டுகின்றன. மெய்யறிவு போற்றும் மேன்மையாளரான அடிகளார், புத்துணர்வுப் போக்கும் புத்திலக்கிய ஆர்வமும் நெஞ்சமும் கொண்டவர். புராணப் பொய்க்கதைகளையும், தமிழ்ப் பகையையும் கடிந்து களைய முற்பட்டவர். இவற்றால் இலக்கிய மேம்பாட்டைச் செய்யமுடியும் என எண்ணியவர்.

இலக்கியப் பாடஞ் சொல்லுவதிலும், பொழிவு நிகழ்த்துதலிலும், இலக்கியப் படைப்பிலும், இலக்கிய ஆய்விலும் ஈடுபாடு மிக்குக் கொண்டவர். இலக்கிய இயக்கங்களுக்கும், வெளியீடுகளுக்கும் பாடநூல் பயன்பாடுகளை மாணவர்க்கு முழுக்கக் கிட்டச் செய்தவர். தாம் கற்ற பிறமொழிகளின் துணையையும் எடுத்துக் கொண்டு தமிழ் இலக்கிய மேம்பாட்டுக்குத் தொண்டு செய்தவர் அடிகளார்.

ஆங்கில முன்னுரைகள், ஆங்கில - வடமொழி மொழியாக்கங்கள், எனப் பல முறைகளால் தமிழ் இலக்கிய மேம்பாடுகளை எடுத்துக்காட்டி அவற்றிற்கு எழில் சேர்த்தவர் அடிகளார். ஆங்கில நூல்களாலும் கட்டுரைகளாலும் தமிழ் மேம்பாட்டுக்குத் தக்கன செய்தவர் அடிகளார். தமிழ்நலக் காப்பே தமிழ் இலக்கிய மேம்பாடு என்ற நிலையில் சிறப்புறச் செயலாற்றியவர் அவர்.

தகுதிமிக்க தமிழ்நடையால், தமிழ் இலக்கிய மேம்பாடு நிலைக்கச் செய்தார். பழந்தமிழ் உரையாசிரியர்கள், இலக்கியப்

பாவலர்கள், படைப்பாளர்களின் ஒட்டுமொத்த உயரிய நடையை அடிகளார் படைப்புகளில் காணலாம். பழந்தமிழ்ப் புலவோர் பலரின் இலக்கியக் கொள்கைகளைப் பெரிதும் மதித்துப் போற்றிப் பின்பற்றிய அடிகளார், சிறந்த இலக்கியக் கொள்கைகளையும் எடுத்துக் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மக்களியற்கை, உலகியற்கைகளை நன்கு கண்டு அவற்றை இயைத்தும் பிரித்தும் தம் நுண்ணுணர்வால் சிக்கல் விலக்கி, மக்களுக்கான பயன்பாட்டு முடிவுகளைச் சுவையுடன் திறமாக அமைத்துக் காட்டத்தக்க நல்லிசைப் புலவரே கதைகள், நாடகங்கள், காப்பியங்கள் இயற்றத்தக்க இலக்கியப் படைப்பாளராவர்.

புலவர்கள் சில்வகை எழுத்தில் பல்வகைப் பொருள்கள் காட்டும் திறம் கொண்டிருக்க வேண்டும். நூலாக்கத்தில் பொருள் நோக்கம் பொருந்திவரக்கூடாது. அரிய பொருளும் அழகிய பொருளும் கவினுற அமைந்து, அறிவும் இன்பமும் மேன்மேற் பெருகச் செய்வதே ஒரு விழுமிய நூலின் தன்மையாகும். மொழியளவிலும் நெறியளவிலும் தூய்மை காத்துச் சொற்பொருள் துலங்கச் செய்தலே நூல்யாக்கும் முறையாகும்.

“மக்கள் உயிர் உணர்வைப் பதப்படுத்தி மென்மையுறச் செய்வதும் வன்மை பெறச் செய்வதும், ஆறுதல் பயப்பதும் தேறுதல் விளைப்பதும் பாட்டு ஒன்றின்கண் மட்டுமே பொருந்திக் கிடக்கின்றன” பாட்டு பயன்மிக்கது. மனிதனின் சிந்தையில் மாற்றங்கள் விளைக்க வல்லது பாட்டு.

உரைநடை அறிவு நிலை சார்ந்தது. உணர்வு நிலை நிகழாது. உணர்வின்பம் தராமல் அறிவு விளக்கம் தரத்தக்கது. மக்களுள்ளத்தில் வாழ்க்கையில் உண்மைகளை எளிதில் பதிய வைக்கத் துணையாவது கதைகள். உண்மை நிகழ்வு நிலைகளை ஒட்டியன, உண்மை நிகழ்வுகளுடன் புனைவுகள் சேர்ந்தவை, முற்றிலும் புனையப்பட்டவை, மெய்ம்மைகளை உருவக வகையாற் பலபடப் புனைந்துரைப்பன - என அடிகளார் படைத்த கதைகள் நான்கு வகையின. நாடகம் என்பது முழுவதுங் கதை தழுவி வரும்

கூத்தாகும் - கதையாசிரியன் தன் உரையாகக் கூறவேண்டுவன வெல்லாம் கூறுதற்கு உரியன்; நாடக ஆசிரியன் நேர் நின்று விரித்துக் கூறுதற்கு உரியன் அல்லன் என்பன போன்று, இலக்கிய வகைகள் குறித்தும் இலக்கிய ஆசிரியர் திறம், நிலை குறித்தும் அடிகளார் பல சிந்தனைகளைக் கூறியுள்ளார்.

இலக்கிய ஆய்வுகளுடன் பல்துறை ஆய்வுகளையும் முறையாகச் செய்து முன்னோடியானவர் அடிகளாவர். வாழ்வின் தேவை தொடர்பான ஆய்வுக்குச் சிறுபொழுதும், சான்றோர் நெறி-அரும்பெரும் உண்மை அறியும் ஆய்வில் பெரும்பொழுதும் செலவிட அடிகளார் அறிவுறுத்தியுள்ளார்.

இலக்கிய நலம் சிறக்க வேண்டுமெனில் ஆய்வு நலம் சிறக்க வேண்டும். ஆய்வு முறைகளையும், ஆய்வு நோக்குகளையும் கூறி முறையான - உண்மையான நடுநிலை நல்லாய்வுக்கு அடிகளார் தாமே எடுத்துக்காட்டாகவும் முன்னோடியாகவும் விளங்கினார். நூலின் காலம், சூழல், பொருள் என்ற நிலைகளில் விருப்புவெறுப்பின்றி ஆய்வு அமைதல் வேண்டுமெனக் கூறும் அடிகளார், நூற்பொருள் பொய்ம்மை, மெய்ம்மைகள் கருத்தூன்றுவதே கடமை என்கிறார். பட்டறிவு முழுமைநிலை, அறிவு நுட்பம் ஆகியனவற்றை யொட்டியே ஆய்வு உணர்வு அமையும். திருவள்ளுவர் பிறப்பு, வளர்ப்பு, காளிதாசன் அருள் பெற்றுப் பாடினமை போன்றவை தொடர்பான சான்றுகள் ஏதுமில்லாமையால், அவை கருதாது அவர்தம் படைப்புகளை மட்டுமே கருத்திற் கொண்டு ஆய்வு செய்துள்ளார் அடிகளார். ஒப்பாய்வு முறைகளையும் இலக்கியத் துறைகளையும் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குத் தந்ததுடன், மேலை நாட்டு ஆய்வு முறைகளையும் தமிழுக்கு அறிமுகஞ் செய்தவர் அடிகளார்.

"ஓர் இலக்கியப் படைப்பை ஆராயுங்கால் மூன்று நிலைகளில் அடிகளார் ஆராய்கின்றார். முதலில் ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தில் இலக்கியத்தின் போக்கும் நோக்கும் எவ்வாறு இருந்தன என்பதைப் பொதுநிலையில் காணுகின்றார். அதன்பின் அக்குறிப்பிட்ட கால இலக்கியப் போக்கிற்கும் தாம்

ஆராயவிருக்கும் இலக்கியத்திற்கும் உள்ள இயைபு யாது எனத் தேடிக் காணுகிறார். மூன்றாம் நிலையில் அந்த இலக்கியம் தோன்றிய காலத்தின் வரலாற்றைப் பின்னணியாகக் கொண்டு விளக்கம் காண முயல்கிறார். இந்த வகையில் இலக்கியத்தைச் சமுதாய இயல் நோக்கில் கூர்ந்து காணும் திறனாய்வாளராக அடிகளார் காட்சியளிக்கிறார்".

அடிகளாரின் ஆய்வுப் பணியால், பழந்தமிழரின் பல்துறைப் பெருமைகளும், பழந்தமிழ் இலக்கியங்களின் பல்வகைச் சிறப்புகளும், மரபுகளும், தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகளும் புத்தொளி பெற்றுள்ளன.

"சொல்லப்பட்ட ஒவ்வொரு பொருளும் கிடைத்தற்கரிய முழு மாணிக்கங்களாமென்று நேர்மின்கள். இவ்வரும்பெறல் மாணிக்கங்களெல்லாம் வரன்முறையே தொகுத்த தொல்காப்பியம் விலைவரம்பு அறியாக் களஞ்சியம் என்று ஆராய்ந்து வியப்பெய்துமின்கள்" எனத் தொல்காப்பியச் சிறப்பையும், "சொற்சுவை, பொருட்சுவை நிரம்பித் தன்னைக் கற்பார்க்குப் பிறவிப் பிணியை அதற்கேதுவான அறியாமையையுந் தொலைத்துப் பேரின்பம் நல்குந் திறத்தது" எனத் திருவாசகத் திறனையும் கூறித் தமிழ் இலக்கண - இலக்கிய மேம்பாடுகளை நிறுவுகிறார். திருக்குறளைப் பொதுமறை எனவும், நல்லிசைப் புலமையால் இளங்கோவடிகள் திறன் சிறந்து விளங்குகிறதெனவும், சங்க காலப் பெண்பாற் புலவர்களின் திறம் உற்று நோக்குங்கால், அது ஆண்பாற் புலவர்களின் திறனுக்கு எவ்வகையிலும் எள்ளளவும் குறைந்ததில்லை என்பதையும், அடிகளார் ஆராய்ந்து நிறுவியுள்ளார். தமிழ் இலக்கியங்களின் திறனையும், தமிழ்ப் புலவோர் ஆற்றலையும் மெய்ப் பொருள் போற்றும் மேன்மையினையும் அடிகளார் தம் ஆராய்ச்சியால் உலகறியச் செய்யும் வகையில் நிலைநாட்டியுள்ளார். இலக்கியத் திறன்காணும் முயற்சியாலும், இலக்கியப் படைப்பு முயற்சியாலும் தமிழ் இலக்கிய மேம்பாட்டுக்கு அடிகளாரின் பங்களிப்பு அளவிடற்கரியதாக விளங்குகிறது.

அடிகளாரின் கடிதங்களும் நாட்குறிப்புகளும் கூட இலக்கியத்தரம் வாய்ந்தவை. வாழ்வியல் சடங்குகளுக்குச் செய்யும் பெரும்பொருள் செலவைத் தவிர்த்துத் தமிழர்கள், தமிழ் - ஆங்கில இலக்கிய நூல்களையும், திறனாய்வு நூல்களையும் வாங்குதல் வேண்டும் என்னும் எண்ணம் கொண்டிருந்தார்.

தம் தமிழ்ப் பணியின் பயன்பாட்டை முழுமையாகத் துய்க்கத் தெரியாத தமிழினம் பற்றிய அவரது கருத்தும் இங்கு நினைக்கத்தக்கது. "புதிய நன்முறைகளால் ஆராய்ந்து, ஆராய்ந்தனவற்றைத் தனித் தமிழ் உரைநடையில் அழகுற எழுதி, எழுதியனவற்றைத் தாமே பதிப்பித்து, வெளியிடுவார் எம்போற் பிறரிருந்தால் அவர்க்கு இவற்றால் உண்டாகும் உழைப்பும் பொருட்செலவும், வருத்தமுந் தெரியும். எம்போல் உழைக்கும் வெள்ளைக்காரர்க்கே எமது தொண்டின் அருமை தெரியும்" எனக் கூறும் அடிகளார் சொற்களிலிருந்து அடிகளாரின் பங்களிப்பு அருமை தெரியும்.

தம் நூல் முயற்சிகளுக்கு உரிய வகையில் உதவுவார் இல்லாமையையும், உடல்நலக் குறைவையும், தம் கடும் உழைப்பையும் குறிப்பிட்டுள்ள அடிகளார், அறிவு முயற்சி யாளரும் தொழில் முயற்சியாளரும் நூல் முயற்சிகளுக்குத் துணையாக வேண்டுமென்பதையும், தம் நூற் செய்திகளைப் பகிர்ந்து கொண்டவர்கள், நூற்பதிப்புக்கு உதவியவர்கள், நூல் இயல்புகளுக்கும் நூற் செய்திகளுக்கும் காரணமான சூழ்நிலைகள் ஆகியன தொடர்பான குறிப்புகளையும் தம் கடிதங்கள், நாட்குறிப்புகளில் எழுதி வைத்துள்ளார்.

தமிழ் மொழி - இன - இலக்கிய மேம்பாடுகளுக்கு எதிரான போலித் துறவிகளையும் பொல்லாத மடத் தலைவர்களையும் கடுமையாகச் சாடுகிறார். இலக்கியப் பணிகளிலும் சமயப் பணிகளிலும் இன மேம்பாட்டுப் பணிகளிலும் அடிகளார் நடுநிலை நெஞ்சங் கொண்டவராகவும் நன்றியுள்ளம் கொண்டவராகவும் விளங்கினார். ஆன்ம நேயச் செல்வமே அழியாதது; 'ஆகமங்கள் தமிழ்நாட்டில் உள்ள தமிழர்களால்

ஆயிரம் ஆண்டுகளாக எழுதப்பட்டனவே' எனத் தம் ஆராய்ச்சி உண்மைகளை அடிகளார் மறைக்காது - அஞ்சாது வெளிப்படுத்தும் இயல்பினர்.

"ஒத்துழையாமை இயக்கம் மும்முரமாக நடக்கின்றது. பெரும்பாலும் கல்கத்தா மாணவர் எல்லாரும் கல்லூரி செல்வதை நிறுத்திவிட்டனர். மகாத்மா காந்தியும், சி. ஆர். தாசும் வியத்தகு வேலைகள் செய்கின்றனர். கடவுள் அவர்களுக்கு அருள் புரியட்டும்" என்னும் அடிகளாரின் நாட் குறிப்பிலிருந்து, அவரது விடுதலை வேட்கையுணர்வும் சமுதாய வரலாற்றுக் குறிப்பெழுதும் திறமும் தெரிய வருகின்றன.

அடிகளாரின், தமிழ் மொழி - இன - இலக்கிய - சமய மேம்பாட்டுக் கோட்பாடுகளுக்கும் பணிகளுக்கும் பெருந் துணையாயிருந்தது செந்தமிழ்ச் செல்வி, ஞானசாகரம் (அறிவுக் கடல்) ஆகிய ஏடுகள். இவ்விதழ்க் கட்டுரைகளின் வாயிலாகவே, வள்ளுவர், தொல்காப்பியர், வள்ளலார் போன்றோர் திறம் காட்டியுள்ளார் அடிகளார். களவியலுரை, நன்னூல், திருவாசகம், குறள், நாலடியார், கபிலரகவல் ஆகிய நூற்சிறப்புகள் நன்கு எடுத்து விளக்கப்பட்டுள்ளன.

மொழிக்கல்வி மேம்பாடு குறித்துக் கூறும் அடிகளாரின் தொடர்கள் இங்குக் குறிக்கத்தக்கன. 'தனித்தமிழ் முயற்சியும் தமிழ் மொழி இலக்கண இலக்கியத் தேர்ச்சியும் தமிழ் மாணாக்கர்க்கு இன்றியமையாதவை. ஒரு மொழிப் புலமையை நன்கு முற்றுவித்துக் கொண்ட பின்னர், மற்றமொழிப் புலமையை முற்றுவிக்க முயல வேண்டும். ஆங்கிலப் புலமையும் தமிழ்ப் புலமையும் நம் மாணாக்கர்க்கு மிகுதிப்பட வேண்டும்' எனக் கூறும் அடிகளார், அயலவர் கல்வி முறைகளும் செய்திகளும் பேணா அடிமைகளை உண்டாக்கிவிடும். தமிழ் மக்களின் மேன்மைக்கான வழிவகை செய்யும் நிலையிலிருந்து வழிதவறச் செய்துவிடும் எனவும் எடுத்துக்காட்டி இடித்துரைக்கிறார்.

இடையறாத தம் எழுத்தாலும் பேச்சாலும் அடிகளார் தமிழ்ப் பகை - தமிழினப் பகை - தமிழ்ப் பண்பாட்டுப் பகை கடிந்தவர். தமிழ்மொழி நலன் காக்கவும், தமிழின உயர்வு சிறக்கவும், தமிழ்

இலக்கிய வளம் பெருக்கவும் அடிகளார் அயராது பாடுபட்டார். ஆராய்ச்சி முறைகளையும் நெறிகளையும் எடுத்துணர்த்திய அடிகளார், வாழ்வு மேம்பாட்டுக்கான வழிமுறைகளை வாழ்க்கைக் குறள்களாக வழங்கியுள்ளார். வலிமையான வாழ்வுக்கும் வளமான கருத்துகளுக்கும், தூய்மையான உணர்வுகளுக்கும் வேண்டிய செய்திகளைச் சிந்தித்தும், கண்டறிந்தும், படித்துணர்ந்தும் அவற்றைத் தனித்தமிழில் எழுதிக் காட்டினார். பழந்தமிழ் மொழி-இலக்கிய அருமையும் பெருமையும் கண்டறிந்த அடிகளார், புது இலக்கிய உத்திகளையும் உயர்திறங்களையும் தமிழில் அழகுற அறிமுகப்படுத்தினார். சமயம், மறை பொருளியல் போன்ற துறைகளாலும் தமிழ்மொழி - இன - இலக்கிய மேம்பாடுகளை எட்ட முடியும், எட்ட வேண்டும் என எடுத்துக் காட்டினார்.

மொழி - இன - இலக்கிய நிலைகளில் துணிவும் தூய்மையும், உண்மையும் விரும்பும் புத்துணர்வுப் போக்கினராக அடிகளார் விளங்கினார். அறியாமையை போக்கும் அறிவுநூற் கல்வியையும், அன்பின் நிலையினதான அருங்கலைப் படைப்புகளையும் அடிகளார் பெரிதும் போற்றினார்.

தமிழ் மொழி இன இலக்கிய மேம்பாட்டுக்கான செந்நெறிகளே இலக்கியப் பொருள்களாக இருக்கத்தக்கன. இயற்கை நிலையிலமைந்த பாடல்களே இனிய பாடல்கள். நற்கருத்துகளின் நல்லழகுத் தொகுப்பே பாட்டு. உண்மை நெறியால் அமைந்து, உண்மை நெறி போற்றும் உரையே உயரியதும் ஒப்புக் கொள்ள வேண்டியதுமான உரையாகும். நடுநிலை ஆய்வே நன்முறை ஆய்வு, மொழித் தூய்மை முதன்மைத் தேவை. இன வலிமை, உடலாலும் வாழ்வாலும் வளர்ச்சியாலும் கணக்கிடப்படும். அவற்றுக்கேற்ற உணவும் உணர்வும் இன்றியமையாதன. இலக்கிய மேம்பாடு, மொழியின் - இலக்கியத்தின் மேன்மை சார்ந்தது, மேன்மைக்கான வழி கூறுவது; வடிவமாய் விளங்குவது, என அனைத்து நிலையினும் அன்பார்ந்த அறிவும் அழகும் துலங்கச் செய்தவர் அடிகளார்.

அடிகளாரின் பணிகளாலும் பல்துறைப் படைப்புகளாலும் தமிழ் மொழி சிறந்தது. தமிழ் இனம் உயர்ந்தது; தமிழ் இலக்கியம் வளர்ந்தது; வளமானது என்பது உண்மை. தமிழ் மொழி - இன -

இலக்கிய மேம்பாட்டுக்கான அடிகளாரின் பங்களிப்பு மிகுதியானது மட்டுமன்று; தகுதியானதும் ஆகும். தமிழ்மொழி உள்ளவரை, தமிழ் இனம் உள்ளவரை, தமிழ் இலக்கியங்கள் இருக்கும்வரை, மறைமலை அடிகளாரின் பங்களிப்பு மகத்தானதாகவும் மதிப்பிற்குரியதாகவும் விளங்கும்; வெளிப்படும்.

*****

# அடிகளார் நூல்கள்
## (ஆண்டுகள் வரிசைப்படி)

1. திருவொற்றி முருகர் மும்மணிக்கோவை ......... 1900
2. சோமசுந்தரக் காஞ்சி (யாக்கம்) ......... 1901
3. பட்டினப்பாலை ஆராய்ச்சியுரை ......... 1903
4. முல்லைப்பாட்டு ஆராய்ச்சியுரை ......... 1903
5. சிந்தனைக் கட்டுரைகள் ......... 1905
6. சைவ சித்தாந்த ஞானபோதம் ......... 1906
7. பண்டைக்காலத் தமிழரும் ஆரியரும் ......... 1906
8. சாகுந்தல நாடகம் ......... 1907
9. குமுதவல்லி நாகநாட்டரசி ......... 1911
10. மரணத்தின்பின் மனிதர் நிலை ......... 1917
11. கோகிலாம்பாள் கடிதங்கள் ......... 1921
12. அறிவுரைக் கொத்து ......... 1921
13. பொருந்தும் உணவும் பொருந்தா உணவும் ......... 1921
14. யோகநித்திரை அல்லது அறிதுயில் ......... 1922
15. திருவாசக விரிவுரை ......... 1922
16. சாதி வேற்றுமையும் போலிச் சைவரும் ......... 1923
17. வேளாளர் நாகரிகம் ......... 1923
18. கடவுள் நிலைக்கு மாறான கொள்கைகள் சைவமாகா ......... 1926
19. பழந்தமிழ்க் கொள்கையே சைவ சமயம் ......... 1930
20. மாணிக்கவாசகர் வரலாறுங் காலமும் ......... 1930
21. மக்கள் நூறாண்டு உயிர் வாழ்க்கை ......... 1933
22. சிறுவர்க்கான செந்தமிழ் ......... 1934
23. சாகுந்தல நாடக ஆராய்ச்சி ......... 1934

24. தொலைவிலுணர்தல் ...... 1935
25. முற்கால பிற்காலத் தமிழ்ப் புலவோர் ...... 1937
26. மனித வசியம் அல்லது மனக்கவர்ச்சி ...... 1937
27. இந்தி பொதுமொழியா? ...... 1939
28. தமிழர் மதம் ...... 1948
29. அம்பிகாபதி அமராவதி ...... 1954
30. சோமசுந்தர நாயகர் வரலாறு ...... 1957
31. இளைஞர்க்கான இன்றமிழ் ...... 1957
32. திருக்குறள் ஆராய்ச்சி ...... 1958
33. சிவஞானபோத ஆராய்ச்சி ...... 1958
34. மறைமலையடிகளார் அறிவுரைக்கோவை ...... 1971
35. மறைமலையடிகளார் உரைமணிக்கோவை ...... 1972
36. மறைமலையடிகளார் பாமணிக்கோவை ...... 1976

## ஆங்கிலம்

37. Saiva siddhanta as a philosophy of practical knowledge ...... 1923
38. Ancient and Modern Tamil Poets ...... 1939
39. Can Hindi be the lingua franca of India? ...... 1969

# அடிகளார் நூல்கள்
## (பொருள்முறைப் பகுப்பின்படி)

### 1. செய்யுள் நூல்கள்

1. திருவொற்றி முருகர் மும்மணிக்கோவை
2. சோமசுந்தரக் காஞ்சி (யாக்கம்)
3. மறைமலையடிகளார் பாமணிக்கோவை

### 2. கட்டுரை நூல்கள்

1. சிந்தனைக் கட்டுரைகள்
2. அறிவுரைக் கொத்து
3. சிறுவர்க்கான செந்தமிழ்
4. முற்கால பிற்காலத் தமிழ்ப் புலவோர்
5. இந்தி பொதுமொழியா?
6. மறைமலையடிகளார் அறிவுரைக்கோவை
7. இளைஞர்க்கான இன்றமிழ்
8. மறைமலையடிகளார் உரைமணிக்கோவை
9. Saiva siddhanta as a philosophy of practical knowledge
10. Ancient and Modern Tamil Poets
11. Can Hindi be the lingua franca of India?

### 3. புதுக்கதை நூல்கள்

1. குமுதவல்லி நாகநாட்டரசி
2. கோகிலாம்பாள் கடிதங்கள்

### 4. நாடக நூல்கள்

1. சாகுந்தல நாடகம்
2. அம்பிகாபதி அமராவதி

## 5. ஆராய்ச்சி நூல்கள்

### அ. இலக்கிய ஆராய்ச்சி

1. முல்லைப்பாட்டு ஆராய்ச்சியுரை
2. பட்டினப்பாலை ஆராய்ச்சியுரை
3. குறிஞ்சிப்பாட்டாராய்ச்சி (கையெழுத்துப்படி)
4. திருக்குறள் ஆராய்ச்சி
5. சிவஞானபோத ஆராய்ச்சி
6. திருவாசக விரிவுரை
7. தமிழ்விடு தூது முகவுரை
8. சாகுந்தல நாடக ஆராய்ச்சி

### ஆ. கால - வரலாற்று ஆராய்ச்சி

1. பண்டைக்காலத் தமிழரும் ஆரியரும்
2. மாணிக்கவாசகர் வரலாறுங் காலமும்
3. முற்கால பிற்காலத் தமிழ்ப் புலவோர்
4. சோமசுந்தர நாயகர் வரலாறு

### இ. வாழ்வியல் ஆராய்ச்சி

1. பொருந்தும் உணவும் பொருந்தா உணவும்
2. வேளாளர் நாகரிகம்
3. மக்கள் நூறாண்டு உயிர் வாழ்க்கை

### ஈ. சமயம்

1. சைவ சித்தாந்த ஞானபோதம்
2. சாதி வேற்றுமையும் போலிச் சைவரும்
3. கடவுள் நிலைக்கு மாறான கொள்கைகள் சைவமாகா
4. பழந்தமிழ்க் கொள்கையே சைவ சமயம்
5. தமிழர் மதம்

### உ. மறைபொருளியல்

1. மரணத்தின்பின் மனிதர் நிலை
2. யோகநித்திரை அல்லது அறிதுயில்
3. தொலைவிலுணர்தல் என்னும் மறைபொருளுணர்ச்சி
4. மனித வசியம் அல்லது மனக்கவர்ச்சி

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை – 600 113
## அண்மை வெளியீடுகள்

| | |
|---|---|
| AN INTRODUCTION TO RELIGION AND PHILOSOPHY - TEVARAM AND TIVVIYAPPIRAPANTAM | 200.00 |
| பெ.நா. அப்புசுவாமியின் அறிவியல் கட்டுரைகள் தொகுதி-2 | 80.00 |
| தாய்நாட்டிலும் மேலை நாடுகளிலும் தமிழியல் ஆய்வு | 75.00 |
| ஜப்பானியக் காதல் பாடல்கள் | 75.00 |
| குறுந்தொகை - ஒரு நுண்ணாய்வு | 80.00 |
| பயிலரங்கக் கவிதைகள் | 18.00 |
| தமிழ் நாடகம் – நேற்றும் இன்றும் | 30.00 |
| நாடகமும் நாடகக் கம்பெனி அனுபவங்களும் | 60.00 |
| இராமாயணம் - தோற்பாவை நிழற்கூத்து | 125.00 |
| அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை தொகுதி-4 | 110.00 |
| நாட்டுப்புறக் கதைகளும் நாடக ஆக்கமும் | 30.00 |
| A BUNCH OF ESSAYS ON TAMIL LITERATURE | 30.00 |
| திருக்குறள் பூரணலிங்கம்பிள்ளை ஆங்கில மொழிபெயர்ப்பு | 100.00 |
| தொல்காப்பியப் பாவியல் கோட்பாடுகள் | 40.00 |
| ON TRANSLATING TIRUKKURAL | 50.00 |
| ஐங்குறுநூறு மூலமும் உரையும் | 85.00 |
| தனிநாயகம் அடிகளாரின் சொற்பொழிவுகள் | 40.00 |
| சொற்பிறப்பு - ஒப்பியல் தமிழ் அகராதி | 200.00 |
| THIRUVACHAGAM | 175.00 |
| இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் நாடகங்கள் | 75.00 |
| நானும் என் எழுத்தும் | 50.00 |
| தமிழர் கட்டிடக்கலை | 30.00 |
| THE NARRINAI FOUR HUNDRED | 175.00 |
| சர்வக்ஞர் உரைப்பா | 40.00 |
| தமிழில் ஆவணங்கள் | 75.00 |
| தமிழ் மேடை நாடக வரலாறு | 55.00 |
| பரதநாட்டிய சாஸ்திரம் | 150.00 |
| இந்திய விடுதலைக்குப் பின் தமிழிலக்கியச் செல்நெறிகள் | 55.00 |
| மேலை நோக்கில் தமிழ்க்கவிதை | 100.00 |
| SOUND CORRESPONDENCES BETWEEN TAMIL & JAPANESE | 35.00 |
| அயலகத் தமிழ்க்கலை, இலக்கியம், சமகாலச் செல்நெறிகள் | 125.00 |
| TAMIL LITERATURE AND INDIAN PHILOSOPHY | 200.00 |
| சதகத்திரட்டு தொகுதி-1 | 80.00 |
| தொல்காப்பிய இலக்கண மொழியியல் கோட்பாடுகள் | 70.00 |
| எழுத்திலக்கணக் கோட்பாடு | 70.00 |
| சதகத்திரட்டு தொகுதி-2 | 55.00 |
| தமிழ்ப் பண்பாடு | 25.00 |
| உலகத் தமிழாராய்ச்சி நிறுவனச் சுவடி விளக்க அட்டவணை-4 | 70.00 |
| சுவடிச்சுடர் | 120.00 |
| தமிழிலக்கியத்தில் ஊனமுற்றோர் | 45.00 |
| தமிழக மகளிரியல் | 80.00 |

---

Pub.No.431 **தமிழ் மொழி-இன-இலக்கிய மேம்பாடு** **20.00**

**மறைமலையடிகளாரின் பங்களிப்பு**